# ப்ராபட்டிக் ரெவலேஷன்

# லோகோஸ்:

# தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆரம்பம்

ஆபிரகாம்
ஈசாக்கு
யாக்கோபின்
தேவன்

காதுள்ளவன் கேட்கக்கடவன்!

# ப்ரபட்டிக் ரெவலேஷன்

கிம் மோ எஸ்டேட்
தபால் பெட்டி எண்.333
ரிப்பப்லிக் ஆப் சிங்கப்பூர் - 912742
இண்டர்நெட் வெப்ஸைட் முகவரி
http://propheticrevelation.net
இமெயில் முகவரி : richardgan@propheticrevelation.net
Fax : (65) 8902301

முதல் தமிழ் பதிப்பு - 2019, டிசம்பர், 5000 பதிப்புகள்




இந்தப் புத்தகம், உலகம் முழவதும், கடைசிகால செய்தியிலிருக்கும், விசுவாசிகளின் அன்பினாலும், தங்களின் காணிக்கைகளினாலும், உங்களுக்கு விநியோகம்பண்ணப்படுகிறது. இது 'பிராபடிக் ரெவலேஷன்' **(தீர்க்கதரிசன வெளிப்பாடு)** மூலமாக வெளியிட்டு ஜெபத்துடன் வழங்கப்படுகிறது. இந்த செய்தியில் அளிக்கப்பட்டுள்ள வார்த்தை உங்களுக்கு ஒரு ஜீவனுள்ள வெளிப்பாடாக மாறி நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சுமந்தவர்களாய் எல்லா மனிதர்களுக்கும் முன்பதாக நிற்கும்படியே இது வெளியிடப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தினுடைய கூடுதல் வெளியீடு கையிருப்பு இருக்கும் வரையில், "கடைசிகால செய்தியை" உண்மையாய் தேடுகிறவர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கப்படும்.

இப்புஸ்தகத்தை இலவசமாக அச்சிடுவதற்கும், விநியோகிப்பதற்கும் ரேமா ஜீவ ஊழியம் இப்பொருப்பெடுத்துள்ளது.

இந்த வேலைக்காக உங்களுடைய காணிக்கைகளை, கொடுப்பதற்க்கு முன்வருபவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கியின் எண்ணிற்கு அனுப்பவும்

NAME: SHADRACH KHANVILKAR JOSEPH
A/C NO: 1294155000083442
BANK: KARUR VYSYA BANK
BRANCH: KOVAIPUDUR BRANCH
IFSC CODE: KVBL0001294

இந்தப் புத்தகம் விற்கவோ அல்லது பணசேகரிப்புக்காகவோ பயன்படுத்தப்படக்கூடாது.

வெளியீடு : ரிச்சர்டு கேன்

# முன்னுரை

எண்பத்து நான்கு வயதான, யூதனாகிய மெண்டல் கிராவிட்ஸ் நியூயார்க் பட்டணத்தில் ஒரு கார் வந்து இடித்து நடைப்பாதையில் இரத்தம் ஒழுகிக்கொண்டிருக்கும் நிலையில் இருந்தார். உடனடியாக அங்கேயிருந்த ஒரு போலீஸ் அதிகாரி அந்த இடத்திற்கு வந்து அடிபட்டவரை பார்த்த பிறகு ஒரு ஆம்புலன்ஸ் மற்றும் ஒரு பாதிரியாரை அழைத்தார்.

அந்த பாதிரியார் முதலில் வந்து கிராவிட்ஸை குனிந்துப் பார்த்து "நீ பிதா குமாரன் பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறாயா?" என்று கேட்டார்.

கிராவிட்ஸ் தன் தலையை அண்ணார்ந்து பார்த்து கண்களை நன்றாக திறந்து, அங்கே சூழ்ந்திருந்த கூட்டத்தாரை பார்த்துக் கேட்டார்.

"நான் சாகும் நிலையில் இங்கே படுத்திருக்கிறேன், இவரோ என்னை பார்த்து விடுகதை கேட்கின்றார்".

**அறியாமை** என்பது இன்பம் அல்ல. புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் நாம் விசுவாசிக்கின்ற காரியத்தில் நிச்சயம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்பதை நமக்கு வலியுறுத்தியுள்ளார்கள். பரிசுத்த பவுல் அடிக்கடி தன் நிருபங்களில் "நீங்கள் அறியவில்லையா?" என்று கேட்டுள்ளார்.

இயேசுகிறிஸ்துவின்நாட்களில்பொய்யானஉபதேசங்கள்ஜனங்கள் வேதத்தை குறித்து அறியாமையே அதன் காரணமாயிற்று மற்றும் மனித உபதேசங்களையும், கட்டளைகளையும் கைக்கொண்டிருந்தன. (மத்தேயு 15:9) **மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து**, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். பின்பு இந்த நாளுக்குரிய கிறிஸ்தவர்களின் அறியாமை எவ்வளவு பெரிதாயிருக்கும்? கர்த்தராகிய இயேசுவின் கடிந்து கொள்ளுதலை இங்கே கவனிக்கவும். "நீங்கள் ஆராதிக்கின்றீர்கள், ஆனால் என்னவென்று தெரியாது". (யோவான் 4:22). நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.;

நண்பர்களே, நீங்கள் எதை ஆராதிக்கின்றீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அல்லது உங்கள் சபையின் பாரம்பரியங்களை மாத்திரம் பின்பற்றுகிறீர்களா? **உங்களுடைய தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனாயிருக்கிறாரா?**

இந்த புஸ்தகம் சுருக்கமாகவும், மிகத் தெளிவாகவும் **தேவத்துவத்தின் இரகசியத்தை விளக்குகின்றதே** அதின் நோக்கமாயிருக்கிறது (I தீமோத்தேயு 3:16) அன்றியும் **தேவபக்திக்குரிய** இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்.

சத்தியம் உங்கள் உள்ளத்தில் வெளிப்படும் வரை வேத வாக்கியங்களை விடாமுயற்சியுடன் தேடும்படி ஆர்வத்துடன் உங்களை வலியுறுத்துகிறேன். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து வெறும் 300 வருஷங்களுக்கு குறைவாக கிறிஸ்தவம் என்பது ஸ்தாபிக்கபட்ட அமைப்பாக மாறியது. மெய்யான ஒரு தேவனுடைய வெளிச்சமானது மனுஷர் தங்களுடைய அமைப்புகளையும், பாரம்பரியங்களுக்குரிய கோட்பாடுகளையும், உபதேசங்களையும் போதிப்பதினால் இருளடைந்தது.

அவர்கள் தேவ வார்த்தைக்கு பதிலாக மனித பாரம்பரியங்களைப் போதித்தனர். அதின் முடிவாக இப்பொழுது தேவத்துவத்தின் உபதேசத்தை குறித்ததான அநேக வியாக்கியானங்கள் உண்டு. அதிகபட்சமானவர்கள் தேவன் **திரித்துவத்தின் நபர்கள்** என்றும், ஒரு சிலரோ அவர் இரண்டு நபராக வசிக்கின்றார் என்றும் நம்புகின்றனர், மற்றவர்கள் அவர் ஒன்று என்று விசுவாசித்தாலும் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை (Devine) புறக்கணிக்கின்றனர். வேத காலத்தின் பரிசுத்தவான்கள் தேவனைப்பற்றி இப்படியும் அப்படியும் இருப்பாரென்று கணிக்கவில்லை. பின்னாட்களிலே வந்த விசுவாசிகள் தேவனுடைய வார்த்தைக்குரிய பார்வை இழந்து பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலிலிருந்து வழி விலகும்போது அதின் அஸ்திவார்த்தை புறக்கணித்தனர். அதற்கு பிறகு மனிதர்களின் சிந்தைகள் நிலை தொடங்கி தேவனைப் பற்றிய பலவிதமான கணிப்புகள் வர ஆரம்பித்தது.

அதிகபட்சமான யூதர்கள் சுவிசேஷம் ஆரம்பித்த அந்த முதல் நூற்றாண்டில் தங்களுடைய ஒரே தேவனுக்குரிய விசுவாசத்தை கடினமாக பற்றிப் பிடித்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவே, மேசியாவாக மாமிசத்தில் வெளிப்பட்ட தங்களுடைய தேவன்தான் என்பதைப் பார்க்கத் தவறின. ஆனால் அமைப்புக்குரிய கிறிஸ்தவமோ விசுவாசத்தில் ஒன்றும் மேன்மைப்படவில்லை.

அவர்கள் ஆபிரகாமின் ஒரே தேவனுக்குரிய விசுவாசத்தை பல தேவர்களுக்குரிய விசுவாசமாக மாற்றினார்கள். இவர்களுடைய

வேத பண்டிதர்கள் ஆபிரகாமின் தேவனை எடுத்து மூன்று பங்காக்கி, அதற்குப்பின் அவனுடைய வம்சத்தை அதை கிறிஸ்தவமாக்க முயன்று இரண்டாவது பாகத்தை கொடுத்தனர். இன்றும் அதை செய்து வருகின்றன. **தேவத்துவத்தின் அந்த ஒருமனப்பாட்டின்** உபதேசம் வேதம் என்று நம்புகின்ற ஒரு சில விசுவாசிகள் அதை பொதுவாக விசுவாசித்து ஏற்றுக்கொண்டிருந்தாலும் அநேகர்கள் அதை முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை.

நீங்கள் விசுவாசிக்கின்ற காரியத்தில் வெறும் திருப்தியடையாமல், உங்களுடைய நம்பிக்கை, உண்மையாகவே அது சத்தியம் என்பதில் நீங்கள் திருப்தியடைய வேண்டும்.

வேதத்தை விசுவாசிக்கின்ற அநேகர் தங்களுடைய பிரியமான போதகர்களின் (அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் அல்லது பிரசங்கியார்களின் தலை ஞானமே கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மிகவும் குறைவானவர்களே ஆவியில் நிரப்பப்பட்டு வார்த்தையில் திருப்தி அடைந்திருக்கின்றனர். கர்த்தருடைய ஆவியானவர் மெய்யாகவே உங்களுக்கு ஒன்றை வெளிப்படுத்தாமல் “நான் விசுவாசிக்கிறேன் என்று சொல்லாதீர்கள்” Iகொரி 2:14, Iகொரி 2:10, ரோமர் 3:4.

“ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்”.

“நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்”.

“அப்படியாக்கமாட்டாது, நீர் உம்முடைய வசனங்களில் நீதிபரராய் விளங்கவும், உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும் இப்படியாயிற்று என்று எழுதியிருக்கிறபடி, தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்லுவோமாக”.

வேத வசனத்தை நாம் கற்றுக் கொள்ளும்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபம்.

- ரிச்சர்ட். எல்.எஸ்.கேன்

# எழுத்தாளர்

திரித்துவ உபதேசத்தின் தவறுகளை வெளிப்படுத்தும் படி 1984-ல் இந்த புத்தகத்தை எழுதினேன். அந்த நேரம் முதற்கொண்டு இந்த வேதத்திற்குரிய வசனங்கள் (முக்கியமான சத்தியங்கள் திறந்தன) ஆனாலும், ஒரே தேவனைப்பற்றிய வெளிப்பாடு அவைகள் ஒரே நிலையில் இருக்கின்றன.

தேவன் தமது மணவாட்டியை பரிபூரணத்தில் நடத்தும்போது எல்லா கிறிஸ்தவமும் பரிசுத்தவான்களும் தேவனுடைய சத்தியத்தை ஆழமாக புரிந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகையால் இந்த எழுத்தாளர் மூல காரியங்களை சத்தியத்திற்குரிய விசுவாசிகளின் பிரயோஜனத்திற்கு ஏற்றவாறு திருத்தி அமைத்தார்.

இந்த கட்டுரையின் மூலமாக தேவத்துவம் மற்றும் கிறிஸ்துவுக்குள் தேவத்துவத்தின் இரகசியத்தை முடிந்தவரை புரிந்துகொள்ள வைக்கின்றது.

இடம் குறைவு நிமித்தம் திரித்துவத்திற்கு விரோதமான சகலவிவாதத்தையும் கொண்டுவர முயற்சி எடுக்கவில்லை.

***

உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். (யோவான் 4:23,24)

# லோகோஸ்: தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆரம்பம்

## சிருஷ்டிப்பு

(ஆதியாகமம் 1:1) ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பல கோடி வருஷங்களுக்கு முன்பதாக பூமியை தேவன் முதலாவதாக சிருஷ்டித்தார். அதன் பின்பு இப்பொழுது நாம் வாழும் பூமியானது மறுபடியும் சீரமைக்கப்பட்டதாய் இருக்கின்றது. பூமியானது மறுபடியும் புதுப்பிக்கப்படுவதற்கு முன்பதாக பாழடைந்ததாயும், வெறுமையானதாயும், இருள் சூழ்ந்ததாயும் இருந்தது. ஏன் அப்படியிருந்தது? அதன் காரணங்கள் என்ன?

## சரித்திர காலத்திற்கு முந்தின சகாப்தம்

தேவன் சிருஷ்டித்த வானம் பூமி காலவரிசைப் பட்டியலின் நிகழ்ச்சிகளைப் பற்றிய வேத சான்றுகளை நாம் ஆராய்ந்து பார்ப்போம். ஆதியாகமம் 1:1-ல் இருந்த ஆதியிலே என்ற காலகட்டத்தில் தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று நாம் விசுவாசிக்கின்றோம். அது கடந்த கோடிக்கணக்கான வருஷங்களாய் இருந்தது. இதுவே வானம் பூமி சிருஷ்டிக்கப்பட்ட ஆரம்பமாயிருந்தது. தீர்க்கதரிசி ஏசாயா சொன்னதுபோல (ஏசாயா 45:18) வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதை குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.

தொல்பொருள் ஆராய்ச்சிகளும் தொன்மங்களும் (Dinosarus) மனிதனைப் போல் நேர்நிமிர் சிருஷ்டிகளும் பூமியில் உலாவித்திரிந்ததாக ஒரு சகாப்தம் என்று அவர்கள் நமக்கு நிரூபித்திருக்கிறார்கள். அது ஆதியாகமம் 1:2-ல் சொல்லப்பட்டதுபோல இருந்த கோடிக்கணக்கான வருஷங்களின் சகாப்தமாய் இருந்தது. அது சரித்திர காலத்திற்கு முந்தைய சகாப்தமென்று பொதுவாக அறியப்பட்டிருக்கிறது.

## தூதர்களாகிய சிருஷ்டிப்புகள்

**சரித்திர காலத்திற்கு முந்தைய சகாப்தத்தில்** பூமியானது, நல்ல நிலையில் சிருஷ்டிக்கப்பட்டதாயும் மற்ற சிருஷ்டிக்கப்பட்டவைகளெல்லாம் இசைவாய் ஜீவிக்கும் ஒரு வாசஸ்தலமாயும் இருந்தது.

**இப்பொழுது வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த ஆரம்பத்திற்கு** முன்பதாக இருந்த தூதர்களின் ஆரம்பத்தைப்பார்ப்பதற்கு கடந்து போவோம். யோபு தேவனை கேள்வி கேட்டபோது அவனுடைய அறியாமையை இவ்வாறு வெளிப்படுத்தினார் (யோபு 38:4-7) நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? அதற்கு அளவு குறித்தவர் யார்? நீ அறிவாளியானால் அதை அறிவி.

அதின்மேல் நூல் போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு. அதின் ஆதாரங்கள் எதின்மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே.

ஆம் தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்தினபோது தேவ நட்சத்திரங்கள் (Angelic Messengers) தூதர்கள் அவரோடு கூட இருந்தன. ஒவ்வொரு வார்த்தை வித்தாகிய தேவனுடைய குமாரன்; தேவனுடைய நித்திய மனதிற்குள் சந்தோஷமாய் கெம்பீரித்துக் கொண்டிருந்தன. குறிப்பு:தேவன் அடிக்கடி “இல்லாதவைகளை ஏற்கனவே இருப்பது போல” பேசுகின்றவர். (ரோமர் 4:17).

தேவனுடைய சாயலிலிலும் ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு சிருஷ்டியும் நன்மை தீமைக்குரியதை தெரிந்து கொள்வதற்கு அதிகாரம் கொடுக்கப்படுகின்றன. ஒருவனைக் கூட ஒரு இயந்திர மனிதனை போல செயல்படுத்த உருவாக்கப்படவில்லை. தேவ சாயலின்படியும், ரூபத்தின்படியேயும் இருந்த தூதர்கள் தங்களுடைய தீர்மானத்தை குறித்ததான ஒரு பரீட்சை அவசியப்பட்டது. பூமியென்னும் கிரகத்தில் பரீட்சை பார்ப்பதற்கு மேலாக ஒரு நல்ல இடம் கிடையாது. தேவன் வாசம் செய்யும் ஒரு வாசஸ்தலமாக மாத்திரமே பரலோகம் இருந்ததே தவிர வேறு எந்தவொரு தீர்மானத்தை சேவிப்பதற்கல்ல.

## விழுந்து போன தூதர்கள்

ஆதாம் ஏவாளுக்காக சிருஷ்டிக்கப்பட்ட ஏதேன் தோட்டத்திற்குள் நுழைவதற்கு முன்பதாகவே சாத்தான் ஏற்கனவே விழுந்து போன ஒரு தூதனாக இருந்தான். பிரத்தியட்சமாய் முன்காலங்களிலே ஏதோ ஒரு குறிப்பிட்ட சமயத்தில் பரீட்சை பண்ணப்பட்டு வந்த பரீட்சையில் தவறியதால் அவன் கீழே தள்ளப்பட்டதை ஏசாயா 14:12,13,14 மற்றும்

எசேக்கியேல் 28:11-17-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இயேசு அவிசுவாசிக்கின்ற யூதர்களை இப்படிப் பார்த்து சொன்னார் (யோவான் 8:44) நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறார்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலை பாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். அப்படிச் சொல்லுவதினாலே, சர்ப்பத்தின் வித்தாகிய காயீனால் கொல்லப்பட்ட ஆபேலின் கொலையை பற்றியோ சர்ப்பம் ஏவாளுக்கு சொன்ன பொய்யை பற்றியோ அவர் குறிப்பிடவில்லை. ஆனால் சாத்தானுக்கு இதே பூமியில் இருந்த அவனுக்கு இருந்த சொந்த ஏதேன் தோட்டத்தில் வந்த முதல் பரீட்சையைக் கிறிஸ்து குறிப்பிட்டு காண்பிக்கின்றார்.

எசேக்கியேல் 28-ம் அதிகாரத்தில், தீர்க்கதரிசி எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கிறபோது தன்னைத்தானே மகிமைப்படுத்தி உயர்த்துகிறவனாய் இருந்த மகிமை விரும்புகின்ற மனிதனும் தீரு ராஜாவுமாய் இருந்தவனை மாத்திரம் கடிந்து கொள்ளாமல், சாத்தானைப் பற்றியும் சொன்னான், “நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்” (13வது வசனம்). ஆனால் இந்த தூத பிரபு விழுந்து போவதற்கு முன்பாக அவனுக்காக உருவாக்கப்பட்ட **ஏதேன் தோட்டம் அது தாவரத் தொகுதி நிறைந்த இடமாயிறாமல் விலையேறப்பட்ட கற்கள் நிறைந்த ஒரு தோட்டமாய் இருந்தது என்று ஜாக்கிரதையாக தயவு செய்து கவனிக்க வேண்டும்**. ஆதாமின் தோட்டமானது செடிகளும் கனி கொடுக்கும் மரங்களின் தோட்டமாயிருந்தது.

“ஏதேன்” என்னும் வார்த்தை “மகிழ்ச்சியும்” அல்லது “பரதீசு” என்று அர்த்தமாகும். அந்த விலையேறப் பெற்ற கற்கள் நிறைந்த அந்த தோட்டத்தில் உள்ளவைகள் எல்லாம் அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூபின்களிற்காகவே உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு விலையேறப்பட்ட கற்களும் அவனை மூடியிருந்தது. அதாவது அது அவனுடைய மகிமை. அவன் ஒரு உயர்ந்த அதிகாரத்தில் மேலோங்கி விளங்கினான் “நீ தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் இருந்தவன்” (14வது வசனம்). அநியாயம் அவனுக்குள் கண்டுபிடிக்கப்பட்ட நாள் முதல் மட்டும் அவன் வழிகளில் குறையற்று இருந்தான் (15ம் வசனம்), தன் பரீட்சையில் தோல்வியடைந்து விழுந்தான். அதற்குப்பின் லூசிபர் - விடிவெள்ளியின் மகன், தேவனுடைய எதிரியாகிய சாத்தானாய் மாறினான்.

இயேசு கிறிஸ்துவின் எழுபது சீஷர்கள் தங்களுடைய குறிபனிகளை வெற்றிகரமாய் முடித்த பின்பு அவரிடத்தில் திரும்பினபோது, அவர்

அவர்களிடத்தில் எச்சரித்து சாத்தான் வானத்திலிருந்து மின்னல் விழுவதைப் போல் நான் கண்டேன் என்று சொன்னபோது அவர்கள் மிகுந்த ஆனந்தத்திலே நிரப்பப்பட்டார்கள் (லூக்கா 10:17,18). பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து, ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள். அவர்களை நோக்கி; சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். ஆம் சாத்தான் தன்னை உயர்த்தி முதலாம் அதிகாரத்திலிருந்து விழுந்தான். “தரையிலே வெட்டுண்டு போனான், ஜாதிகளை ஈனப்படுத்தினான்” (ஏசாயா 14:12).

பூமியை புதுமையாக சீரமைத்த பிறகு, அதற்கு புதிய ஆளுனராகிய மனிதன், லூசிபருக்கு பதிலாக ஆளுகை செய்யும்படி நியமிக்கப்பட்டான். நியமிக்கப்பட்டபடியினாலே அவனுடன் தொடர்ந்து இவன் போராடி மீண்டும் தன்னுடைய ஆளுகைக்குள் இந்த பூமியாகிய கிரகத்தை கொண்டுவர வேண்டும் என்று விரும்புவதினாலேயே, அவன் முதலாவது இதன்மேல் வல்லமையும் அதிகாரமும் உடையவனாக இருந்தான் என்று பிரத்தியட்சமாய் தெரிகின்றது. அவனுடைய குறிக்கோளை எப்படியாவது அடைய வேண்டுமென்று எல்லா வழிகளையும் அதின் வழிமுறைகளையும் முயற்சி செய்து வருகின்றான். அவனுடைய பொய்களும் அக்கிரமத் திட்டங்களும் எல்லாவித பொய்களினாலும், வன்முறைகளினாலும் பூமி முழுவதையும் நிரப்பியுள்ளான். ஓ, அந்த பிசாசு! தேவன் சிருஷ்டித்த எல்லாவற்றையும் அழிப்பதற்காக புறப்பட்டு சென்றுள்ளான்! ஆம், இப்பொல்லாத காலத்தின் தேவனாய் இருக்கின்றான்!

ஆமாம் லூசிபர் சிருஷ்டிக்கப்பட்ட காலத்தில் குறையில்லாமல் இருந்தான். ஆனால் தனக்கு கொடுக்கப்பட்ட அந்தஸ்திலும் உடமைகளிலும் திருப்தியடையவில்லை தனக்கு கொடுக்கப்பட்ட ஸ்தானத்தில் அலுப்படைந்து உன்னதமானவருக்கு ஒப்பாகும்படி இரகசியமான புகழ் ஆர்வத்தை திட்டமிடத் தொடங்கினான் (ஏசாயா 14:14). நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன் உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. தேவன் அதை அறிந்து அவன் மேல் நடவடிக்கை எடுக்கத் தொடங்கினார். அந்த நேரத்தில் அவனுக்குள் அக்கிரமம் கண்டுபிடிக்கப்பட்டதும், அப்பொழுது பூமியிலிருந்த மிகப்பெரிய சிருஷ்டிகளுக்கிடையில் யுத்தத்தைத் தொடங்கினான். **கொன்று போடு! கொலை செய்! அழித்துப் போடு!** ஆகவே லூசிபர் ஒரு கொலைபாதகன் ஆனான்! தேவன் அவனை எதிர்த்து கேட்டபொழுது அவன் தன்னுடைய முதல் பொய்யை சொன்னான். அவன் சத்தியத்தில் நிலைக்கவில்லை, அது சரிதான். அவன் “ஆதிமுதலாய் கொலைபாதகனாய் இருந்து சத்தியத்தில் நிலைநிற்கவில்லை, ஏனெனில் அவனுக்குள் சத்தியமில்லை.

பூமியானது குழப்பமும் சீர்கெட்ட நிலமையிலிருந்து எல்லா சிருஷ்டிகளும் ஒன்றோடொன்று சண்டைப் போட்டு ஒருவரையொருவர் கொன்று, தங்களை சூழ்ந்திருந்த சுற்றுப்புறத்தில் பெருஞ்சேதம் கொண்டு வந்தன. இந்த பெருஞ்சேதங்களோடு சேர்ந்த அழுகிப்போன பிணங்கள் தட்பவெப்பநிலையில் மாற்றம் உண்டாகி பூமியும், நிலங்களும் பாழாய்க் கிடக்கும் ஒரு சூழ்நிலை உண்டாயிற்று. கடைசியாக தேவன் இந்த பரவி வரும் அழிவை நிறுத்தியாக வேண்டியதாயிற்று. அவர் என்ன செய்தாரென்றால் பூமி முழுவதையும் உறைபனி படலத்தினால் மூடினார். அதற்கு பின்பு விழுந்து போன தூத பிரபுவின் பூமியின் மேலிருந்த அதிகாரத்தையும் ஆளுகையையும் பறித்துப் போட்டார்.

சாத்தானுடைய பொல்லாத தலைமையைப் பின்பற்றின எல்லா தூதர்களும் அவனுடன் விழுந்தார்கள். அவர்கள் தங்களுடைய முதல் அதிகாரத்தை தங்களுடைய தெரிந்து கொள்ளுதலினாலே விட்டார்கள். தேவனுக்குவிசுவாசமாய்இருப்பதைநிரூபித்தமற்றதூதர்கள்அவருக்கு அவரின்வலதுகரமாகஅவருடையதிட்டங்களையும்தீர்மானங்களையும் நிறைவேற்றக்கூடியவர்களாக இருந்தனர். பெரிதான படித்த வேத பண்டிதர்கள் தேவ வார்த்தைக்குள் மறைந்திருக்கின்ற இதுபோன்ற தெளிவான சத்தியத்தைக் கண்டுபிடிக்க முடியாது. கற்றுக்கொள்ளக் கூடியவர்களுக்கும் பால் மறந்தவர்களுக்குமே தேவன் இந்த சத்தியத்தை வெளிப்படுத்துகின்றார். ஆம், தேவனுடைய வார்த்தையானது கற்பனைகளின்மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமும் நாம் சத்தியத்தை பெற்றுக் கொள்ளும்படி நமக்கு அருளப்பட்டுள்ளது.

இன்றைய நாளில் கூட, (பூமிக்கு வெறும் 6 ஆயிரம் வருஷம்தான் ஆகிறது என்று விசேஷமாய் விசுவாசிக்கக் கூடியவர்கள்) தொன்மாக்கள் (Dinosaurs) ஆதாமுடைய நாட்களிலிருந்ததாகவும் மற்றும் நோவாவின் நாட்களில் நடந்த ஜலப்பிரவாகத்தில் அழிந்து போனதாகவும் போதிக்கின்ற ஜனங்கள் உண்டு! அது மிகப்பெரிய முட்டாள்தனம்! அவைகள் (Dinosaurs) நோவாவின் நாட்களிலே இருந்திருக்குமென்றால், ஜலப்பிரவாகத்தில் பூமியை அழிப்பதற்கு முன்பாக தேவன் நோவாவிற்கு விசேஷமாக எல்லா மிருகங்களிலும் ஒவ்வொரு ஜோடியை உள்ளே கொண்டு வர வேண்டுமென்று கட்டளையிட்டபோது, அவைகள் ஏன் பேழைக்குள் இராமற்போனது? ஒருவேளை அவைகள் பேழைக்குள் கொண்டுவரப்பட்டிருக்குமானால் இந்த பூமியிலே அவைகள் ஏன் இப்பொழுது இருக்கவில்லை? (ஒரு சில பிரசங்கியார்கள் பெரிதான உருவமையின் காரணத்தின் நிமித்தம் ஜலப்பிரவாகத்திற்குப் பிறகு உணவின் பற்றாக்குறை நிமித்தமே கொஞ்ச கால மாத்திரம் வாழ்ந்து அழிந்திருக்கும் என்றே யூகிக்கின்றனர்). முதலாவது, அவ்வளவு பெரிதான தொன்மாக்களும்

(Dinosaurs) இராட்சத பறவைகளும் ஜோடி ஜோடியாக பேழைக்குள் இருந்திருக்கக் கூடுமோ? ஏறக்குறைய 4,400 வருஷங்களுக்கு முன்பதாக நடைபெற்ற நோவாவின் நாட்களின் ஜலப்பிரவாகம் இந்த தொன்மாக்கள் அழிந்து போவதற்கு காரணமாக இருக்க முடியாது.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 6000 வருஷத்துக்கு முன்பதாக ஆதாமின் சகாப்த காலத்தில் அல்ல, ஆனால் பல கோடி வருஷங்களுக்கு முன்பாக அவைகள் இருந்தது என்று நிரூபித்திருக்கின்றன. தொன்மாக்களும், நிலத்தில் வாழ்ந்த மற்ற சிருஷ்டிகளும் முற்றிலுமாய் அழிந்து போவதற்கு ஜலப்பிரவாகம் காரணமாய் இருந்திருக்குமானால் கடலில் வாழ்ந்து வந்த டிரிலோபைட்ஸ் (Trilobites) மற்றும் அர்த்ரோபோட்ஸ் (Arthoropods) போன்றவைகள் (இப்பொழுது இருக்கக் கூடிய திமிங்கலங்களையும் சுறாமீன்களையும் விட பல மடங்கு உருவத்தில் பெரியதாய் இருந்தவைகள்) ஜலப்பிரவாகத்திற்குப் பிறகும் தொடர்ந்து வாழ முடியவில்லை. இதற்குப் பதில் என்னவென்றால் அவைகள் ஆதாமின் சகாப்தத்திலல்ல, ஆனால் படி கோடி வருஷங்களுக்கு முன்பதாக இருந்தன. தேவன், சாத்தானையும் அவனுடைய விழுந்து போன தூதர்கள் மேலும் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்து பூமி முழுவதையும் பனிக்கட்டிகளால் உறையப்பண்ணினபோது அவைகள் அழிந்தன.

வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த அந்த ஆதியாகமம் 1:1 சான்றுதலின் கால அவகாசம் கொடுக்கப்படவில்லை. அந்த ஒரு வசனத்திற்குள் நடந்த எல்லா சம்பவத்தின் சான்றுகள் பதிவு செய்யப்படவில்லை. நிச்சயமாக அது கல்விமான்களுக்கும் ஞானிகளுக்கும் மறைப்பதற்காகவே அப்படி இருக்கிறது. மேல் சொல்லப்பட்ட எல்லாசம்பவங்களும் நடந்து முடிய அந்த கோடிக்கணக்கான ஆண்டுகள் கடந்து போயிருக்கும்.

ஆம்லூசிபருக்கு ஒரு ஏதேனிருந்தது. ஆதாமுக்கு ஒரு ஏதேனிருந்தது. மறுஜென்ம காலத்திலே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது மகிமையின் சிங்காசனத்தில் உட்கார்ந்து அவருடைய மணவாட்டியுடன் ஆளுகைசெய்யும்போது, அவருக்கு அவருடைய ஏதேன் இருக்கும் (ஏசாயா 65:18-25). வரும்காலத்திலே "புதிய வானம் மற்றும் புதிய பூமி" இந்த தற்காலிகமாகிய பூமியிலிருந்து சிருஷ்டிக்கப்படும்போது அது உண்மையான ஏதேனாயிருக்கும் (வெளி 21ம் அதிகாரம், 22ம் அதிகாரம்).

## புதுப்பிக்கப்படுதல்

ஆதியாகமம்-1,2-ல் சொல்லப்பட்ட பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின் மேல் இருள் இருந்தது தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.

சொல்லப்பட்ட குழப்பமான நிலை சாத்தான் விழுந்த பிறகே பூமிக்கு உண்டானது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கே ஒளி இல்லாமற்போனது. அது பாழாயும் கிடந்தது. கர்த்தருடைய ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். மற்றும் தேவன் பூமியை 6 நாட்களில் புதுப்பித்து அதை வாசம்பண்ணும் ஒரு இடமாக மாற்றினார். இந்த முறை மிருகங்கள் முன்பு இருந்ததைக் காட்டிலும் சிறிதாக சிருஷ்டிக்கப்பட்டன. ஆதியாகமம் 1:26. பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் **மனுஷனை** உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

மற்றும் பூமியில் வாழ்ந்து வந்த சகல ஜீவராசிகளின்மேலும் மனிதனுக்கு ஆளுகை கொடுக்கப்பட்டது. தேவனுடைய கைகளின் வேலையின்மேல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. தூதர்களைப் பார்க்கிலும் சற்று சிறியவனாக்கி கனத்தினாலும், மகிமையினாலும் முடி சூட்டப்பட்ட மனிதனின் சிருஷ்டிப்பின் ஆரம்பம் இதுவே.

## தேவத்துவம்

ஆதியாகமம் 1:26-ல் தேவன் பரிசுத்த ஆவி மற்றும் குமாரன் என்கிற இரண்டு வேறு தேவர்களை பேசிக் கொண்டு ஆலோசனை பண்ணிக் கொண்டிருக்கவில்லை. நாம் என்கிற வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டதினால் திரித்துவத்தை விசுவாசிக்கின்ற வேத சாஸ்திரிகள் நாம் அதை அப்படியே நம்பவேண்டுமென்று விரும்புகின்றனர். ஆனால் அதற்கு எதிர்மாறாக தேவன் மனிதனை தமது சாயலாக சிருஷ்டித்தார் என்று சொல்லி உடனடியாக வசனம் தொடர்கிறது. இந்த தனிப்பட்ட ஒருமை சொல்லின் சிருஷ்டிப்பின் வேலை, **ஒரு தெய்வீக நபர்** கூறியது என்பதை வலியுறுத்துகின்றது. (யோவான் 1:3,10 வாசிக்கவும்) அப்படியானால் தேவன் யாரிடத்தில் பேசிக் கொண்டிருந்தார்? நிச்சயமாக அவருடைய தூதர்களைத் தவிர வேறுயாருமில்லை. (ஏசாயா 6:1-8 பார்க்கவும்) மிகத் தாழ்மையுடன் அந்த பெரிதான தேவன், தமது எண்ணங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். தூதர்கள் சிருஷ்டிப்பதுமில்லை, சுவிசேஷத்தை அறிவிப்பதுமில்லை, ஆனால் தேவனுடைய வேலையில் கரிசனை உள்ளவர்களாய் இருக்கின்றன. அவர்கள் தேவனுடைய ஊழியர்களாயும், சில நேரங்களில் மனிதர்கள் போலவும் தங்களை அறிமுகப்படுத்துகின்றனர். (ஆதியாகமம் 18:22; 19:1; அப்போஸ்தலர் 1:10) தேவனுக்கு ஒருவனும் போதிப்பதோ, ஆலோசனை கொடுப்பதோ இல்லை. ஆனாலும் தேவன் தமது தூதர்களோடும் மனிதர்களோடும்

ஆலோசனை செய்கின்றார் (வாசிக்கவும். I பேதுரு 1:12; அப்போஸ்தலர் 10:1-8; ஆதியாகமம் 18:17-33; 19:1; சங்கீதம் 103:20).

**தேவனுடைய திரித்துவம்** என்று சொல்லக் கூடியது ஒன்றுமில்லை; **மூன்று நபர்கள்** அல்லது மூன்று **"ஒரே தேவன்"** என்று சொல்லக்கூடிய அதுபோன்ற ஒரு காரியமும் கிடையாது. **மூன்று தேவர்கள்** ஒன்றாய் இணைக்கப்பட்டு ஒரு தேவத்துவமோ அல்லது **"மூன்று தேவர்கள்" என்கிற தேவத்துவத்தைப்** பற்றியோ வேதம் போதித்ததில்லை. திரித்துவக்காரர்கள் அதை போதித்தும் மேலும் இரகசியம் என்றும் சொல்கின்றனர். நிச்சயமாகவே தேவனைப்பற்றி தங்களுடைய சொந்த அறிவின்படி போதிக்கும்போது அது எப்பொழுதும் இரகசியமாகவேதான் இருக்கும். முதலாவது "இரகசியம்" என்று இவர்கள் சொல்லக்கூடிய இரகசியமான கோட்பாடு அளவிற்குட்பட்டு சிந்தைகளினால் உருவாக்கப்பட்டு எல்லையற்று தேவத்துவத்திற்குள் நுழைகின்றனர். கீத் எல். புரூக்ஸ் என்ற திரித்துவக் காரனின் ஒரு கோட்பாடு இப்படி சொல்லுகின்றது.

"திரித்துவத்தின் உபதேசம் ஏற்றுக்கொள்ளப்படதக்கதாய் இல்லாவிட்டால், கிறிஸ்து தெய்வீகமானவர் அல்ல. மேலும் அவருடைய மீட்பின் வேலையின் குணாதிசயமானது ஒன்றுமில்லாமல் குறைவாய் எண்ணப்படுகின்றது. திரித்துவம் இருக்குமானால்... இயேசுவுக்கும் பரிசுத்த ஆவிக்கும், ஆராதனை தனித்தனியாக செலுத்தாமலிருந்தால், பின்பு தேவத்துவத்தில் இருக்கக்கூடிய மூன்றில் இரண்டு பங்குக்குரிய ஆராதனை நிறுத்தி வைக்கப்படுகின்றது".

இந்த "ஒரு தேவத்துவத்தில் இருக்கின்ற மூன்று தேவர்களின்" நம்பிக்கை, யூதர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும், அநேக சத்தியத்தை தேடுகின்றவர்களுக்கும், ஒரு மிகப் பெரிய இடறலாய் இருக்கின்றது. ஆனாலும், இந்த இரகசியம் என்று சொல்லப்படக்கூடியதை விசுவாசிக்கும்படி கற்றுக் கொண்டு அநேக கிறிஸ்தவர்கள் பெருமையாக ஆனால் முட்டாள்தனமாக இப்படி சொல்லி அதை ஆதரிக்கின்றனர் :

"திரித்துவம் என்பது கிறிஸ்துவ மதத்திற்குரிய அடிப்படை கட்டுரை. அதை புறக்கணிக்கின்றவன், தன் ஆத்துமாவை இழக்கக்கூடும். ஆகவே, அதை புரிந்து கொள்ள போராடுகிறவன், தன்னுடைய கேள்வி ஞானத்தை இழக்கக்கூடும்".

கிறிஸ்து இயேசுவின் சரீரத்தில் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் வாசம் செய்கின்றது என்று கொலோசெயர் 1:19, 2:9, எளிமையாய் சொல்லப்பட்ட வேத வசனங்களுக்கு நேரடி முரண்பாடாக திரித்துவ தேவனுக்குரிய போதனைகள் இருக்கின்றன. **"தேவன் என்பது எதுவோ" அதின் முழுமையானவராக அவர் இருக்கின்றார்**. அவர் தேவத்துவத்தின் மூன்றில் ஒரு பங்காய் மாத்திரம் இருக்கின்றார் என்று வேதத்தில் அப்படிப்பட்ட போதனை

ஒன்றுமில்லை. ஒரு சிலர், பரலோகத்தில் மூன்று சிங்காசனங்கள் இருக்கின்றன என்றும் அங்கே குமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காரக்கூடியதோ, அல்லது இப்பொழுதும் உட்கார்ந்து கொண்டிருக்கிறதோ என்று சொல்லி விசுவாசிக்கின்றனர். அதுபோன்ற ஜனங்கள் தேவ ஆவியை ஒரு மனித ரூபத்திற்கோ அல்லது சரீரத்திற்கோ குறிப்பிட்டு குறைக்கின்றனர். யோவான் சாட்சி இப்படி கொடுத்தார்: (யோவான் 1:18)

அது சரிதான் தேவனை ஒருவனும் எப்பொழுதும் கண்டதில்லை காணப்போவதுமில்லை. (1 தீமோத்தேயு 6:16)

**தேவன் ஆவியாய் இருக்கின்றார்.** காணக்கூடாத ஒளியில் அவர் வாசம் செய்து தன்னை அவர் மரிக்கும்படி தெரிந்துகொண்டபடியினால், அவர்காணக்கூடாதவராக இருக்கின்றார் (ஏசாயா 45:15, கொலோசேயர் 1:5)

ஸ்தேவான் கல்லெறியப்பட்டு சாகும்நிலையில், இயேசுவை தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்பதை நான் காண்கிறேன் என்று சொன்னதினால், அவன் தேவனை பார்த்தான் என்று சொன்னதினால், அவன் தேவனை பார்த்தான் என்று சொல்லி ஒரு சிலர் நினைக்கலாம் (அப்போஸ்தலர் 7:55,56 "வலது பாரிசம்" என்கிற சொல், ஆங்கிலத்தில் "The right hand of God" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் தேவனுடைய வலதுகரம் என்று அர்த்தமாகும். பாரிசம் என்று சொல்லும்போது, அது ஒரு ஸ்தலத்தை, இடத்தை காண்பிக்கின்றது). வலதுபாரிசம் என்கின்ற சொல், தேவனுடைய மகிமையையும் வல்லமையையும், வெளிப்படுத்துகின்றது. அது மாத்திரமன்றி, அவருடைய இரக்கம், கிருபை மற்றும் அதிகாரத்தை காண்பிக்கின்றது. ஆனால், அவர் இடதுகரம் அவருடைய நியாயத்தீர்ப்பை காண்பிக்கின்றது. யாத்திராகமம் 15:6 மற்றும் மத்தேயு 25:31 to 46 நன்றாகப்புரிந்துகொள்ளும்படி, தயவுசெய்துவாசிக்கவும், பலதேவர்கள் இருக்கின்றனர் என்று நம்பக்கூடியவர்கள், தேவனை ஸ்தேவான் கண்டான் என்று சொல்லும்போது அவர்கள் விசுவாசிக்கின்றோம் என்று சொல்லக்கூடிய அதே வசனங்களுக்கு மாறாக சொல்லுகின்றன. (யோவான் 1:18, 1 தீமோத்தேயு 6:16, கொலோசியர் 1:15 etc.)

வேதத்திலே எப்பொழுதெல்லாம் இயேசு நின்றதுபோல காண்பிக்கிறதோ, அப்போதெல்லாம் அவர் பரிந்து பேசுகின்ற பிரதான ஆசாரியனுடைய ஸ்தானத்தில் அல்லது அலுவலில் இருப்பதைக் காண்பிக்கின்றது. இவையெல்லாம் நம்முடைய இந்த நாட்களிலே, உலகத்தை நியாயந்தீர்க்கும்படி மகிமையின் சிங்காசனத்திலே அவர் உட்காரும்போது, நியாயாதிபதியாவும், இராஜாவாகவும் இருப்பார்.

ஆகவே அவனுடைய தரிசனத்திலே, ஸ்தேவான், இயேசு தேவனுடைய பிரதான ஆசாரியனாக முழு அதிகாரத்துடனும், தேவனுடைய

வல்லமையினாலும் நிரம்பி இருந்ததை கண்டான். (வெளி 1:13, மத்தேயு 28:18) அவர் தேவனுடைய இரக்கமும், கிருபையுமாய் இருந்தார்.

திரித்துவம் பாபிலோனின் சமய கொள்கையாகும். அது கி.பி.325-ல் நடைபெற்ற நிசாயா மாகாநாட்டில் அஸ்திபார உபதேசமாக எண்ணப்பட்டது. அங்கேயிருந்த சர்ச் ஆப் ரோம் – மகா ரகசிய பாபிலோன், பூமியிலுள்ள எல்லா அருவருப்புகளுக்கும், வேசிகளுக்கும் தாயாக இருக்கின்றாள். ரோம் சபை தேவனை மூன்று துண்டாக மாத்திரம் போடவில்லை, விக்கிரக ஆராதனை செய்த ரோமர்கள், மூதாதையர்களைப் போல பரிசுத்தவான்களைப் பரிந்து பேசக்கூடியவர்களாக மாற்றினார்கள். மெய்யான கொள்கைகளை கைவிட்ட கிறிஸ்தவம் இருளான ஆலோசணையை மாத்திரமே கொடுக்க முடிந்தது. அது மிகவும் துக்கமான ஒரு விஷயம். ஆனால் உண்மை. இன்றைய அநேக சபையின் போதனைகளும், உபதேசங்களும், மாமிச சிந்தனைகளாலும், தங்களுடைய பிரசங்கியார்களின் சொந்த அறிவினால் உண்டானதாய் இருக்கின்றதே ஒழிய அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளின் பொதுவாய் விசுவாசிக்கப்பட்ட மூல வார்த்தைகளாலல்ல.

தத்துவ ஞானத்தை சார்ந்து, விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்தைகளில் திரித்துவம் வடிவமைக்கப்பட்டது. வேத வசனங்கள் தங்களுடைய பாரம்பரிய சிந்தைகளுக்கு ஏதுவாக இருக்கும்படி புறக்கணிக்கப்பட்டதும், மறக்கப்பட்டதுமாய் இருந்தது. தவறாக இருப்பதை சரியாக ஏற்றுக்கொண்டு உண்மையான ஞானத்தை தவறு என்று சொல்லி முகத்தை சுழிக்கின்றனர்.

இதை கவனமாகப் பார்ப்போம், இயேசுவின் தகப்பன் யார்? மரியாள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பம் தரிக்கப்பட்டாள் என்று மத்தேயு 1:18-ல் சொல்லவில்லையா? (அதாவது, ஜீவனை உற்பத்தி பண்ணும் வேளை பரிசுத்த ஆவியானவர் எடுத்துக் கொண்டார்?) ஆனால் இயேசு, தேவன்தான் அவருடைய தகப்பன் என்று சொன்னார். பின்பு தகப்பனாகிய தேவனும் பரிசுத்த ஆவியான தேவனும் (கிறிஸ்தவர்கள் அடிக்கடி பயன்படுத்திய சொல்) ஒரே ஆவியும், ஒரே நபராக இருக்க வேண்டும். இல்லையென்றால், இயேசுவுக்கு இரண்டு தகப்பன்கள் இருந்தாகச் சொல்ல வேண்டும்.

(கவனத்திற்கு : வேதத்தில், பரிசுத்த ஆவியாகிய தேவனென்றும், குமாரனாகிய தேவனென்றும் அதுபோன்ற சொற்கள் இல்லை. இச்சொற்கள் தேவத்துவத்திற்குள் இரண்டு நபர்களை பிரித்து காண்பிப்பதற்காக மெய்யான கொள்கைகளை கைவிட்டு திரித்துவர்கள் பயன்படுத்துகிறார்கள்).

எபேசியர் 4:4, யோவான் 4:24-லிலும் ஒரே **ஆவிதான்** உண்டு என்று தெளிவாக உள்ளது. இயேசு கிறிஸ்துவும் கூட, அவரும் பிதாவும் ஒன்றாக இருக்கின்றார்கள் என்று சொன்னார். அதாவது, இருவரும்

இரண்டு நபர்களாய் இராமல், **ஒரே** நபராய் இருக்கின்றனர் என்பதை காண்பிக்கின்றார், ஆகவே **ஒரே தேவன்தான்** உண்டு!

(எபேசியர் 4:6) எல்லோருக்கும் ஒரே தேவனும் ஒரே பிதாவும் உண்டு; அவர் எல்லோர்மேலும், எல்லோரோடும், உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர்.

(I கொரிந்தியர் 8:6) பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.

(உபாகமம் 6:4) இஸ்ரவேலே, கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.

(மாற்கு 12:29) தேவன் எல்லாவற்றையும் தமது சொந்த நல் விருப்பத்திற்காகவே சிருஷ்டித்தார் (வெளி 4:13) சர்வ ஞானியாய் இருந்தபடியினால் எல்லாவற்றையும் தமது சொந்த சித்தத்தின் ஆலோசனையில் தமக்காகத் தீர்மானித்தார். (எபேசியர் 1:11) திரித்துவத்தின் சித்தத்தின்படியல்ல. வெளி 1:8 இப்படி சொல்கின்றது, "இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ளவர்", ஆனால் "இருந்தவர்களும், இருக்கிறவர்களும், வருகிறவர்களுமாகிய சர்வ வல்லமையுள்ளவர்கள்" என்று சொல்லப்படவில்லை. ஆகவே இது மூன்று தேவர்களுக்குறியதல்ல, ஆனால் ஒரே தேவனைப்பற்றிய வெளிப்பாடு ஒரே தேவன் அவர்களுக்குள்ளாக அல்ல, தமக்குள்ளாக ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தார். ஒரே தேவன் தான் உண்டு.

## அந்த நித்திய ஆவி

நித்தியம் என்பது சர்வ வல்லமையுள்ளவரின் ஆவியே தவிர வேறொன்றுமில்லை. அவர் மிக உயர்ந்தவரும் எல்லாவற்றிலும் போதுமானவருமாய் இருக்கின்றார். (ஏசாயா 57:15), (எபிரேயர் 9:14) இந்த உயரமும் கெம்பீரமானவரே ஏலோஹிம், ஆனால் எபிரேயர் பாஷையில் அவர் வேறு அநேக பெயர்களால் அறியப்பட்டுள்ளார். **ஏலோஹிம் என்னும் வார்த்தை பன்மையிலிருந்தாலும், அது நபரின் பன்மையை காண்பிக்காமல், அவருடைய மிக உயரமான மாட்சிமையையும், மகத்துவத்தையும் காண்பிக்கின்றது.** அவருக்குள்ளாக பலவிதமான குணாதிசயங்களான பிதாத்துவம், சிருஷ்டிகர், காக்கின்றவர், குணமளிக்கின்றவர், இரட்சகர் போன்றவைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இப்பொழுது ஏலோஹிமின் தெய்வீக மாட்சிமை அவருடைய தெய்வீகத் தன்மையை அடையாளம் காட்டுகின்றது. ஏலோஹிம் என்கிற வார்த்தையுடன் யாவே

**(Yahweh, YHWH)** இணைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. **யாவே** என்றால் **“தனக்குத்தானே போதுமானவர்”** அல்லது **“தனக்குள் இருக்கும் நித்தியத்தில் தாமே வசிப்பவர்”**. யாவே பூமியின் மண்ணினாலே உருவாக்கின மனிதனோடு தன்னை ஒப்பிடுகிறார். ஆகவே **தியோபனி** (Theophany) ஆகிய **வார்த்தையினால் சரீரத்தில் ஏலோஹிம் தன்னைத்தானே யாவேயாக அறிவித்தார்**. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் பிள்ளைகளை விடுதலையாக்கும்படி, தேவன் புறப்படும்போது, யாவே என்பது உடன்படிக்கை பெயராகிற்று. (யாத்திராகமம் 6:13) இது ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்தமாக இருந்தது. (ஆதியாகமம் 15:13-16), எண்ணாகமம் 6:22-27 வாசிக்கவும், புதிய ஏற்பாட்டிலே யாவே, மாமிச சரீரத்தில் தன்னை வெளிப்படுத்தும்படி வந்தபோது, **யேஷூவா** என்னும் பெயர் எடுத்தார்.

குறிப்பு : அவர்களுடைய அநேக தேவர்களின் மகத்துவத்தை காண்பிக்கும்படி, பாகால் ஆராதனை செய்கின்றவர்கள், தங்களுடைய பாகால் ஆராதனையில் ஏலோஹிம் என்கிற வார்த்தையை அவர்களுடைய அநேக விக்கிரங்களுக்குள்ளே அதையே பயன்படுத்துகின்றன (பன்மை). எபிரேயர் மற்றும் கிரேக்க வார்த்தைகள் மேல் மட்டும் மனதை வைத்திருக்கின்ற கிறிஸ்தவர்கள் ஏலோஹிம் என்னும் வார்த்தை தேவர்கள் என்னும் அர்த்தம் உடையதாய் இருக்கின்றது என்று தெளிவாக காண்பிக்கின்றது என்று பலமாக முடிவு செய்துள்ளனர். அது உண்மையாக இருக்குமானால், தேவன் மோசேயினால் பேசின வார்த்தைகளை கவனிக்க வேண்டும்.

செய்யும்படி நான் அவர்களுக்கு கட்டளையிட்டவைகளினின்று மிக வேகமாய் சோரம் போனார்கள். பொன்னை உருக்கி கன்றுக்குட்டியை வளர்த்தார்கள். அவர்கள் அதைத் தொழுது அதற்குப் பலி செலுத்துகிறார்கள். அதனிடம், “எங்களை எகிப்திலிருந்து வழிநடத்தின தெய்வங்கள் இவையே என்றனர்” என்றார். (எபிரேயர் பாஷையில் தெய்வங்கள் என்னும் வார்த்தைக்கு ஏலோஹிம் என்று சொல்லப்பட்டிருக்கிறது) (யாத்திரகமம் 32:8)

அங்கே ஒரேயொரு தங்கக்காளை இருந்தது என்று வெளிப்படையாக தேவன் அறிந்திருந்தார். பின்மாற்றம் அடைந்த இஸ்ரவேலர்கள், ஒரேயொரு பொற்காளை உருவாக்கி அதை ஆராதித்தனர். (யாத்திரகமம் 32:4) ஒரு தங்கக் காளைக்கு மேலாக அங்கே வேறு காளைகள் இருந்தது என்று விசுவாசிக்கத் தக்கதாக கிறிஸ்தவர்கள் குருடாக இருக்க முடியுமா?

வார்த்தை வாசிப்பது நல்லது, ஆனால் வசனத்தை வாசிப்பதினால் சத்தியத்தின் மேல் உள்ள வெளிப்பாட்டுக்குள் அது எப்பொழுதும் நம்மை வழி நடத்தாது. தமது வார்த்தையை பரிசுத்த ஆவியானவர் வெளிச்சம் ஆக்கும்போது. சத்தியமானது வெளிப்பாட்டினாலேயே மாத்திரம் வருகின்றது.

நித்திய அக்கினிக்குள் அக்கிரமக்காரர்கள் என்றென்றும் துன்பப்படுவார்கள் என்று இரண்டாம் மரணத்தின் போதனையை கருதுவோம். நித்தியம் (கிரேக்க-அயோனியோஸ்) அல்லது முடிவில்லாதது என்கிற வார்த்தை அக்னியே விவரிப்பதை அநேக வேத பண்டிதர்களும், கிறிஸ்தவர்களும் அக்கிரமம் செய்யும் ஆத்துமாக்கள் என்றென்றும் முடிவில்லாமல் எரிவார்கள் என்று விசுவாசிக்க காரணமாயிற்று. இது வேதத்துக்குள் உட்பட்ட போதனை இருக்குமானால், அப்பொழுது மரணம் என்பது மரணமாகவே இருக்க முடியாது. ஆனால் அக்கிரமக்காரர்கள் எப்படி என்றென்றும் அறிவில்லாமல் அக்னி கடலிலே இருக்க முடியும்? அக்கிரமக்காரர்களின் ஆத்துமாக்கள் தேவனுடைய ஆவியில்லாமல் எப்படி என்றென்றும் இருக்க முடியும்?

நிச்சயமாக, பரிசுத்த தேவனுடைய ஆவியில்லாமல் ஜீவன் என்பது இல்லை, என்றென்றும் குறைவாக ஜீவிப்பதும் இல்லை. மரணம் என்பது மரணம். அது ஜீவன் முடியும் இடம். எல்லா அக்கிரமக்கார ஆத்துமாக்களின் நிலை கீழ்க்கண்ட வசனத்தில் காண்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 21:8 ல் பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார். ஒவ்வொரு அக்கிரமம் செய்த ஆத்துமா எவ்வளவு காலம் அக்கினிக்கடலிலே எரிய வேண்டும் என்பது இஸ்ரவேலின் பரிசுத்தம் உள்ளவரின் நீதியுள்ள நியாயத் தீர்ப்பில் அடங்கும்.

இப்பொழுது ஒன்றை வலியுறுத்தி சொல்லுகிறேன். நித்திய பரிசுத்த ஆவி **ஏலோஹிமைத்** தவிர கடந்துபோனது நித்தியத்தின் ஒன்றுமே வியாபித்ததில்லை. என்னைத்தவிர வேறு தேவன் இல்லையென்று ஏசாயாவிற்கு அவர் பேசி, அதை அவன் அநேக இடங்களில் பதிவு செய்துள்ளான். (ஏசாயா 43,44வது அதிகாரங்களை வாசிக்கவும்).

அப்போஸ்தலர் 17:28ல் ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (ஏசாயா 43:10,11 இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்).

**நித்தியம் என்பது காலத்திலும், இடத்திலும் முடிவில்லாதிருப்பது**. அதற்கு ஆரம்பமும், முடிவும் இல்லை. இது இருந்தது, இருக்கின்றது, இனி இருப்பது. ஆகவே, **இயேசுவை தேவனுடைய நித்திய குமாரனென்று சொல்லுவது முரண்பாடாய்**

**இருக்கின்றது**, ஏனெனில் எல்லா குமாரனுக்கும் ஒரு ஆரம்பம் இருக்கின்றது. நித்திய குமாரன் என்னும் சொல் திரித்துவக்காரர்களின் கண்டுபிடிப்பு. **இயேசு கிறிஸ்து தேவனால் ஜநிப்பிக்கப்பட்ட குமாரன்** (எபிரேயர் 1:6 வாசிக்கவும்) சங்கீதம் 2:7 ல் உள்ள தீர்க்கதரிசன வார்த்தையைப் பாருங்கள், "இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்,"

"இந்த நாள்" அல்லது "இன்று" என்கிற வார்த்தைக்கு நித்திய தொடர்பு கிடையாது. அது சமயத்தைப் பற்றிப் பேசுகின்றது. ஆனால் சர்வ வல்லமையின் ஆவி, "நித்தியமாக தாபரிக்கின்றார்". அவரை அளவுபடுத்தக்கூடிய சரீரமோ, ரூபமோ இல்லை, அவர் சர்வ வல்லவராகவும், சர்வ ஞானியாகவும் இருப்பதினால், அவரை சர்வ வியாபியாக வைக்கின்றது. அவர் அதரிசனமானவர். (கொலோசியர் 1:15 தீமோத்தேயு 1-;17, 6:16). ஒரு மனிதனும் அவரைக் கண்டு உயிரோடு இருக்க முடியாது (யோவான் 1:18, யாத்திராகமம் 33:20). அப்படியானால் எப்படி திரித்துக்காரர்கள் தேவன், வானத்தில் சிங்காசனத்தில் உட்கார்ந்து இருப்பதும், பிதாவை பார்க்க முடியும் என்று விசுவாசிக்கக்கூடும்? எப்படி ஜோசப் ஸ்மித் (மார்மோன் விசுவாசத் தந்தை) பிதாவாகிய தேவனையும், இயேசு கிறிஸ்துவையும் பார்த்ததாக சொல்ல முடியும்?

ஒரு சிலர் பின்பு மோசே, யோசுவா, ஆபிரகாம் பழைய ஏற்பாட்டின் மற்ற பரிசுத்தவான் எல்லாம் தேவனோடு முகம் முகமாய் பார்த்து பேசினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கும் போது யாரை அவர்கள் பார்த்து பேசினார்கள்? (எடுத்துக்காட்டாக வாசிக்கவும், யாத்திராகமம் 33:11, 24:9-11. யோசுவா 5:13-15. ஆதியாகமம் 17:1, etc.)

நாம் இதன் பதிலுக்காக அநேக வசனங்களை பார்த்து பல கோணங்களில் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இப்பொழுது நாம் அறிந்தபடி வேத வசனங்கள் அடிக்கடி சத்தியத்தை மறைக்கின்ற, அதே நேரத்தில் சத்தியத்தை வெளிபடுத்துகின்ற தேவனுடைய தெய்வீகத் திட்டமாய் இருக்கக்கூடிய இரண்டு விதமான சூழ்நிலையாய் இருக்கின்ற தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும் பயன்படுத்தியுள்ள குறிப்பிட்ட ஒரு சில சொற்கள், மாமிச மனிதனால் தேட முடியாதவைகளாகிய **தேவனுடைய ஆழமான காரியங்கள்** எழுத்து வடிவத்தில் இருக்கின்ற வார்த்தைகுள் மறைக்கப்பட்டுள்ளது என்பது பிரத்தியட்சமாய் தெரிகின்றது. "கிறிஸ்து இயேசுவும் கூட வேத வசனங்கள் நிறைவேறத்தக்கதாக அப்படி ஒரு சில வழிகளில் பேசினார்".(அடையாளத்திற்காக வாசிக்க வேண்டும். யோவான்-2:19, 6:53-58, 13:18, யாத் 33:14 வது வசனங்களை கவனிக்கவும்): "என் சமூகம் (எபிரெயர் பாஷையில் என் சமூகம்) உன்னோடே கூட போகும்".

இப்பொழுது (**"என்னுடைய பிரசன்னம்"**) அல்லது (**"என்னுடைய சமூகம்"**) என்றால் என்ன? ஏசாயா 63-9 சொல்கின்றது. அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார். அவருடைய சமூகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்.

"இந்த கர்த்தராகிய தேவனாகிய சமூகமே ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் சந்திக்கும்படி வந்தவர் இவரே. ஆதியாகமம்-3:8 இஸ்ரவேலை "இரட்சித்த", அவருடைய பிரசன்னத்தின் அந்த தூதனே அவருடைய இரட்சகர், அவர்களுக்கு **ஒரே இரட்சகர்தான்** இருந்தார் என்பதை நாம் அறிகிறோம். ஆகவே பின்பு "தங்களை மீட்டுக் கொண்டவரும், தங்களை தாங்கினவரும், தங்களை சுமந்து சென்றவரும்உனக்குமுன்பதாகப்போகும்"என்கிறசர்வவல்லவருடைய **முகத்தையும்** அல்லது **பிரசன்னத்தின் தத்ரூபமாகிய** மேசியாவுடன் அந்த பரிசுத்த மனிதர்கள் பேசி இருப்பார்கள் அல்லது அவரை கண்டிருப்பார்கள்.

யாத்திராகமம் 23:20-23 இப்படி வாசிக்கிறோம். "வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமூகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே, உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும் உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன்".

இந்த வசனங்கள் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய முழு சித்தத்தையும் செய்து வந்த ஒரு தூதன் இருந்ததாக தெளிவாக காண்பிக்கின்றது. அவர் தேவனுக்கு பதிலாக நின்றவரும் தேவனாயும் இருந்தார். இஸ்ரவேல் ஜனங்கள் அவருடைய சத்தத்திற்கு செவி சாய்க்க வேண்டுமென்றும், அவரை எரிச்சல்படுத்தாமல் இருக்கும்படியும் எச்சரிக்கப்பட்டனர். தேவனுடைய நாமம் அவருக்குள் இருந்தபடியினால் அவருடைய சத்தத்திற்குக் கீழ்படிவது என்பது, தேவன் அவரை கொண்டு பேசின எல்லாவற்றையும் செய்வதாகும்.

வானத்திலும் பூமியிலும் அவருக்குள்ளாக வைக்கப்பட்ட தேவனுடைய நாமம் இருக்கும் ஒரே நபர்தான் உண்டு. அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை தவிர வேறு ஒருவருமில்லை. யோவான் 5:43 "நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும்" யோவான் 5:22, 23 "அன்றியும் பிதாவைக் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

இப்பொழுது அவர் புதிய ஏற்பாட்டின் காலத்திலே இயேசு பூமிக்கு வருவதற்கு முன்பதாவே அவர் முன்னிருந்தாரா? இஸ்ரவேலருக்கு இரட்சகராகவும் தமக்குள்ளாக தேவனுடைய நாமத்தை சுமந்தவரும் தேவனுடைய பிரசன்னத்தின் தற்சுரூபமுடையவராய் இருந்தவர் யார்.

வேதத்தை விசுவாசிக்கின்றவர்களுக்குள் இயேசு முன்னிருந்தாரா என்கிற கேள்விப்பற்றிய வித்தியாசப்பட்ட பதில்கள் அதிக குழப்பத்தை உருவாக்கியுள்ளது. திரித்துவக்காரர்களில்லாமல், இயேசு பூமிக்குரிய வாழ்க்கைக்கு வரும் முன்னே இருந்தார் என்று திரித்துவத்தை விசுவாசிக்காத கொள்கைக்கு உட்படாதவர்களும் அப்படி விசுவாசிக்கின்றனர்.

[கவனிக்கவும் : ஒரு சில நேரங்களில் சரியான பதிலைப்போல தெரிகின்றதும் மற்றும் தற்கரீதியான பதில் தவறான பதிலாக திரும்பக் கூடும் ஒரு அடையாளத்திற்கு வேதவசனத்தில் ஒரு பிதா ஒரு குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியைப் பற்றி சொல்லப்பட்ட வேத வசனங்களை மேற்கோள் காட்டுவது கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு பொதுவான காரியம். அதற்குப்பின் நேரடியாக தேவன் ஒன்றுக்குள்இருக்கின்ற மூன்று நபர்களாய் இருக்கின்ற திரித்துவம் என்று முடிவு செய்கின்றனர். மற்றொரு அடையாளம் என்னவென்றால் ஜலத்தின் ஞானஸ்நானத்தை பயன்படுத்தும் தவறான ஞானஸ்நானத்தின் விதிமுறையாகும். உண்மையான அப்போஸ்தலர் 2:38ல் தெளிவாக அறிமுகப்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்குப் பதிலாக அதிகபட்சமான சபைகள் மத்தேயு 28:19ல் கட்டளையிடப்பட்டதின் மறைந்துள்ள அர்த்தத்தையும் ஒரு உண்மையான புரிந்து கொள்ளுதல் இல்லாமல் அதை அப்படியே ஒரு மேலோட்டமாக பின்பற்றுகின்றனர். ஆகவே தான் தேவத்துவத்தைப் பற்றிய பலவிதமான அநேக வியாக்கியானங்களும் வேதத்திற்குரிய பல விதமான மற்ற உபதேசங்களும் இருக்கின்றன].

**இல்லை, பெத்லகேமில் உண்டான சமயத்திற்கு முன்பாக தேவகுமாரனாகவோ அல்லது தேவனிலிருந்து வேறுபட்ட தனி நபராகவோ இயேசு முன்பே இருக்கவில்லை. ஆயினும் தேவனின் குமாரத்துவத்தின் ஆவி** அவருடைய வார்த்தையில் இருந்தது. இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக வெளிப்பட்ட வார்த்தைக்குள் இருந்த ஒரே தன்மையாய் இருந்தது. வார்த்தைக்குள் குமாரத்துவத்தின் ஆவி இல்லாமல் தேவகுமாரன் என்பதே இல்லை. ஆனால் வார்த்தைதான் இயேசு என்றும் அவர் முன்னமே இருந்தார் என்றும் சொல்வது தவறு.

(கவனிக்க வேண்டியவை : இரட்டை சுபாவம் என்கின்ற பின்பக்கத்தில்உள்ளசிறுதலைப்பில்கடைசிபத்தியில்“தேவன்உங்கள் பாவங்களுக்காக மரித்தாரா?” என்கிற கேள்விக்கு கொடுக்கப்பட்ட பதிலில் இதற்கேதுவான சிந்தை இருக்கின்றது). இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்புவரை எல்லா காலங்களிலும் இருந்த மனித குலத்திற்கு கிறிஸ்து தேவனுடைய பெரிதான இரகசியமாய் இருந்தார்.

**பிதா-குமாரனுக்குரிய உறவின் இரகசியம் மறைக்கப்பட்டிருந்தது**. தேவனுடைய மடியில் இருந்த இயேசு அவருடைய பிதாவும், நம்முடைய பிதாவும், அவருடைய தேவனும், நம்முடைய தேவனுமாயிருக்கின்ற - அந்த பிதாவை அறிவிக்கும்படி அனுப்பப்பட்டார். (யோவான் 20:17).

## காணக்கூடாத ஆவியும் காணக்கூடிய வார்த்தையும்

பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தைக்குள் மறைந்திருக்கிற இந்த பெரிதான இரகசியத்தை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சில வேத மொழிபெயர்ப்பாளர்களும், மொழிபெயர்க்கின்றவர்களும், நேரடியாக வார்த்தையை இயேசுவுக்கு சமமாக செய்தது போல நாமும் செய்யக்கூடாது. அவர்கள் “வார்த்தை தேவனாயிருந்தது” என்று சொல்வதற்கு பதிலாக அவர்கள் **“வார்த்தை இயேசுவாய் இருந்தது”** என்று சொல்லுகின்றனர். இது திரித்துவக்காரர்களுக்கு அநேக பழமையான பாரம்பரிய மொழிபெயர்ப்புகளில் ஒன்று. இது உண்மையான மொழிபெயர்ப்பாக இருந்திருக்குமென்றால் பிரியமான அப்போஸ்தலர் யோவான் இப்படியாக எழுதியிருப்பார். இந்த முறைப்படி யோவான் 1:14ல் வார்த்தைகளால் தவறாக வார்த்தைகளிலிருந்து வியாக்கியானம் செய்யப்பட்டது. “அந்த வார்த்தை மாம்சமானது…”. ஆனால் இந்த வசனம் கன்னிமரியாள் கர்ப்பம் தரித்ததோ அல்லது பெத்லகேமில் குழந்தை இயேசு பிறந்ததற்கு நேரடி குறிப்போ ஒன்றுமேயில்லை. வார்த்தையானது இயேசுவின் ஜீவனில் (மாமிசம்) வெளிப்பட்டதையே குறிப்பிடுகின்றது. அவருடைய ஊழியம் ஆரம்பிப்பதற்கு முன்பதாக யோர்தான் நதியில் தேவன் அவருக்குள் முழுமையாக இறங்கினார். நீங்கள் கவனிக்க வேண்டியவைகள் என்னவென்றால் **இயேசு நித்திய குமாரனாய் இராமல் ஜநிப்பிக்கப்பட்ட குமாரனாய் இருந்தார்**. I யோவான் 5:7 என்கிற இந்த வசனத்தை திரித்துவர்கள் பயன்படுத்த விரும்புகின்றனர்.

“பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றராயிருக்கிறார்கள்”.

வேதத்தை கருத்தாய் ஆராய்ந்த எந்த மாணவனும் இந்த வாக்கியம் பரிசுத்த வேதாகமத்தின் பங்காக இருக்கவில்லை என்பதை அறிவார்கள். இந்த வாக்கியமானது கிடைத்திருக்கும் மூல பிரதிகளுக்குள் இல்லை. இந்த “மூன்றும் ஒன்று” என்கின்ற இந்த வாக்கியமாகிய வசனத்திலிருந்து திரியேகத்துவர்களுக்குள்ளாக மூடத்தனமான வாக்குவாதங்கள் எழுப்பி திரித்துவம் உண்டு என்று நிரூபிக்க முயற்சிக்கின்றவர்கள் (“இவைகள் மூன்றும் ஒன்று” என்பது இம்மூவரும் ஒன்றாய் இருக்கின்றார்கள் என்றும்

7ம் வசனத்திலே பயன்படுத்தப்பட்ட சொல் தேவனுடைய மூன்று நபர்களைக் குறிப்பிடுகின்றது என்று நீங்கள் இப்பொழுது கவனிக்க வேண்டும்). 8ம் வசனத்திலே இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது என்று சொல்கின்றது. மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறதென்றால் இம்மூன்றும் ஒற்றுமையாக ஒன்றோடொன்று வேலை செய்கின்றது என்று அர்த்தமாகும்.

7வது வசனத்திலேயும் 8வது வசனத்திலேயும் முறையாக சொல்லப்பட்ட இந்த இரண்டு சொற்களுக்கு ஒரே அர்த்தமுடையதாக இல்லை. ஆவி, ஜலம்,இரத்தம் பூமியில் தேவனுடைய மீட்பின் திட்டத்தை நிறைவேற்றும்படி பரிபூரண ஒற்றுமையுடன் ஒன்றோடொன்று வேலை செய்யும்படி மூன்று வெவ்வேறான பொருளாயிருக்கின்றது. (இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கின்றது) ஆகவே திரியேகத்துவர்களின் இவ்வசனங்கள் ஒன்றையும் நிரூபிப்பதில்லை.

7ம் வசனத்திற்கு எந்த மூல வாக்கியங்களும் பதிவு செய்யப்படாமலும் அதிகாரம் இல்லாமல் இருப்பது மாத்திரமன்றித் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்கின்ற மூன்று தனிப்பட்ட நபர்கள் பரலோகத்தில் சாட்சியிடுகின்றன என்பதையும் பூமியிலுள்ள ஒரு விசுவாசி நீதிமானாக்கப்பட சாட்சியிடுகின்ற ஆவி, ஜலம், இரத்தம் என்கின்ற வேறுபட்ட மூன்று பொருள்களோடு இந்த இரண்டும், வசனத்திலுள்ள இரண்டு சொற்களை நாம் ஒப்பிட்டு பார்க்கமுடியாது. ஏனென்றால் மூன்றும் ஒன்று மற்றும் மூன்றும் ஒன்றோடொன்று ஒருமைப்பட்டிருக்கிறது என்பது இரண்டு வேறுபட்ட சொற்களாகும்.

ஆகவே 7ம் வசனம் மூன்றில் ஒன்றான தேவனையோ மூன்று தேவர்கள் ஒரு தேவத்துவத்துக்குள் இணைந்திருப்பதையோ குறிப்பாக சொல்லப்படவில்லை.

(குறிப்பு: “பிதா, குமாரனை அனுப்பினார்” என்று வேதவசனம் சொல்லுகிறபடியினால் ஒரு சிலர் இயேசு பெத்லகேமில் பிறக்கும் முன்பதாகவே குமாரனாக பிதாவுடன் இருந்தாரென்று வாக்குவாதம் செய்கின்றனர். அப்படியானால் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன் இருந்தான். அவனுடைய பெயர் யோவான் என்றும வேத வசனங்கள் இருக்கின்றதே. எனவே இயற்கைப் பிறப்பிற்கு முன்பதாகவே யோவான் ஸ்நானகன் என்ற ஒரு மனிதன் இருந்தான் என்பதை அவர்கள் நியாயப்படுத்திக் கூறலாமா? மற்றும் ஆதியில் கொண்டுவரப்பட்ட வார்த்தைஜநிப்பிக்கப்பட்ட தேவகுமாரன் என்று வலியுறுத்தினால், ஆதாமும் மண்ணான சரீரத்தில் இப்பூமியில் வரும்முன்னே அவனும் ஜநிப்பிக்கப்பட்ட குமாரனாய் இருந்தான் என்று நியாயப்படுத்தி பேசவேண்டியதாகும். ஆதாமின் ஆவியைப்போல வார்த்தை, சரீரம் இரண்டும் ஆணும் பெண்ணுமாய் இருக்கிறது. ஆதாம் ஆணும் பெண்ணுமாய் இருக்கின்ற ஆவியின் சரீரத்தில், குமாரன் என்று அழைக்கப்படமுடியாது. ஆதாமின் ஆவிக்குள் இருந்த **குமாரன்**

மற்றும் குமாரத்தி என்னும் தன்மைகள் ஆதாம் ஜீவ ஆத்மா ஆனபோதே அவைகள் வெளிப்படுத்தப்பட்டன. முதலாவது மனிதன் அதற்குப்பின் அந்த மனிதனின் மனைவி (ஸ்திரீ) அதுபோலவே தேவனுடைய குமாரன் மற்றும் அவருடைய சபை (ஆவிக்குரிய மணவாட்டி) மாமிச சரீரத்தில் வந்து அது வாசம்பண்ணும்படி உருவாக்கப்படும்வரை வார்த்தைக்குள்தான் இருந்தது.

கிறிஸ்து இயேசு என்னும் மனிதன் முதலாவது இருந்தார். அதன்பின் கல்வாரியிலே அவர் பக்கத்திலிருந்து அவருடைய மணவாட்டி (சபை) எடுக்கப்பட்டது. இயற்கை மனிதன் ஆதாம் ஆவிக்குரிய மனிதனாகிய இயேசுவுக்கு முன் அடையாளமாயிருந்தான்.

ஒரு குமாரன் பிறக்கும்முன்னே அவன் தகப்பனின் அறையில் வித்தாயிருக்கிறான். ஆனால் அந்த குமாரன் தன் தகப்பனிலிருந்து தனி நபராக முன்னமே இராமல் அவருக்குள் ஒரு வித்தாக மாத்திரமே இருந்தார். சர்வ வல்லமையுள்ள ஆவிக்கு சிருஷ்டிகர், குணமளிக்கின்றவர், இரட்சகர், யுத்தம் செய்கின்றவர், பாதுகாக்கின்றவர் என்றெல்லாம் இதுபோன்ற அநேக தன்மைகள் உண்டு என்று நினைவுகூறவும். இதுபோன்ற எல்லாத் தன்மைகளும் குடும்பப் பெயரை சுமந்து வரும் அந்த வித்துக்குள்தான் அடங்கியுள்ளது. (இதுபோன்ற குணாதிசயங்களை வெளிப்படுத்தவும் தமது வார்த்தையைப் பிரஸ்தாபப்படுத்தவும் மற்றும் தமது நாமத்தை வெளிப்படுத்த யோவான் 5:17, 17:3-10ம் வசனம் வரை தேவன் ஒரு வேலையை அமைக்க வேண்டியதாயிற்று. தமது சொந்த ஆலோசனையில் (எபேசியர் 1:11) இல்லாத காரியங்கள் அது ஏற்கனவே இருப்பது போல அவைகளை அழைப்பதற்கு முன்னமே அவர் முன்குறித்து மகிமைப்படுத்தினார். (ரோமர் 4:17) மற்றும் அந்த பெரிதான நித்திய ஆவியின் **ஒரே வித்தாய்** பிதாவின் மடியில் இருந்த இயேசு தேவனுடைய முன் குறித்த திட்டத்தை நிறைவேற்றும்படி பின்காலங்களிலே ஒரே பெயரான குமாரனாய் அனுப்பப்பட்டார் (யோவான்1:18) யோவான்8:42, யோவான் 16:28 “நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தை விட்டு பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்.”

புறப்பட்டு வந்தது என்ற வார்த்தைகள், வெளியேறினது - வெளியே வந்தது - பிறந்தது என்பது அர்த்தமாகும். “அனுப்பப்பட்டது” என்றால் ஊழியத்திற்காகஅல்லதுஒருகுறிக்கோளிற்காகவேறுபிரிக்கப்படுவது என்று அர்த்தமாகும். இந்த உலகில் பிறந்த எல்லா மனிதர்களும் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள்தான். ஆனால் ஒரு கையளவு மாத்திரமே தேவனுடைய ஊழியத்திற்காக அனுப்பப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டிலே “அந்த வரக்கூடியவராக” தீர்க்கதரிசனமாகவே மாத்திரம் இயேசு அறிவிக்கப்பட்டிருந்தார் மற்றும் எப்பொழுதும்

தேவனோடு பிதா என்னும் உறவை வைத்தவராயிருந்தார். அவர் பங்கு பங்காகவும் வகை வகையாவும் தீர்க்கதரிசிகளுக்கும் முற்பிதாக்களுக்கும் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாக இருந்தார் (எபிரேயர் 1:1). ஆதியிலே தேவனோடு சிந்தனையில் பெறும் அந்த வார்த்தையாகவும் அப்பமாகவும் இருந்தார். ஆனால் பின் காலங்களிலே தேவகுமாரனாக பரலோகத்தில் இருந்து வந்தார். (யோவான் 6) காலங்கள் நிறைவேறினபோது கன்னியின் வயிற்றில் பிறந்ததும், தேவனால் அனுப்பப்பட்ட குமாரனுமாயிருந்தார். (கலா 4:4). இயேசு தேவனால் ஜநிப்பிக்கப்பட்டிருந்தாலும் கன்னி ஸ்திரியினால் பிறந்தார். மரியாளின் முதல் பிறப்பான குமாரன் தேவனால் ஜநிப்பிக்கப்பட்ட ஒரே குமாரனாயிருந்தார். இயேசு அவருடைய சகோதரரெல்லாரிலும் முதற்பிறந்தவராக இருந்தார் (ரோமர் 8:29).

## MONOGENE
## ஒற்றை மரபணு
## தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆரம்பம்

இப்பொழுது தரிசனமான அந்த ரூபமோ, தேவனுடைய தூதன் என்பதோ அது வேறொரு இரட்சகரோ தேவனோ இல்லை. தேவன் உரைத்தபடி ஏசாயா 45:21 நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத்தவிர வேறொருவரும் இல்லை.

அநேக வேதபண்டியதர்கள் புரிந்து கொண்டபடி பழைய ஏற்பாடு காலங்கள் முழுவதும் தீர்க்கதரிசிகளுக்கு தரிசிக்கும் **அந்த சாயல் தேவனுடைய வெளிப்படுத்துதலாகிய தியோபனி** தவிர வேறு ஒன்றுமில்லை **(தேவ வெளிப்பாட்டின் தோற்றம் அளிக்குதல்)** அதாவது தேவன் அந்தந்த தீர்க்கதரிசிகளுக்கு அந்தந்த நேரத்திலே அவர்களின் சமயத்திற்கு தக்கதாக தேவன் அவர்களுக்கு காட்சியளித்தபோது ஒரு தற்காலிக பூமிக்குரிய பரிமானத்திற்கு ஏதுவான சரீர பிரகாரமாக காட்சியளித்தார். தேவனுடைய சிந்தையிலும் மனதிலும் அதாவது ஒரு குறிப்பிட்ட வழி அல்லது உருவமைப்பை தேவன் வெளிப்படுத்துவதும் தன்னை காண்பிக்கக் கூடியதுமாய் இருந்தது. அந்த **மிகப்பெரிய நித்திய ஆவி** தனக்குள் ஆலோசித்து எதனை செய்ய வேண்டுமென்று தீர்மானித்ததை வேத வசனங்களில் இருக்கின்ற தேவனுடைய **வார்த்தையை** ஆழ்ந்து கவனிப்போம்.

“பார்க்கிலே” (Barclay) - வேறு மொழிபெயர்ப்பின் பிரகாரம் யோவான் சுவிசேஷத்தின் முதல் ஐந்து வசனங்கள் இப்படிச் சொல்கின்றன. “உலகம் உண்டானபோது அந்த வார்த்தை அதற்கு முன்பதாகவே இருந்தது” அந்த வார்த்தை தேவனோடு இருந்தது தேவனுடைய குணாதிசயத்திற்கு ஏதுவாகவே அந்த வார்த்தையின் குணாதிசயம் இருந்தது. அந்த வார்த்தை ஆரம்பத்தில் இருந்தது.

அந்த வார்த்தையின் செயலான்மையினால் மற்றவைகளெல்லாம் தோற்றத்திற்கு வந்தது. அந்த வார்த்தையில்லாமல் சிறு காரியம் கூட தோன்றவில்லை. அந்த முழு சிருஷ்டிப்பிற்காகவும் அந்த வார்த்தையே ஜீவனின் அடிப்படையாக இருந்தது. அந்த ஜீவன் மனிதர்களுக்கு ஒளியாக இருந்தது. அந்த ஒளி இருளில் தொடர்ந்து பிரகாசிக்கின்றது. அந்த இருளானது அதை எப்பொதும் அவித்து போட்டதேயில்லை. அந்த வார்த்தை (கிரேக்க பாஷை: லோகோஸ்) அந்த வார்த்தையின் செயலாற்றத்தினால் சகலமும் உண்டாக்கப்பட்டது. வார்த்தையின்றி சிருஷ்டிப்போ அதின் செயல்பாடோ ஒன்றுமே இருக்கமுடியாது. ஏனென்றால் அந்த வார்த்தையே தேவனாயிருந்தது. தேவனோடு அந்த வார்த்தை ஆதியிலே இருந்தபடியினாலே அது எதனாலேயும் குறைவாக இருக்கமுடியாது. சந்தேகமின்றி அந்த வார்த்தையில் ஜீவன் இருந்தது. இப்பொழுதும் இருக்கின்றது என்று இயேசு சொன்னார் (யோவான் 6:63).

தேவனுடையசிருஷ்டிப்பின்ஆரம்பமாகியஇந்தவார்த்தையிலிருந்து (ஜீவனுக்குரிய கருப்பொருளின் மையம்) சகலமும் வந்தபடியினால் அது ஜீவனுக்குரிய வித்து என்று எளிமையாக கூறலாம். இங்கே நாம் தேவனுடைய ஒற்றை மரபணு என்று கூறலாம். பின்பு நாம் நம்முடைய வேதாகமத்தை அறிந்திருப்போமானால் தீர்க்கதரிசிகள் மூலமாக முற்பிதாக்களுக்கு பழைய ஏற்பாடு முழுவதும் வெவ்வேறு அநேக வெளிப்பாடுகளினால் பலவிதத்திலே சத்தியத்தின் ஒரு பங்கை காண்பித்த இந்த வார்த்தையினால் திருவுளம்பற்றினார் என்பதை நாம் கவனித்திருக்க வேண்டும். (எபிரேயர் 1:1) நபர் என்கின்ற வார்த்தை ஒரு தவறான மொழிபெயர்ப்பு. அது கிரேக்க பாஷையில் Hupostasis (**ஹீப்போஸ்டாஸிஸ்**) என்கின்ற வார்த்தையின் அர்த்தம் “இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய **தன்மையின் சொரூபமுமாயிருந்து**, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய் இருக்கிறார். (எபிரேயர் 1:1, 2, 3 வாசிக்கவும்)

சரிதான் தேவனுடைய வார்த்தையானது பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளுக்கு வெவ்வேறு விதத்திலும் பல வழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டதாயும் கேட்பதாயும் மாத்திரமன்றி அந்த தேவனுடைய மனிதர்களுக்குள்ளே வெளிப்பட்டு காணப்பட்டதாயுமிருந்தது. அந்த ஒவ்வொரு **வெளிப்பாடுகளிலும்** அவரைக்குறித்து பேசப்பட்ட எல்லா வசனங்களிலும் (**அந்த வார்த்தை**) நிறைவேறத்தக்கதாக கிறிஸ்து வார்த்தையின் நிறைவில் வரவேண்டியதைக் குறிப்பிட்ட விதத்திலும் அந்த வழியிலும் அவரை வர்ணிக்கக் கூடியதாயும் முன்னறிவிக்கக் கூடியதாயும் இருந்தது. ஆதலால் இயேசுவாகிய ஒரே பேரான தேவ குமாரனாய் பிற்காலங்களிலே வெளிப்படும்படி இருந்த குமாரத்துவத்திற்குரிய

ஆவி (ஜீவ அணு) அந்த ஒற்றை மரபணுக்குள் இருந்தது. யோவான் 1:1ல் ஆதியிலே வார்த்தை இருந்தது **அந்த வார்த்தை தேவனாயிருந்தது**. ஆதியிலே என்கின்ற சொல் ஆரம்பமில்லாததையோ அல்லது நித்தியத்திற்குள் என்கிற அர்த்தத்தைக் காண்பிப்பதில்லை. தூதர்களுக்கு ஒரு ஆரம்பமிருந்தது போல வானத்திற்கும் பூமிக்கும் இருந்தது போல அந்த வார்த்தைக்கும் அதின் **ஆரம்பம்** இருந்தது. இந்த **வார்த்தை** பின்பதாக மாமிசமாகி மனிதர்கள் நடுவே வாசம்பண்ணினது.

இந்த **வார்த்தை** கிரேக்க வார்த்தையில் **லோகோஸ்** என்னும் வார்த்தையாலே வந்தது. அது வெறும் **சிந்தையினால் சிந்திக்கக்கூடியதை** மாத்திரம் சொல்லுகின்றது. கிரேக்க பாஷையில் (Neoma) நொய்மா அது சிந்தையாகும். காரண ஆய்வு அது கிரேக்க பாஷையில் (Dialogiasmos) டய்லாக்கிஸ்மாஸ், சிந்தனைகள் நிறைந்த ஒரு மனிதனுடைய மனதை ஒருவனும் பிரிக்கமுடியாது. அது போல சர்வவல்லமையுள்ளவர் இருக்கும்வரை அவருடைய மனம் அவருக்குள் இருக்கும்.

கடந்த நித்தியத்தில் ஒன்றுமே தோன்றுவதற்கு முன்பதாக சர்வவல்லவர் மாத்திரமே இருந்தார். அவர் தாமே **போதுமானவராயிருந்தார்**. அவருடைய எல்லா சிந்தனைகளும் அவருடைய மனத்திலிருந்தது. அவைகள் வெளிப்படுத்தப்படவில்லை அது சிந்தைக்குள் மாத்திரமே இருந்தது.

**ஒரு சிந்தையென்பது பேசப்படாத அல்லது வெளிப்படுத்தப்படாத வார்த்தையாயிருக்கிறது**. அது வெறும் சிந்தைக்குள் மாத்திரமே இருக்கிறது. அதே நேரத்தில் ஒரு **வார்த்தையென்பது பேசக்கூடியதோ அல்லது வெளிப்படுத்தக்கூடிய ஒரு சிந்தையாயிருக்கிறது**. வெளிப்படுத்தக்கூடியதென்பது கிரியைகளும் அல்லது வார் த்தைகளும் அடங்கிய சிந்தையாயிருக்கிறது. **ஆகவே லோகோஸ் என்பது சிந்தையுடன் சேர்ந்த வெளிப்படுத்தலாயிருக்கிறது** (அல்லது வெளிப்பாடு) இன்னும் தெளிவாக சொல்லவேண்டுமானால் **லோகோஸ்** என்பது **பேசப்படுகின்ற வார்த்தையும்** அந்த **வார்த்தையின் பின் இருந்து பேசுகின்றவராயும்** காண்பிக்கப்படுகின்றது.

இதை நாம் மனதிலே வைத்துக்கொண்டு யோவான் ஏன் **"ஆதியிலே வார்த்தை"** என்று எழுதினார் என்று காணமுடிகின்றது. **அந்த** ஆதிக்கு முன்பதாக இருந்த அந்த கால கட்டத்தில் சர்வவல்லமையுள்ளவர் வெறும் தம்முடைய சிந்தைகளோடு இருந்தார். (லோகோஸ் இல்லை) தமக்குள்ளாகவே தமது சிந்தையிலே தீர்மானித்ததை ஆலோசித்து முடித்ததும், தமது சொந்த சித்தத்தின் ஆலோசனையின்படி (Boule - கிரேக்க வார்த்தை) (எபேசியர் 1:11) அவைகளை அவர் **வெளிப்படுத்தத் தொடங்கினார்**. அதுவே லோககோஸின் ஆரம்பமாயும் அல்லது

தமது உள்ளான சிந்தனையை வெளிப்படுத்தக் கூடியதுமாயிருந்தது. **ஏலோஹிம் ஒரு ஆவியின் சரீரத்தை** உருவாக்கத் தொடங்கினார். அது பின்பதாக சிருஷ்டிக்கப்படக்கூடிய தூதர்களை போன்ற சரீரம் இருந்தது. ஆனால் ஏலோஹிமிலிருந்து புறப்பட்ட இந்த ஆவியின் சரீரம் ஆவியின் சரீரத்தைக் காட்டிலும் மேன்மையானது. ஏனெனில், தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாட்டின் ஜீவனை சுமந்த ஜீவனாக இருந்தது. எனவே அவருக்குள் ஜீவன் இருந்தது. யோவான் 1:4 பின்பதாக தேவன் இந்த வார்த்தையின் சரீரத்தின் மூலமாக தமது சிந்தைகளை பேச ஆரம்பித்த பிறகே, காரியங்கள் நடைபெற ஆரம்பித்தது!

## வார்த்தையும் இயேசுவும்

வார்த்தைக்கும் இயேசுவுக்கும் இருக்கும் வித்தியாசத்திற்குரிய வெளிப்பாட்டை நீங்கள் பெற்றுக் கொள்ளும்படி உங்களுக்காக வேண்டுகிறேன். அநேக வேத பண்டிதர்கள் ஆதியிலே வார்த்தை இயேசுவாக இருந்ததாகவும் ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு அவர் மாம்சமானதாகவும் நாம் விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். அப்படி வார்த்தைதான் இயேசுவாக இருந்தது என்று சொல்வதினால், கடந்த கால நித்தியத்தில் (அல்லது ஆதியின் ஆரம்ப கட்டத்தில் யோவான் 1:1) **இரண்டு தேவர்களாகிய** பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும் இருந்ததாக கூறுகின்றார்கள். இந்த வசனத்தை கவனிக்கவும் : ஏசாயா 45:21, நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத்தவிர வேறொருவரும் இல்லை. லோகோஸ் என்பது வேறொரு தேவனாக இருந்திருக்குமென்றால் மேலே சொல்லப்பட்ட வசனம் பொய்யாயிருந்திருக்கும். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேரலர்களுடன் தேவன் பேசி சிருஷ்டிப்பை வார்த்தையின் சரீரத்தின்படி உருவாக்கினதே அந்த லோகோஸ். காணக்கூடாததும், காணக்கூடியதுமாகிய பரிமாணத்திற்கு மத்தியில் மத்தியஸ்தர் போல் அது நின்றது (கலாத்தியர் 3:20 மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர்). லோகோஸ்ஸைப் போலவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது புதிய உடன்படிக்கையாகிய அவருடைய இரத்தத்தில் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராய் இருக்கின்றார் (I தீமோத்தேயு 2:5).

**வார்த்தை இயேசுவாக இருக்கவில்லை, வார்த்தை தேவனாய் இருந்தது. ஆயினும், இயேசு மாமிசத்தில் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தையாய் இருந்தார்.** ஆயினும், இயேசு என்னும் மாமிசத்தில் அந்த தேவனுடையவார்த்தை வெளிப்பட்டது. ஆதியிலே இயேசு தேவனோடு கூட இல்லை. ஆனால் வார்த்தை (இயேசு என்னும்

மனிதனுக்குள்பின்காலங்களிலேவெளிப்படவேண்டியதாய்)இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து புறப்பட்டு **தன்னைத்தான் வெளிப்படுத்தும்** அந்த வார்த்தை **ஒற்றை மரபணுவாய்** (விதை) இருந்தது. அந்த வார்த்தை நித்தியமாக இருந்தது மற்றும் இருக்கிறது (ஏனெனில் அந்த வார்த்தை தேவனாயிருக்கிறது) ஆனால் இந்த மனிதனாகிய இயேசு, சிருஷ்டிக்கப்பட்டு ஜநிப்பிக்கப்பட்டபடியால் நித்தியமானவர் அல்ல (கடந்தகால நித்தியத்தில் இருக்கவில்லை) தேவனுடைய சிந்தையிலிருந்து புறப்பட்டு வந்த அந்த வார்த்தை தெய்வத்தன்மையும் நித்திய தேவத்துவத்தையும் வெளிப்படுத்திக் காண்பித்த **கிறிஸ்துவின் முழுமையான** முன் **அடையாளமாய் இருக்கின்றது**. அந்த ஆரம்பத்திலே, தெய்வத்தன்மைக்குள் காணக்கூடாத சர்வ வல்லமையுள்ள ஆவியும் அவருடைய காணக்கூடிய சரீரமே உள்ளடங்கியதே தவிர பிதாவும் குமாரனும் அல்ல.

பிரியமான அப்போஸ்தலர் யோவானுக்கு ஜீவனுக்குரிய வார்த்தை (லோகோஸ்) பற்றி மறுக்கமுடியாத தெளிவான வெளிப்பாடு இருந்தபடியினாலே அவர் இப்படி எழுதினார் (I யோவான் 1:1,2 (1) ஆதி முதலாய் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டுப் பார்த்ததுமாயிருக்கிற ஜீவ **வார்த்தையைக்** குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். (2) அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிக் கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்).

**லோகோஸை** ஜீவன் மற்றும் நித்திய ஜீவன் என்று அவன் அழைத்ததை கவனிக்கவும். அது ஆதியிலே பிதாவுடன் இருந்தது. “ஆதியில் வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது” தமது சுவிசேஷத்தின் பரிசுத்தவான்களுக்கு வெளிபடுத்தப்பட்ட இந்த நித்திய ஜீவனை அவர்கள் காதால் கேட்டு கண்களால் பார்த்து அதை நோக்கிப் பார்த்ததாயும் கைகளால் தொட்டு பார்த்ததுமாய் இருந்தது என்று சொன்னான். லோகோஸுக்குள் உருவமைக்கின்ற ஆவிதான் அந்த நித்திய ஜீவன் இந்த நித்திய ஜீவனுக்குரிய லோகோஸ் பின்நாட்களிலே தேவகுமாரனனான இயெசுகிறிஸ்துவுக்குள் வெளிபடுத்தப்பட்டது.எனவே தேவனுடைய ஆவியும்(பிதா) மற்றும் (அந்த லோகோஸ் நித்திய ஜீவனுக்குரியது) இரண்டு அல்ல ஆனால் ஒன்று வெளிப்பாடு **இராமல்** அந்த வார்த்தை (லோகோஸ்) அது இயேசு என்னும் தேவகுமாரன் என்று நினைத்துவிடுவோம்.

தேவனுக்குள் இருந்த குணாதிசயத்தின் நிமித்தமாக ஒரு குமாரன் இருக்க வேண்டியதாயிற்று. ஆகவே தேவனுடைய லோகோஸ் வர வேண்டிய தேவகுமாரனை வெளிப்படுத்தும்படி **குமாரதுவத்தின் ஆவியாக** வந்தது. (குமாரன் என்பது ஒரு குடும்ப

பெயரை சுமக்கிறவனும் கட்டுகிறவனுமாய் இருக்கிறான்). எனவே இயேசுவின் குமாரதுவத்தின் ஆவி தேவனுக்குள் இருந்து வந்ததாயும் **தேவனின் குணாதிசயங்களை** வெளிப்படுத்தும் லோகோஸின் ஓர் உள்ளார்ந்த பாகமாய் இருந்தது. தேவனுடைய ஒற்றை மரபணுவாக இருந்த இயேசு வார்த்தை சரீரத்தின் மூலமாகவும் அதற்குள்ளாகவும் வெளிப்படுத்தப்பட்டு வந்தார். அவர் தேவனுடைய ஆவியியாயும் ஆத்மாவாயும் இருந்தார் என்று சொல்லலாம். அடையாள பூர்வமாக பேசுவோமானால் பின் காலங்களிலே இயேசுவுக்குள் தாபரிக்க வேண்டியதாயிருந்த லோகோஸை “குமாரன்” ஆக இருந்தது. மற்றும் தேவனுடைய அநாதி சித்தத்தின்படி தேவனுடைய குமாரனை தமது வார்த்தைக்குள்ளாக தேவன் அவரை **மகிமைப்படுத்தினார்** (யோவான்-17:5) அதற்கு பின் உலக தோற்றத்திற்கு முன்பதாகவே அவரை **அடிக்கப்பட்ட** ஆட்டுக்குட்டியாக தேவனுடைய சிந்தனையில் அவர் சிலுவையில் **அறைந்தார்**. (வெளி-13:8) ஏலோஹிம் தமது வார்த்தையை சித்தத்தின்படியும் தீர்மானித்தார். (எபேசியர்-1:11) அவர் இல்லாதவைகளை ஏற்கனவே இருப்பது போல பேசினார். (ரோமர்-4:17) தேவனுடைய மீட்கப்பட்டவர்களாக தேவன் தம்மை தமது அன்புக்குள்ளாக நம்மை பார்த்து உலகம் உண்டாவதற்கு முன்பதாகவே கிறிஸ்துவுக்குள்ளாகத் தெரிந்துகொள்ளப்பட்டு சுத்திகரிக்கப்பட்டவர்களாய் இருந்தோம். (எபேசியர்-1:4) கிறிஸ்து இயேசுவின் சரீரத்தின் பாகமாய் நாம் இருக்கிறபடியினால் நாம் அந்த வார்த்தையின் (குமாரத்துவம்) பாகமாய் இருந்தோம். பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே வெளிபடுத்தப்பட்டதாயும் மற்றும் புதிய ஏற்பாட்டு காலத்திலேயே நிறைவேற்றப்பட்டதாய் இருந்த தேவனுடைய பெருந்திட்டத்தின்படி ஒற்றை மரபணுவால் (வித்து) நாம் உருவாக்கப்பட்டு இருக்கின்றோம். குமாரத்துவத்தின் ஆவி நமக்குள் இருக்கிறபடியினாலே நாம் மாமிசத்தின்படி **பிறந்திருந்தாலும்** (மனிதயினம்) தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாய் **மறு பிறப்பை** அடைய முடிந்தது.

மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். (யோவான்-3:6) அது மாத்திரமின்றி தேவனுடைய வார்த்தையிலும் சிந்தையிலும் **ஸ்தாபிக்கப்பட்டபடி** நாம் மகிமை ப்படுத்தப்பட்டிருக்கின்றோம். (ரோமர்-8:29-30) ஆம் தேவனுடைய **முன்னறிவின்படியும் தமது மீட்பின் திட்டத்திற்கு** ஏதுவாக அவர் நம்மை முன் குறித்தும் முன் நியமித்தார். அவருடைய குமாரர்களும் குமாரத்திற்குரிய பெயர்கள்கூட உலக தோற்றத்திற்கு முன்பதாகவே ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்திலேயே எழுதப்பட்டுள்ளது. (வெளி-13:8)

ஆதாம், முதலாவது ஆதியிலே சிருஷ்டிக்கப்பட்டவனாய் இருந்தாலும், அவன் தேவனுடைய குமாரனாக இருக்கவில்லை.

அவனுக்கு மாமிச சரீரம் கொடுக்கப்படும் முன்பே (இந்த உலகத்தில் பிறப்பது) தேவனுடைய குமாரனாக அழைக்கப்பட முடியாது. அந்த ஆவியின் ரூபத்தில், குமாரத்துவத்தின் குணாதிசயத்தை மாத்திரமே பெற்று இருந்தன. ஒரு சில வேத விசுவாசிகள் ஆதாமை போல எல்லா வேத குமாரர்களும், குமாரத்திகளும், மாமிசத்தில் பிறப்பதற்கு முன்னதாகவே ஆவியாய் சிருஷ்டிக்கப்பட்டு தாபரித்தார்கள் என்று விசுவாசிக்கின்றனர். அதற்கு ஆதரவு அளிக்கும் விதமாக எண்ணி தங்களுக்குபிரியமான யோபு-38-4-7 மேற்கோள் காட்டுவார்கள். (நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிற போது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின்மேல் நூல் போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு அதின் ஆதாரங்களை எதின் மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவ புத்தரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே).

அப்படியானால், பூமி அஸ்திபாரம் படுத்துவதற்கு முன்பதாகவே, எல்லா தேவ புத்திரர்களின் ஆவிகள் ஏற்கனவே, ஆதாமின் ஆவியோடு இணைந்து சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்லுகிறார்களா? அது மாத்திரமன்றி, பூமியை அஸ்திபாரம்படுத்தும்போது ஏவாளின் ஆவி மற்ற எல்லா பெண்ணின் ஆவிகளோடு தாபரித்தது என்று எண்ணுகிறார்களா? அல்லது அவள் ஆதாமின் ஒரு பாகமாய் இருந்தாளா?

எல்லா தேவ “புத்திரர்களும்” (குமாரத்திகளும் அதில் சேரும்) தேவ ஞான சிந்தையில் மாத்திரமே இருந்தது. தேவனுடைய வித்துகள் (தேவ குமாரர்கள்) அந்த லோகோஸின் ஒரு பாகமாய் இருந்தன. பூமியில் தன் ஜீவனை தேவ குமாரன் என்கிற வித்து ஜீவனை தந்தபோது, இவர்கள் பிறந்தார்கள். (யோவான்-12:24). விதைக்குள், விதைகளின் ஜீவன் இருப்பது போல ஆவியின் ஜீவன்களாக அவர்கள் ஒன்றாக இருந்தது இல்லை (ஒரு மாங்காய் விதைக்குள் அநேக விதைகளின் ஜீவன்கள் இருந்தாலும் ஏற்ற சமயத்தில்தான் உருவாகின்றது போல) தேவனுடைய குமாரர்கள் லோகோஸின் ஜீவனுக்குள் இருந்தனர்.

தேவன் சிருஷ்டிகர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் சிருஷ்டிப்பு தன் சிந்தையினில் மாத்திரம் இருந்திக்குமானால் அவர் சிருஷ்டி ஆக முடியாது. அவர் சிருஷ்டிகர் என அழைக்கப்படுவதற்கு முன்பதாக, அவர் சிருஷ்டித்து, அவர் சிருஷ்டித்தவைகளை வெளிபடுத்த வேண்டியதாகும். அவர் இரட்சகர் என்பதை அறிந்து இருக்கிறோம். ஆனால், தாம் இரட்சிக்க பாவிகள் இல்லை எனில் தாம் இரட்சகர் ஆக முடியாது.

**தேவனுக்கும், ஆதாமுக்கும் இடையில் உள்ள தகப்பன்**, மகன் உறவு வெளிபடுத்த வேண்டியதாயிற்று. எல்லா மண்ணுலகத்திற்கும் ஆதாம் முந்தினவராயிருந்தார். (எபிரெயர் மொழியில்: ஆதாம்) ஆவியாக

அவன் முதாலவது சிருஷ்டிக்கப்பட்டவனாயிருந்தாலும் (ஆணும் பெண்ணுமாக) தேவனுடைய வார்த்தை சரீரமாக இருந்த லோகோஸ் போல இருக்கவில்லை. அவர் வார்த்தையில் சிருஷ்டிக்கப்பட்டு தேவனால் வந்தவனாக அவன் இருந்தான். ஆதாம் வார்த்தை சரீரமாக ஒரு பாகமாக இருந்தான். ஆதாமுக்குரிய குமாரத்துவத்தின் குணாதிசயம் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் தேவனுடைய குமாரன்என்று மெய்யாக அழைக்கப்படுவதற்கு முன்பதாக, சரீரத்தில் ஒரு நபராக வெளிப்பட வேண்டியதாயிற்று. பூமியிலிருந்து ஆதாமுக்கு, ஒரு மாம்சீக சரீரம் தேவைப்பட்டது. (நபர் என்றால் என்ன? நபர் என்றால் ஆள்தத்துவம் என்பதை கீழ் தலைப்பில் பார்க்கவும்) தேவன் மண்ணான சரீரத்திலிருந்து உருவமைந்த பின்பு, அந்த நபராகிய மனித உருவத்திற்குள், ஆதாமின் ஆவியையே தேவன் எடுத்து அந்த மண்ணான சரீரத்திற்குள் ஊதினார். அதற்குப் பிறகு அந்த சிருஷ்டி கர்த்தரின் ஜீவனையும் உயிர் வாழ்வு திறனையும் கொண்டவனாக **ஜீவ ஆத்மாவானான்**. (ஆதியாகமம்-2:7).அவனுக்குள் இருந்ததான தேவனுடைய ஜீவனை **வெளிப்படுத்த** வேண்டியவனாக இருந்தான். (ஜீவ ஆத்மா என்பது ஆவியை வெளிப்படுத்தும் தன்மையாகும்). ஆதாம் தேவனுடைய குமாரனாக இருந்தும், பழைய ஏற்பாடு காலங்களிலேயே தகப்பன் மகன் என்கிற உறவு வெளிப்படாமல் இருந்தது. ஆதாமோடும், இஸ்ரவேல் ஜனங்களோடும் தேவனுக்குஇருந்த ஒரு உறவு **எஜமான் வேலைக்காரரின் உறவு. தகப்பன், குமாரன்** என்கிற வெளிப்பாடு தேவ குமாரனாகிய இயேசு நம் பாவங்களுக்காக கிரயம் ஆகப்பட்ட பிறகே வந்தது. (1 யோவான்-4:10)

சர்வ வல்லவருடைய தேவனுடைய ஆவியின் வெளிப்படுத்துதல் ஆதாமின் ஆவியின் சிந்தை இருந்தபடியினால் அது தேவனுடைய சாயலின் பாகமாய் இருந்தது. அந்த ஆதாமின் ஆவி, (குமாரத்துவம்), அது ஆணும் பெண்ணுமாக இருந்தது. ஆதாம் அந்த நிலையில் இருக்கும்வரை தான் தேவனுடைய குமாரனாக வெளிப்படவே முடியாது. ஆதாம் ஒரு மனிதனாகிய நபராக உருவாக்கப்பட்ட பிறகு அது வெளிபடுத்தப்பட்டது. தன் விலாவிலிருந்து, பெண் பாகமான ஸ்திரி உருவாக்கப்பட்டாள். அதே போல் இயேசு கிறிஸ்துவாகிய நபருக்குள் வார்த்தை வெளிபடும்போது நாம் ஆணும் பெண்ணுமாகிய இரண்டும் வெளிபடுவதைப் பார்க்கின்றோம். எனவே கிறிஸ்து ஆணாகவும் (மணவாளன்) சபையானது பெண்ணாகவும் (மணவாட்டி) கல்வாரியில் அவருடைய விலாவிலிருந்து எடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டதுமாய் இருந்தது. தேவனுடைய சாயலிலும் (ஆவியின் வடிவம்), ரூபத்திலும் (காணக்கூடிய உருவமைப்பு) தூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும் குமாரதுவத்தின் ஆவி, அவர்களுக்குள் இல்லை. அவர்கள் மனிதர்களாகப் பிறக்க முடியாது. மற்றும் நபர்களாகவும் இருக்க முடியாது. அவர்கள் மனிதர்களை போல வந்து இருந்தாலும், (Enmorphe-

என்மார்பே) அவர்கள் நபர்கள் அல்ல அவர்கள் தேவ குமாரர்களாக இருக்க முடியாது. அவர்கள் சேவை செய்கின்ற ஆவிகளாக சிருஷ்டிக்கப்பட்டும் நியமிக்கப்பட்டும் இருக்கன்றார்கள்.

தீர்க்கதரிசியும் செய்தியாளனுமாகிய வில்லியம் பிரன்ஹாம் இப்படி சொன்னார்.

“அந்த மகத்துவமுள்ளவர் நித்தியமானவர் தாமே ஒர் மாம்சமாகிய தியோபனியில் தன்னை உருவமைக்க ஆரம்பித்தார். அதை ஒரே வார்த்தையென்றும்” ஒரு சரீரம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதுவே அவர் ஆபிரகாமை சந்தித்தபோது இருந்த நிலை அவர் மெல்கிசேதேக் என அழைக்கப்பட்டார்.அவர் தியோபனி சரீர உருவில் இருந்தார்.

இந்த மகத்துவமான ஆவி தன்னை உருவமைக்க ஆரம்பித்து (சிருஷ்டிபிற்குள்) மற்றும் அவர் இடத்திலிருந்து புறப்பட்டு போன அந்த லோகோசை தேவனுடைய குமாரனாக இருந்தான். நித்திய ஆவியிலிருந்து ஒரே தரிசன உருவமைப்பு இதுவாக இருந்தது. அது தியோபனியாக இருந்தது. அப்படியென்றால் ...சரீரம்... மற்றும் அந்த சரீரம், ஒர் மனிதனை போன்று உருவமாய் இருந்தது.”

“இப்பொழுது எந்த மனிதனும் பிதாவை எந்த நேரத்திலும் பார்த்ததில்லை.” தேவன் சரீரத்தில் இராதபடியினால் ஒருவனும் தேவனைப் பார்க்க முடியாது.தேவன் ஆவியாய் இருக்கிறார்....... அதற்குப் பிறகு ஒரு சிறிய பரிசுத்த வெளிச்சம், ஒரு வளையம் போல உருவாகுவதை காண ஆரம்பித்தேன். அது ஆவிக்குரிய கண்களில் மாத்திரமே பார்க்க முடியும்... அது என்னது? வேதம் வாசிக்கிறவர்களால் “லோகோஸ்”, “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” “அந்த அபிஷேகம் என்று அழைக்கப்பட்டார். மனிதர்களால்; பார்க்க முடிந்ததும் அது இன்னதென்று ஒரு நினைவுத் தோற்றமாய் உருவாக்கப்படக்கூடிய தேவனுடைய ஒரு பங்காய் இருந்தது. அதுவே தேவனுடைய வார்த்தை”

தேவன் **ஆவியாய் இருக்கிறார்**. **வார்த்தை** தேவனாயிருந்தாலும், தேவனுக்குரிய எல்லா வார்த்தையும் அல்ல. வேத சாஸ்திரத்தின் படி பேசுவோமானால் **ஏலோஹிம்மின்** ஆவி பெரிய பங்காயும் அவருடைய வார்த்தை சிறிய பங்காயும் இருக்கிறது என்று சொல்லலாம். (பிந்தினவை முந்தினவையிலிருந்து புறப்படுகின்றது). இந்த சிறிய பங்கு தேவனுடைய தரிசனத்தின் பாகமாய் இருந்தது. (அந்த வார்த்தை என்றும் அழைக்கப்படுவது) மனிதனாய் அவதரித்தது. எனவே அந்த **வார்த்தை வானத்திலிருந்து வந்த கர்த்தர்** (1 கொரிந்தியர்-15:47) யோவான்-3:13 அந்த வார்த்தை, இயேசு கிறிஸ்து என்னும் நபருக்குள் வெளிபடுத்தப்பட்டது.

**தேவனுடைய சிந்தையும், வெளிப்படுத்துதலாகிய அந்த வார்த்தை ஆவியின் சரீரத்தில் அவருக்குள் உள்ளிருந்து வெளியே புறப்பட்டது. அது ஆவியின் சரீரத்திலே தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆரம்பமாயிருக்கிறது. (ஆரம்பிக்கிறவர்,**

**அல்லது தேவனுடைய சிருஷ்டிப்பின் கதாசிரியராக), சகல சிருஷ்டிப்புக்கும் முதல் பெயரானவராயும் அநேக சகோதரர்களுக்கு முதற் பிறந்தவருமாயிருந்தார்.** இந்த வார்த்தை மூலமாகவும் தேவனுடைய எல்லா சிருஷ்டிப்புகளும் உண்டாக்கப்பட்டது.

ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும் சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது. (கொலோசெயர்-1-16,17).

தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அனாதித் தீர்மானத்தின் படியே, (எபேசியர்-3:9) **தேவனுடைய வார்த்தை** இந்த **வார்த்தையின்** சரீரத்தின் மூலமாக வந்தது. தேவன் இதின் மூலமாக பேசி, வெளிச்சம் உண்டாகக் கடவது, என்று சொன்னார். அங்கு வெளிச்சம் உண்டாயிற்று "மீன்கள் உண்டாகக் கடவது", மீன்கள் உண்டாயிற்று. அவர் தேவனுடைய **பிரதிநிதியாக** இருந்தார். இந்த வார்த்தை சரீரத்தினால் (ஆவி) அந்த தேவனுடைய ஆவி தாம் தன் உள்ளத்தில் தாபரித்து (Enmorphe-என்மார்பே) செய்து கொண்டு தமது வேலையாட்களாகிய தீர்க்க தரிசனங்களுக்கு தற்சுரூப்படுத்தினார். இதுபோன்ற வெளிப்படுத்துதலை "தியோபனி" என்று சொல்கின்றோம்.

## தியோபனி (Theophany)

இப்பொழுது தேவனுடைய தீர்மானத்தை வெளிபடுத்தும்படி அவரிடத்திலிருந்து புறப்பட்டு போகும் அந்த **லோகோஸ் மனித** சாயலிலே வெளிபடுத்தப்பட்டது. இந்த லோகோஸ் ஆவியின் சரீரத்தில் வெளிபடுத்தப்பட்ட வார்த்தை என்றழைக்கப்பட்டது. எப்பொழுதெல்லாம் இந்த லோகோஸ்தேவனிடத்திலிருந்து வெளியே வருமோ, அது தன்னுடைய குறிக்கோளை முடித்த பிறகே அவரிடத்தில் திரும்பும்.அதின் சாயல் அதைக் காணக்கூடிய அல்லது தரிசிக்கக்கூடிய மனித சாயலில் இருந்தது. அது காணக்கூடாத உருவமாகஇல்லை. ஒவ்வொரு முறையும் தியோபனியில் வெளிப்படுவது கிறிஸ்துவுக்கு **முன் அடையாளமாகவும்** தற்காலமாகவும் மற்றும் ஒர் குறிப்பிட்ட இடத்திலே மாத்திரமே இருந்தது. தேவனுடைய பிரதான ஆசாரியனே மெல்க்கிசேதேக் அவர் ஒரு முறை வந்தார் என்பதை வாசித்திருக்கிறோம்;, இஸ்ரவேலின் நியாதிபதியாகவும் இரட்சகராகயிருந்ததையும், அதற்கு பின்பு, அவர் ஆபிரகாமின்

நண்பனாயிருந்து, அவனுடன் இனிமையான ஐக்கியம் கொண்டதைப் பார்க்கிறோம்.

ஆபிரகாமும் அவர் மெல்கிசேதேக்காயும் உன்னதமான தேவனுடைய பிரதான ஆசிரியராக இருக்கிறார் என்று அறிந்து, அவனை ஆசிர்வாதித்து தனக்குரிய எல்லாவற்றிலும் தசம பாகத்தை கொடுத்தார்.(ஆதியாகமம்-14:17-20). அவர் தேவனுடைய வார்த்தை என்று நன்றாக அறிந்திருந்தார். மெல்கிசேதேக் இயேசு அல்ல, ஆனால் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்தின் ஊழியத்தின் அடையாளமாக இருந்தார். பவுல் மெல்கிசேதேக்கைப் பற்றி இப்படி எழுதுகிறார்.(எபிரெயர்-7:3). இவன்; தகப்பனும் தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன், இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவு உடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான் (எபிரெயர்-7:3). இயேசுவைப் பற்றிய காரியங்கள் அப்படி இல்லை. அவர் பூமியிலுள்ள தாது பொருள்கள் உள்ள ஒரு சரீரத்தில் பிறந்தார். மற்றும் அவருடைய தாய் கன்னிமரியாள். ஆகவே தேவனைவெளிப்படையாய் தரிசிக்கும் அந்த வார்த்தையாகவும் தமது சிந்தை வெளிப்படுத்துவதினாலும் ஆபிரகாமிற்கு தரிசனமளித்து அந்த மெல்கிசேதேக் இருந்திருக்கிறது. **வார்த்தை** தேவனாய் இருந்தப்படியினாலே,“மெல்கிசேதேக்” **தகப்பன் இல்லாமல்** இருந்தார் என்று பவுல் நேரடியாக சொல்ல முடிந்தது. மெய்யாகவே, **தகப்பன்-குமாரன் என்ற உறவு**, **தேவனுக்கும்**, அவருடைய **வார்த்தைக்கும்** இடையிலிருந்ததில்லை.

அதற்கு பின், மாம்மிரே பள்ளத்தாக்கிலே மூன்று மனிதர்கள் ஆபிரகாமை சந்திக்கும்படி வந்தனர். அதில் மனித வடிவத்திலிருக்கும் ஆவியில் உள்ள தூதர்கள். அவர்கள்; பூமியின் கூர்களால் சிருஷ்டிக்கப்பட்ட சரீரங்களில், தரிசிக்கும் மனித உருவங்களால் மாற்றிக் கொள்ளும்படி தங்களை (Enmorphe-என்மார்பே) செய்து கொண்டனர். ஆபிரகாம் அதிலுள்ள **மூன்றாவது மனிதனை** அடையாளம் கண்டு கொண்டு அவரை **“கர்த்தர்”**, என்று அழைத்தார். இந்த இடத்தில் **தேவனுடைய வார்த்தை** மறுபடியுமாக ஆபிரகாமுடன் புசித்து தோழமை கொள்ளும் தரிசனம் (தியோபனி) ஆனது (ஆதியாகமம்-18வது அதிகாரம் வாசிக்கவும்). கர்த்தருடைய தூதனான அதே மனிதன் தான். இவர் வெவ்வெறு சமயங்களில் வெவ்வெறு ரூபங்களினாலே மற்ற தீர்க்கதரிசிகளுக்கும் வேலையாட்களுக்கும், அவர்கள் காலத்திலே தரிசனமானார். ஒவ்வொரு வித்தியாசப்பட்ட தரிசனங்களும் தேவனுடைய தன்மைகளை இரட்சகராகவும், பரிந்து பேசுகிறவராகவும் பாதுகாக்கின்றவராகவும், நியாயாதிபதியாகவும், நண்பராகவும், தேற்றரவாளனாகவும் போன்ற அநேக பாத்திரங்களை கொண்டு தன்னை காண்பித்ததெல்லாம் முன் அடையாளமாக இருந்தது.

இப்பொழுது இந்த தேவனுடைய சகல பரிசுத்த மனிதர்கள் பார்த்த அந்த மனிதன் **அதே நபராயும் அதே முகம்** உடையவராயுமிருந்தார். அந்த முகம் இயேசுவின் முகமாயிருந்தது. **தேவனுக்கு ஒரே ஒரு முகம் உண்டு. அது வானத்திலிருந்து வந்த கர்த்தராகும்.** இந்த லோகோஸ், அந்த முகத்தோற்றமுடையதாக மாத்திரமே தரிசிக்க முடிந்தது. தேவன் அதை பேசப்பட்டதை நிறைவேற்ற அவருடைய குமாரனை காண்பிக்க வேண்டியதாயிற்று. இயேசு யூதர்களிடத்தில் சொன்னார். உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக்காண ஆசையாயிருந்தான், கண்டு களி கூர்ந்தான் என்றார். (யோவான்-8-56)

மற்றும்,கெத்சமனே தோட்டத்திலே, இயேசுவால் இப்படி ஜெபிக்க முடிந்தது. -(யோவான் 17:5) பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும். யோவான்-13:32, (ரோமர்-8-30). **எனவே, இயேசுவே அந்த குமாரத்துவத்தின் ஆவியாய் இருந்தார். தேவனுடைய லோகோஸூக்குள் வெளிபடுத்தப்பட்டார். உலகத்திலே தேவனுடைய பலவிதமான குணாதிசயங்களை நிறைவேற்றும்படி தேவனுடைய ஒரே குமாரனாக - பரிசுத்த மனிதர்களுக்கு காண்பிக்கும்படி, பெருகவேண்டியதாயிற்று.**

## அவருக்குரிய சிருஷ்டிப்பின் சுய வெளிப்பாடு

தேவனுடைய **அந்த வார்த்தை** (கிரேக்க மொழியில், எபிரேய மொழியில்) வாயில் உச்சரிப்பதைக் காட்டிலும் மேலானதாய் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். **“உலகத்திற்கு நேராகத்திரும்பின தேவனுடைய பாகம்”** என்கிற அவருக்குரிய **சிருஷ்டிப்பின் சுய வெளிப்பாடு** யோவான் அந்த லோகோஸைப் பற்றின “முகவுரை”யினால் அது குருட்டாட்டம் உடையதாயும் அல்லது அதற்கு அப்பாற்பட்டதாய் இருக்கிற சிருட்டிப்பின் கொள்கையாயும் அல்லது ஒரு ஜீவ வலிமையாயும் மாத்திரம் இராமல் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஜீவனுள்ள தேவனுடைய தனிப்பட்ட வெளிப்பாடாய் இருக்கிறது. தேவனுடைய லோகோஸின் உடலோடு தோன்றுதலாய் இயேசு இருந்தார் மற்றும் தெய்வீக வெளிச்சத்தின் உள்ளடங்கிய நித்திய ஜீவன், மகிமையின் சத்தியமும் மனித ஆளுமைக்குள் வெளிப்பட்டதாய் இருந்தது. (யோவான் 1:4,9, 1 யோவான் 1:1-4).

நான் சொன்னது போல, வார்த்தை இயேசுவாக இருக்கவில்லை. யோவான் சொன்னது பிரகாரமாக, வார்த்தை தேவனாய் இருந்தது. ஆனால் இயேசு அந்த வார்த்தை வெளிப்பட்ட, “அதரிசனமான தேவனுடைய தற்சொருபமாய் இருந்தார்”. அவர்

தேவனுடைய **வெளிப்பாடாய் இருந்தார். வார்த்தை என்னவாக இருந்ததோ அதின் அடிப்படையாக இயேசு இருந்தார். பரிசுத்தவான்களுக்குள்ளாக வெளிப்பட்ட தேவ ரகசியமாயும் அந்த ஒரே கிறிஸ்துவுமாய் இருந்தார்.** தேவனால் ஜநிப்பிக்கப்பட்ட ஒரே தேவனுடைய குமாரனாயும், தேவனுடைய “ஒற்றை மரபணு” வாயும் தேவனுடைய மூல வித்தாயும் இருந்தார். பழைய ஏற்பாடு கால முழுவதிலும் பிதாவின் இருதயத்திற்குள் இருந்து அந்த லோகோஸ் வழியாக வெளிப்பட்டவராய் இருந்தார். **இயேசு கிறிஸ்து எப்படி பழைய ஏற்பாடு காலங்களில் முன் உருப்படுத்திக் காட்டப்பட்டாரோ, அப்படியே புதிய காலங்களில் வெளிப்பட்டு அவர் பகிரங்கம் ஆனார். பழைய ஏற்பாடு லோகோஸூக்குள் உள்ளார்ந்த அந்த குமாரத்துவத்தின் ஆவியாய் வெளிப்பட்டார். புதிய ஏற்பாடு மனித உரு ஏந்திய லோகோஸ் எனும் தேவ குமாரனாய் இருந்தார். பழைய ஏற்பாடு, ஆவியின் சரீரத்திற்குள் அந்த லோகோஸ் வெளிப்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில் மனித சரீரத்திற்குள் அந்த லோகோஸ் வெளிப்படுத்தப்பட்டது. பழையதிலும் (ஆவியின் சரீரம்) மற்றும் புதியதிலும் (ஒரு மனித சரீரம்) இந்த இரண்டிலும், அந்த தேவனுடைய லோகோஸூக்கு ஒரே முகம் தான் இருந்தது. அது இயேசு கிறிஸ்துவின் முகமே. (1 யோவான் 4:2-3).**

வார்த்தை என்பது வேறு தேவனாகவோ அல்லது வேறு ஒரு சர்வ வல்லமை உள்ள ஆவியாகவோ இருக்கவில்லை. அந்த ஒரே உண்மையுள்ள சர்வ வல்லமையுள்ள ஆவியாய் இருக்கிற “யாவே” தமக்காக தேவ பிள்ளைகளைக் கொண்டுவரும்படி தமது “சுய ஆலோசனையில்” அவருக்குள்ளாகத் தீர்மானித்தார். அப்படி ஒரு நிலையில் ஜீவனை உருவாக்கவும், அந்த ஜீவனை வாழ்வுக்குக் கொண்டுவர ஒரு **வார்த்தை வித்து** தேவைப்பட்டது. வார்த்தை சரீரமே தேவன் பிரகடனம் செய்யவும், தம்மைத் தாமே வெளிப்படுத்தவும் ஒரு வழியாக இருந்தது. பழைய ஏற்பாடு காலத்திலே, தேவன் தமது தீர்க்கத்தரிசிகளுக்கு தரிசனமாகவோ அல்லது அதரிசனமாகவோ பேசினபோது, அவர் வார்த்தை சரீரத்தின் மூலமாகவும் அதற்குள்ளாகவும் எப்பொழுதும் பேசினார். **தேவனுடைய ஆவியும் அவருடைய வார்த்தையும் ஒன்றாய் இருக்கிறது**. இது **ஏலோகிமாயிருக்கிற** தேவத்துவத்தின் கூட்டொருமையாய் இருக்கிறது. நாம் யாவரும் ஒரு விதையானது அதனதின் சாதியின்படி பிறப்பிற்கும் என்பதை அறிந்திருக்கிறோம். அது தேவனுடைய பிரமாணம். (ஆதி 1:11-12,21, 24-25). ஒரு அடையாளமாக சொல்லுவோமானால், ஒரு ஆப்பிள் விதையானது விதைக்கப்பட்ட பின்பு விதைகள் இருக்கின்ற ஆப்பிள் பழங்களை உருவாக்குகின்ற ஒரு ஆப்பிள் மரத்தை கொண்டு வருகின்றது. அந்த பூமிக்குள் சென்ற

ஆப்பிள் விதையானது மூல ஆப்பிள் விதைக்குள்ளாக உருவானது. ஆகவே அடையாளத்தின் மூலமாக வார்த்தை தேவனுடைய **ஒற்றை மரபணுவாக (விதை) இருந்தது** மற்றும் **அது தேவனாக இருந்தது**. ஆவியாய் இருப்பதெல்லாம் அந்த ஆவிக்குரியதாக இருக்கிறது.

## விதையின்றி ஜீவன் இல்லை

ஒரு ஆப்பிள் விதை விதைக்கும் போது அது தண்டை கொண்டு வரத்தக்கதாக வேலை செய்ய ஆரம்பிக்கும், அதற்குப்பின் இலைகள், குருத்து, கிளைகள் என்று வர ஆரம்பிக்கின்றது. அதற்குப்பின் பூக்கள் துளிர்விட்டு வாடுகின்றது. அதின் சூலகமானது விதைக்கப்பட்ட நேரத்திலே இருந்த அதே விதையுடைய ஆப்பிள்களாக மாறும்படி விரிவடைகிறது. ஆரம்பத்தில் இருக்கின்ற அந்த விதை பல விதமான கட்டங்களில் வெவ்வேறாக வெளிப்பட்டாலும் கடைசி கட்டத்தில் ஒரு விதையாகவே அது வெளிப்படுகின்றது. அது போல, தேவனுடைய விதையாகிய அந்த லோகோஸ், தேவ சிருஷ்டிப்பாய் ஆரம்பித்து, தீர்க்கதரிசிகளுக்கும் முற்பிதாக்களுக்கும் வெவ்வேறு சமயங்களில் பல விதங்களிலும், பிதாவுடைய ஒரே பேரான குமாரனான ஒற்றை மரபணு விதையாய் நமக்கு வெளிப்பட்டதை புரிந்து கொள்கிறோம் (எபிரேயர்-1:2), இந்த கடைசி காலங்களில் தேவனுடைய நிறைவான லோகோஸ் தேவனுடைய குமாரனுக்குள் இருந்தது. ஆகவே **தேவனுடைய வார்த்தையாகிய லோகோஸாய் இயேசு இருந்தார்**. அவர் மனித குலத்திற்கு வெளிப்பாடாய் இருந்தார்.(1 பேதுரு-1:23-25).

தேவன் தமது சொந்த இருதயத்தில் (மையப்பொருளாகிய இருதயத்தின்) இருந்து பிதாத்துவத்தை வெளிப்படுத்துவதற்கு கொண்டு வரப்பட்ட ஒற்றை மரபணுவாகிய தேவனுடைய அந்த வித்தே அந்த லோகோஸாய் இருந்தது. அது பிதாவின் குமாரானாயும், பிதாவின் ஒரே பேரானவராயும், தேவனுடைய சிருஷ்டிப்பின் தொடக்கமாயும், அதசரினசமான தேவனுடைய தற்சொருபமாயும், சகல சிருஷ்டிக்கும் முதல் பேரானவராயும், அநேக சகோதர்களுக்குள்ளே முந்தின பேரானவராயும் இருப்பதற்கும் குறைவாய் அது இருக்கக்கூடாது. ஆக மொத்தம் ஏலோஹிம் தமக்குள்ளாக ஒரு குடும்பத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார். இதுவே தேவத்துவத்தின் இரகசியமாய் இருந்தது. வசனம் (1 திமோ-6:16) எதுவும் தோன்று முன்னே சர்வ வல்லமையுள்ளவர் சிந்தைக்குள் இருந்ததும், நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவேறும்படி அவருடைய தீர்மானமாய் இருந்தது. மனித மாமிசத்தில் பிரகடனப்படுத்திய தேவனுடைய வார்த்தையாய் அவர் இருந்தார். எல்லாவற்றிலும் அவரே முதன்மையாய் இருந்தார்.

இப்பொழுது, வார்த்தை தேவனிடத்தில் இருந்தது என்று (யோவான்-1:1) சொல்லுகிற படியினால் சேரக்கூடாத சர்வ வல்லமையுள்ள ஆவியுடன் வெளிச்சமாகவும் அக்கினி ஸ்தம்பமாகவும் இருந்தது (1 திமோ-6:16), அது தேவனுடைய இருதயமாய் மடியில் இருந்தது (மையப்பகுதி). தேவன், பிதாவாக அவருடைய குமாரன், அவருடைய வித்து என்னும் வார்த்தையைத் தாலாட்டினார். குமாரத்துவத்தின் ஆவியானது வார்த்தைக்குள்ளாக இருந்தது. அந்த குமாரத்துவத்தின் ஆவி வார்த்தை சரீரத்திற்குள் தேவனுடைய குமாரனுடைய இயேசுவுக்குள் வெளிப்பட்டது. எனவே தேவனுடைய குமாரனாகிய இயேசு சிருஷ்டிப்பிலும், மீட்பிலும் ஜீவ வார்த்தையாக இருந்தார். (யோவான் -1:4; 1 யோவான்-1:1). இரட்சகராயாகிய மேசியா மனிதனாய் இருக்க வேண்டும், அப்படி என்றால் வார்த்தை மனித மாமிசம் தரிக்க வேண்டும். அதைச் செய்வதற்கு, தேவன் அவருடைய வார்த்தை வாசம் பண்ணும்படி அவர் ஒரு புதிய சிருஷ்டியை செய்ய வேண்டியதாயிற்று – "... **தேவரீர் ஒரு சரீரத்தை எனக்காக ஆயத்தம் பண்ணினீர்**" (எபி -10:5)ஆம், தேவனுடைய வார்த்தை. பிரகடனப்படுத்த ஒரு மாமிச சரீரம் ஆயத்தம் பண்ணப்பட்டது. (ஒரு குழந்தையின் மாமிசமல்ல). அந்த சரீரம் மனித மரபணுவின் தொடர்பில்லாததாய் இருந்தது. அந்த சரீரம் இயேசுவின் சரீரம். அவர் வயதிற்கு வரும் நேரத்தில் அந்த வார்த்தை அவருக்குள்ளாக வாசம் பண்ணும்படி தேவன் அவரை **ஆயத்தம் பண்ணினார்**. (லூக்கா-1:80, 2:40,52, யோவான்-1:14). (குறிப்பு:லூக்காவின் சுவிஷேசம் இயேசுவை மனித குமாரனாயும் யோவனின் நிருபம் அவரை தேவ குமாரனாயும் கூறுகின்றது. அது அவருடைய மனிதத்துவத்தையும் தேவத்துவத்தையும் குறித்து கூறுகின்றது).

குழந்தை இயேசு பெத்லகேமில் பிறந்த பொழுது, குமாரத்துவத்தின் ஆவியை அவருக்குள்ளாக தேவன் ஊதினார். புதிதாய் பிறந்த குழந்தையாகிய இயேசு ஜீவ ஆத்துமா ஆகி தேவனுடைய ஜீவனை வெளிப்படுத்தும்படி வளர்ந்தார். அந்த நேரம் முதல் ஆவியின் (வார்த்தை) சரீரம் வெளிப்படுவது நின்று விட்டது. **தியோபனிக்கு முடிவு வந்திருந்தும் தேவனுடைய வார்த்தை இன்னமும் இருந்தது**.

இயேசு கிறிஸ்து பாவம் இல்லாதவராயும் முன்பு ஆதாம் விழுந்துபோவதற்கு முன்பு இருந்தது போல **தெய்வீக குணாதிசயம்** உள்ளவராய் இருந்தார். ஆனாலும் இயேசு இன்னமும் கர்த்தராகிய **தேவன் ஆகவில்லை**. அவர் **புத்திர சுவீகாரம்** பெறும்வரை **அபிஷேகம் பண்ணப்படாதவராக** இருந்தார். (கலாத்தியர்-4:5, ... ஹியோத்திசியா... தலைப்பின் கீழாகப் பார்க்கவும்) அவர் அபிஷேகம் பண்ணப்படும் முன்னே (அவருடைய ஞானஸ்நானத்தின் போது) அவர் **வார்த்தையின் நிறைவாக** இருக்கமுடியாது.

**வார்த்தை அவருக்குள் தாபரிக்காமல்** அவர் **தெய்வத் தன்மையுடையவராகவும்**, மனித உரு ஏந்திய தெய்வமாயும் இருக்கமுடியாது.

கொலோசியர் 1:19 - சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,

கொலோசியர் 2:9 - ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.

எனவே, தேவத்துவத்துக்குள்ளாக இயேசு இல்லை. ஆனால் தேவத்துவம் இயேசுவுக்குள் இருக்கிறது.

ஒவ்வொரு மிருகமும், மனிதனும் மற்றும் ஒவ்வொரு ஜீவ ராசிகளும் தங்களுடைய ஜீவனை ஜீவனுள்ள தேவனிடத்தில் பெற்றிருந்த பொழுதும், தேவனுடைய முன் குறிக்கப்பட்ட குமாரத்திகள் மாத்திரமே அவருடைய முன் குறிக்கப்பட்ட திட்டத்திலே அவருடைய வார்த்தையின் பங்காக தேவனுடனே இருந்தார்கள்.

பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும் (யோவான்-6:37ய)

ஆனாலும், நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள். JOHN-10-26-29 - அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார் அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது. (யோவான்-10:26,29)

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். (யோவான்-12:24)

இயேசு கிறிஸ்து “மிகுந்த கனியாகிய குமாரர்களையும் குமாரத்திகளையும் மரித்து கொண்டு வந்த ஜீவ வார்த்தையாகிய அந்த கோதுமை மணியாகவும்” தேவனுடைய (மரித்த) வித்தாகவும் இருக்கிறார். இந்த தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளும் தேவனுடைய ஒற்றை மரபணுவுக்குள்ளாக முன் குறிக்கப்பட்ட வித்துகளாய் இருக்கிறார்கள்.

(கவனியுங்கள் அந்தந்த விதையானது அந்தந்த ஜாதியின்படி விதைகளைப் பிறப்பிற்கும்). ஆகவே, பாவத்தில் இந்த உலகத்தில் அவர்கள் பிறந்திருந்தாலும் முன் குறிக்கப்பட்ட வித்துக்கள் மாத்திரமே குமாரத்துவத்தின் ஆவியை தங்களுக்குள்ளே உடமையாக்கிக் கொண்டிருக்கின்றன.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். (ரோமர்-5:8)

தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம், அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர்-2:4-10)

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், எனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். (1 யோவான்-3:9)

அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. (1 பேதுரு-1:23)

தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து வார்த்தை (ஆவி சரீரம்) தேவ சிந்தைக்குட்பட்ட நித்திய கோட்டுக்கு புறம்பாக வரவில்லை என்பது நமக்கு தெளிவாக உள்ளது. அவர் ஒற்றை மரபணுவாய் இருந்தபடியினால் அந்த வார்த்தை சரீரத்துக்குள்ளாக குமாரத்துவத்தின் ஆவியாக இருந்தார். அவர் வார்த்தையிலிருந்து நேராக வந்து யோர்தான் நதியின் ஞானஸ்நானத்திற்குப் பிறகு மனித உரு ஏந்திய தேவனானார். அப்பொழுது ...வார்த்தை மாமிசமானது... என்று ஆனார். ஆனால் அந்த ஒற்றை குமாரர்களும், குமாரத்தி மரபணுவின் கனிகளாய் இருந்த தேவனுடைய முன் குறிக்கப்பட்ட குமாரர்களும் குமாரத்திகளும், தேவ சிந்தைக்கு உட்பட்ட தங்களுடைய வார்த்தை (ஆவி) சரீரங்களிலிருந்து மாற்று வழியினால் விருப்பமில்லாமல் மாயைக்கு தங்களை உட்படுத்தினார்கள். (ரோமர்-8:20) ஆழம் ஆழத்தை நோக்கி கூப்படுவது போல (சங்கீதம்-42:7) முன் குறிக்கப்பட்ட வித்துக்கள் அந்த ஒற்றை மரபணுவின் வார்த்தையின் பங்காக இருந்தபடியினால் தேவனுடைய வார்த்தையின் வெளிபாட்டிற்கு உள்ளார்ந்து பதில் கொடுக்கின்றன. மரித்த கிறிஸ்து என்னும் விதையின் சரீரத்தின் பாகமாய் இருந்தன. கல்வாரியிலே “கோதுமை” மணியாக மரித்த அவருக்குள் இருந்து வெளியே வந்த அவருடைய “கனிகளாய்” இருந்தன. பரிசுத்தவான்கள்

கர்த்தாராகிய இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்தில் உள்ளார்ந்தவர்களாய் இருக்கிறார்கள்.

இயேசு எப்படி மரியாளின் வயிற்றிலிருந்து ஒரு குழந்தையாய் பிறந்தாரோ, மற்ற தெரிந்து கொள்ளப்பட்ட வித்துக்கள் எல்லோரும் தங்களுடைய தாயின் வயிற்றில் குழந்தைகளாய் பிறந்தார்கள். அது போல தேவ குமாரானவதற்கு இயேசு எப்படி வார்த்தையின் நிறைவைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததோ, அப்படியே தெரிந்து கொள்ளப்பட்ட வித்துக்கள் தேவ குமாரர்கள் ஆகும்படி வார்த்தையைப் பெற்றுக்கொள்வது அவசியம் ஆயிற்று.

## பிதாவைப் போலவே குமாரன்

பழையஏற்பாடுகாலங்களிலேதேவனைக்குறித்துக்காட்டப்பட்டவைகள் எல்லாம் இயேசுவுக்குள் பிரதிபலிக்கிறது. தேவனை இராஜாவென்று கூறப்பட்டதை வாசிக்கின்றோம். (சங்கீதம்-5:2, எரேமியா-10:10, சகரியா-9:9) இயேசு பூமிக்கு வந்த பொழுது அவர் இராஜாவாக ஆராதிக்கப்பட்டார் (மத்-2:2) மற்றும் அவர் தமது மகிமையின் சிங்காசனத்திலே உட்காரும் பொழுது இராஜாவாக இருப்பார். (மத்தேயு-25:31,32; 1 திமோ-1:17 வெளி-11:17,15:3). தேவனை நியாயாதிபதியாக வாசிக்கின்றோம். (சங்-58:11, ஏசாயா-33:22) மற்றும் இயேசுவும் நியாயாதிபதியாய் இருக்கின்றார். (யோவான்-5:30, வெளி-19:11). தேவன் மீட்பராக இருக்கின்றார். (சங்-19:14, ஏசாய-43:14) அப்படியே இயேசுவும் இருக்கின்றார். (கலாத்தியர்-3:13, எபிரேயர்-9:12). "தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார்" (யாத்-3:13-14, ஏசாய-44:6). இயேசுவும் தான் இருக்கிறவராகவே இருக்கிறார் என்று உரிமை கொண்டார். (யோவான்-8:24, 57-58, வெளி-1:17-18). வேதத்திலுள்ள இது போன்ற அடையாளங்களும் மற்றவைகளும் இரண்டு தேவர்கள் உள்ளனர் என்று சாட்சி கூறுவதில்லை. ஆனால் அதற்கு மாறாக கர்த்தராகிய இயேசு மாமிசத்தில் தேவனாய் இருந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது. தேவ வசனம் சகலத்தையும் சிருஷ்டித்த ஒரு தேவனும் பிதாவுமாயும் இருக்கிறவராயும்மற்றும் சகலமும் கொண்டுள்ள ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்பதை வலியுறுத்துகின்றது. (கொலோ-1:16-17)

இதிலே தேவனுடைய சிருஷ்டிப்பின் தீர்மானத்தின் காரணமாய் இயேசு கிறிஸ்து இருந்தார் என்பது தெளிவாய் உள்ளது. தேவனுடைய முன் குறிக்கப்பட்ட திட்டத்திலும் சிருஷ்டிபின் வேலைப்பட்டாலும் இயேசுவே முதற்பேராவனவராய் இருந்தார். தேவ மகிமையிலே அவரே அடிப்படை கருப்பொருளாய் இருந்தார். கிறிஸ்துவுக்குள்ளாக வானத்தையும் பூமியையும் தீர்மானித்த காரண கர்த்தாவாக தேவன் இருந்தார்.

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது, அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். (1 கொரி-8:6)

ஆமென், பிதாவாகிய **தேவனாகவும் கர்த்தரும் கிறிஸ்துவுமாய்** இப்பொழுது இருக்கிற இயேசு (தேவ குமாரன்), தேவனாக ஆராதிக்கப்படுகிறார். ஏனெனில் தேவனுடைய பரிபூரணம் அவருடைய சரீரத்தில் வாசம் பண்ணுகிறது. (அப்-2:36, கொலோ-1:19, கொலோ-2:9, வெளி-4:11, 22:1)

## கிறிஸ்து

திரித்துவ உபதேசத்தை நிரூபிக்க முயன்றும், சில திரியேகத்துவர் "கிறிஸ்து" என்னும் வார்த்தையை எடுத்து இஸ்ரவேல் ஜனங்களைப் பின் தொடர்ந்த அந்த ஆவிக்குரிய கன்மலை முன் இருந்த இயேசு என்று கருதுகின்றனர். (1 கொரி-10:1-4)

வேத வசனங்களில் "கிறிஸ்து" என்னும் வார்த்தை எப்பொழுதும் கிறிஸ்து இயேசு என்னும் மனிதனையே குறிப்பிடக்கூடியது அல்ல. அதை மத்தேயு-24:5ல் இயேசு கள்ளக் கிறிஸ்துகளையும் அல்லது உலகத்தில் வரும் பொய்யான அபிஷேகம் பெற்றவர்களைப் பற்றி இயேசு பேசுவதை வாசிக்கும்போது உறுதிப்படுத்திக் கொள்ளலாம். மற்றும் இயேசு என்னும் பெயரில் இவ்வுலகத்தில் அழைக்கப்படக் கூடியவர்கள் அனேகர் இருந்தாலும் அந்த **ஒரே கிறிஸ்து** என்று சொல்லப்படக்கூடியவர் ஒருவரே.

கிரேக்க வார்த்தையின் படி **கிறிஸ்துவுக்கு கிரிஸ்தோஸ்** என்று சொல்லப்படும். அப்படியென்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தமாகும். தேவ தீர்க்க தரிசிகள் எல்லோரும் Hoi Christoi Theou (ஹோய் கிரிஸ்டோய் தியோ) என்று அழைக்கப்படுகின்றன. அப்படியென்றால் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்று அர்த்தமாகும் மேலும் தேவனுடைய ஆவியினிடத்திலிருந்து அபிஷேகம் வருகின்றது.

அப்போஸ்தலர்-2:36 ல் பேதுரு இப்படி சொல்லுகிறார். "ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்."

இப்பொழுது கிறிஸ்து என்னும் ஆவியாக இயேசு முன் இருந்திருந்தால் இந்த இடத்தில் ஏன் தேவன் இயேசுவை **ஆண்டவரும் கிறிஸ்துவும்** ஆக்க வேண்டியதாயிற்று மற்றும் பிதாவிலிருந்து பிரிந்திருக்கிற ஒரு தனிப்பட்ட ஆவியாய் (திரியேகத்துவர்களின்

தேவத்துவத்திலுள்ள இரண்டாம் நபர் என்கிற நம்பிக்கையின் படி) இயேசு முன் இருந்திருப்பாரானால், தேவனாய் இருக்கிற அந்த ஆவிக்கு கிறிஸ்து என்னும் பட்டம் முரண்பாடாய் இருக்கும் அல்லவா? தேவன் மாத்திரமே அபிஷேக்கிறார். அவர் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளக் கூடியவரல்ல. சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன்கள் மாத்திரமே அபிஷேகத்தை பெற்றுக் கொள்கிறது. எனவே, இயேசு என்னும் அந்த மனிதன், தமது பிதாவாகிய தேவனிடத்திலிருந்து அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்.

எனவே, அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட ஆவிக்குரிய கன்மலையாக அந்த "டபார்" வார்த்தை) இருந்தது. அது வனாந்திரத்திலே சர்வ வல்லமையுள்ள தேவனுடைய ஆவியிலிருந்து வழிந்தோடி இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆவிக்குரிய உணவையும், பானத்தையும் கொடுத்ததாயும் இருந்தது. ஒவ்வொரு உண்மையுள்ள தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இப்பொழுது பங்கு பெறுகின்ற கன்மலையாகிய அந்த கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தை) இருக்கிறது. நிச்சயமாக, தேவ நாமத்தை சுமந்த அந்த தூதன் மூலமாக இஸ்ரவேலுக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தை வந்தது. இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தின அந்த வார்த்தையாக அவர் இருந்தார். அவர் கர்த்தராக தேவனுடைய முகமாக (சமூகம்) இருந்தார்.

## மனித உரு தரித்த

இப்பொழுது, யோவான்-1:14 ஜாக்கிரதையாய் கவனிக்கவும். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்"

அடிக்கடி "ஆவி மாமிசமானதென்றும்" அல்லது "தேவன் மாமிசமானார்" என்றும் சொல்லப்படுகின்றது. அது போன்ற வாக்கியங்கள், பெரிதான சர்வ வல்லமையுள்ள ஆவி மறைந்து மனிதனாக மாறியது என்று சாதாரணமாக எண்ணுகின்றனர். இது கிறிஸ்துவர்கள் தவறாக வழிநடத்தப்பட வழி வகுக்கின்றது. இதற்கு சரி சமமாய் அச்சுறுத்துகிற திரித்துவ கோட்பாடும் "தேவனாகிய குமாரன்" என்னும் அழைக்கப்படுகின்ற இரண்டாம் ஆவி கன்னிமரியாளின் வயிற்றில் தம்மைத்தாமே ஒரு மனித கருவாய் உருமாற்றச் செய்து "தேவ குமாரனாய்" பிறந்தார் என்று கருதப்படுகிறது. அது மாத்திரமின்றி அந்த வார்த்தை (இயேசு கிறிஸ்து தாமே என்று கருதப்படுகிறது). மரியாளின் வயிற்றில் கர்ப்ப சிசுவாக மாறியது என்றும், இதனால், இந்த மனித குழந்தை பிறக்கும் போதே தேவனுடைய குமாரன் ஆகிய தெய்வீகக் குழந்தை என்று கருதுகிறது - இப்படிப்பட்ட கோட்பாட்டை விசுவாசிக்கின்ற கிறிஸ்துவர்கள் இதை தேவ குமாரன் மனித உரு தாங்கியது என்று அழைக்கின்றனர். (அவதாரம், மனித

கடந்தகால நித்தியம்

# அதரிசன ஆவி
# தரிசன லோகோஸ்

நித்திய ஆவி

இருக்கிறவர்
சிந்தை

இருக்கிறவர்
சிந்தை
சுய
ஆலோசனை

நித்திய சுய போதுமானவர் தாமே ஒரே ஆவியாக இருக்கிறார் (3 ஆவிகளாகவோ அல்லது மூன்றில் ஒன்றாக இருக்கிற ஆவியாகவோ அல்ல). அவரே கர்த்தராகிய ஆண்டவரும் எல்லோருக்கும் பிதாவுமாய் இருக்கிறார். உபாகமம் 6:4; எபேசியா; 4:5,6; 1,9-11
“.........**நானே முந்தினவரும் பிந்தினவருமாய் இருக்கிறேன்: என்னையன்றி வேறு தேவன் இல்லை**” - ஏசாயா 44:6

## சிருஷ்டிப்பின் ஆரம்பம்

நித்திய ஆவியின் மனதாகிய சிந்தையில், அல்லது அவரது மடி என்று சொல்லப்படுவதில் அந்த ஒன்றை மரபணு இருந்தது. சகலமும் இதை சூழ்ந்து பரிணாமம் அடைந்தது.

இருக்கிறவர்
வெளிப்படுத்தாத வார்த்தை

(வெளிப்படுத்தப்படாத வார்த்தை) தேவனுடைய சிந்தை **வார்த்தை** என்று அழைக்கப்படுகின்ற ஒரு **ஆவியின் சாரீரத்தில்** வெளிப்படுத்தப்படுகிறது.
“**...நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்..**” ஏசாயா - 43:13

இருக்கிறவர்
வெளிப்படுத்தாத வார்த்தை



யோவான் 1:1
“**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது**”.

இருக்கிறவர்
வெளிப்படுத்தாத வார்த்தை

வெளிச்சம், நட்சத்திரங்கள், பூமி மற்ற அனைத்தும் உண்டாகக்கடவது.



தேவனுடைய சிருஷ்டிப்பின் முதன்மையாக **வார்த்தையானது இருக்கிறவர்** இடத்திலிருந்து வெளியரங்கமானது - அந்த நித்திய அதரிசனமானவர் தம்மைதாம் வெளிப்படுத்துகிறார்

இருக்கிறவர்
வெளிப்படுத்தாத வார்த்தை



**வார்த்தையானது** தன்னைத்தான் வெளிப்படுத்துவதற்கு மாமிசத்தில் உருவத்தை மாற்றினதாக வந்தது.

**தியோபனி**
உதாரணம் - மெல்கிசேதேக் அவருடைய பிரதான ஆசாரியத்துவ வேடத்தின் பாத்திரம். இது கிறிஸ்து இயேசுவின் முன் தோற்றம்


இருக்கிறவர்
வெளிப்படுத்தாத வார்த்தை

**வார்த்தை** மனித சுபாவமுடைய ஒரு சரீரத்தை சிருஷ்டிக்கிறது. (அது தியோபனி அல்ல) - ...குமாரத்துவத்தை... வெளிப்படுத்தும்படி - ஆவி, ஆத்மா மற்றும் சாரீரம்.



(பெத்தலகேம்)
**பிறப்பு,**
**ஒரு பாலகன் பிறந்தார்....**”
**மனிதன்**
**100% மனிதன்,**
மனித சுபாவம் தேவத்தன்மையல்ல.

இருக்கிறவர்
வார்த்தை வெளிப்பட்டது




(யோர்தான்)
**மனுஉரு தரித்தல்**
**ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்....**”
**தேவன் - மனிதன்**
**தேவத்துவம் சரீரத்திலே முழுமையடைந்தது.**
தேவனின் முழுமையான தன்மைகள் மாமிசத்தில் வெளிப்பட்டது.

குறிப்பு:

தேவன் மனிதன் அல்ல.
தேவன் மனிதன் ஆகவில்லை.
தேவன் மாமிசம் ஆக்கப்படவில்லை.
வார்த்தை மனிதன் ஆனது
வார்த்தை மாமிசம் ஆனது
தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டார்
தேவன் இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்தார்

**...கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கின்ற அவருடைய வார்த்தையில் தேவன் இருக்கிறார்...**



இருக்கிறவர்
ஒன்றை மரபணு
(வித்து)
வெளிப்படுத்தாத வார்த்தை
இயேசு என்னும்
பெயர் சூட்டப்பட்ட ஒரு சரீரம்
(எபிரேயர் 10:5)
மற்றும்
1 "ஒரு பாலகன் பிறந்தது".
(பெத்லகேம்)
"ஒரு குமாரன்
கொடுக்கப்பட்டார்"
[யோர்தான்]
2
இருக்கிறவர்
வார்த்தை வெளிப்பட்டது
ஜெநிப்பித்தல்
இவர் என்னுடைய
நேச குமாரன்
இவரில்
பிரியமாயிருக்கிறேன்
(மத்தேயு 3:17)
கிறிஸ்துவாகிய இயேசு
தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம்
சரீரப்பிரகாரமாக அவருக்குள்
வாசமாயிருக்கிறது
(கொலோ 1:19, 2:9)
இருக்கிறவர்
3
[கெத்சமனே]
(யோவான் 17:5, 7:39, 12:28)
RGan
இயேசு கிறிஸ்து
பிதாவினிடத்தில் ஜெபிக்கின்றார்
(யோவான் 17, எபே 1:3,17)
4
[கல்வாரி]
இயேசுவின்
சரீரம் கல்லறைக்குள்
அடக்கம் செய்யப்பட்டது.
(எபேசி 4:8-10, 1 பேதுரு 3:18-22)
கிறிஸ்து இயேசுவின் ஆவி சியோலில் காவலில்
வைக்கப்பட்டுள்ள ஆத்மாக்களுக்கு பிரசங்கம்
செய்யும்படி பூமியின்
தாழ்விடங்களுக்குள் இறங்கினது.
பொல்லாத
மனிதர்களின்
ஆவிகள்
நீதிக்குரிய
மனிதர்களின்
ஆவிகள்
சீயோல்
(பூமியன் தாழ்விடம்)
5 உயிர்த்தெழுதலும்
& வானத்திற்கு
ஏறுதலும்
வானத்திலும் பூமியிலும்
சகல அதிகாரமும் எனக்குக்
கொடுக்கப்பட்டிருக்கிறது
(மத்தேயு 28:18)
மகிமையடைந்த
கிறிஸ்து
இருக்கிறவரும் இருந்தவரும்
வருகிறவருமாகிய
சர்வ வல்லமையுள்ள கர்த்தர்:
நான் அல்பாவும்,
ஓமெகாவும், ஆதியும்
அந்தமுமாயிருக்கிறேன்
(வெளி 1:8, 1:4)
இருக்கிறவர்
இயேசு
6 தேவன் & கிறிஸ்து

உரு ஏற்பு, திருப்பிறப்பு) மேலும் யோர்தான் நதியிலே அவருடைய ஞானஸ்நானத்திற்குப் பிறகு பிதாவாகிய தேவன் தாமே குமாரனாகிய தேவனுக்குள்ளாக மனித உரு ஏந்தினார் என்று விசுவாசிக்கின்றனர். இது போன்ற தேவத்துவத்தை பாழக்குகின்ற உபதேசங்களுக்கு பரிசுத்த வேதாகமத்திலே அடிப்படையே கிடையாது. (கவனிக்கவும்: மனுஉருவெடுத்த என்கிற வார்த்தை இலத்தின் மொழியாகிய ... இன்கார்னாரே... என்னும் வார்த்தைலிருந்து பிரிக்கப்பட்ட வார்த்தை இது மனித உரு ஏந்துவது அல்லது "மாமிசத்தினால் உடுத்திக் கொள்வது").

ஒரு புத்தி தெளிவுள்ள எந்த ஒரு மனிதனும், ஆவியாய் இருக்கின்ற தேவன், மரியாளின் கர்ப்பத்திற்குள் தன்னை தாமே ஒரு மனித சிசுவாக உருமாற்ற முடியும் என்று நம்ப முடிகின்றது. எப்படி ஆவியாய் இருக்கிற தேவன், சிருஷ்டிக்கப்பட்ட தனிமங்கள் அடங்கிய மனித சரீரத்தில் மனித உருவமாக மாறுவார்? ஒரு சிலர் சொல்லுவார்கள் "ஓ, அவர் தேவனாய் இருக்கிறபடியினாலே அவரால் எதை வேண்டுமானாலும் செய்யக்கூடும்" இது போன்ற நபர்கள் தேவனாலேயே சுமக்க முடியாத அளவுக்கு ஒரு பெரிய பாறாங்கல்லை சிருஷ்டிக்க முடியும் என்று மூடத்தனமாய் எண்ணுவார்கள்.

இதை கருத்தாய் ஆராய்ந்து சிந்தியுங்கள். தேவன் மரியாளின் கர்ப்பத்தில் ஒரு கருவாய் வளர்ந்து வந்தார் என்று இந்த அபத்தமான கருத்தை விசுவாசிப்பதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? குழந்தை இயேசு பிறந்த பொழுது, மற்ற குழந்தைகளைப்போல அழுது கொண்டே வெளியே வந்திருப்பார்: அது அழுது கொண்டிருந்த குழந்தை தேவனா? குழந்தை இயேசு மரியாளின் மார்புகளிலே பால் குடித்து இருந்த பொழுது மார்பிலிருக்கும் பாலினால் போஷிக்கப்பட்டது தேவனா? நிச்சயமாகக் கிடையாது. ஏனெனில் தேவன் **ஆவியாய் இருக்கிறார்**. **அவர் மனிதனோ, மாமிசத்தில் உருவாக்கப்பட்டவரோ கிடையாது**. ஏனெனில் (யோவான்-3:6). "மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்."

**தேவனுடைய வார்த்தையாகிய அவருடைய சுய வெளிப்பாட்டின் தற்சொரூபமே "மாமிசமானது", (வெளிப்படையாய் பிரகடனப்படுத்தியது)**. தேவனிடத்திலிருந்து புறப்பட்டுப்போன அந்த **வார்த்தை சரீரமாய்** இருந்தது பழைய ஏற்பாடு காலத்திலே பல விதங்களிலே **தற்காலிகமான தியோபனி** ரூபங்களில் தரிசனமாகி, மற்றும் முழுமையாய் மறைந்து போனதாய் அது இருந்தது. **லோகோஸ் நிரந்தர மனித** உரு எடுப்பதற்கு தேவன் நிர்ணயத்த படியினால் பெத்லகேமில் முற்றுப்பெற்றது.

(ஏசாயா-9:6, யோவான்-1:14). "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம்

அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்."

**"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார், அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேரனவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது."**

மல்கியா-3:1 ல் திரளான ஜனங்களுக்கு முன்பதாக நிறைவேறின தீர்க்க தரிசனமாய் இது இருக்கிறது. "இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான், அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார், இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."

இயேசுவாகிய மனிதன் ஞானஸ்நானம் எடுக்கையில் தேவன்தாமே அவருக்குள்ளாக மனு உரு ஏந்தின போது "வார்த்தை மாமிசமானது" அந்த நேரம் முதற்கொண்டுதான் தேவனுடைய முழு வார்த்தை இயேசு கிறிஸ்துவுக்குள் தாபரித்தது. மத்தேயு-3:16-17, கொலோ-1:19, யோவான்-14:10, கொலோ-2:9.

ஏசாயா-9:6 ன் படி **ஒரு குமாரன்** பாவத்திற்கு பலியாக கொடுக்கப்படுவதை கவனிக்கின்றோமே தவிர, **ஒரு குழந்தை அல்ல** (யோவான்-3:16-18). எனவே அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசுவை, கடைசி ஆதாம் என்றும் அல்லது இரண்டாம் மனிதன் என்று அழைக்கப்படுகிறார். முதலாம் ஆதாம் அல்லது மனிதனோ சிருஷ்டிக்கப்படும் பொழுது, ஒரு தேவ குமாரனாய் இருந்தாரே தவிர ஒரு குழந்தையாக அல்ல. அது மட்டும் அன்றி, தேவன் ஒரு பொழுதும் தியோபனியிலே ஒரு பாலகனாகவோ, ஒரு குழந்தையாகவோ அல்லது ஒரு வாலிபனைப் போல காட்சி அளித்ததில்லை. ஏனென்றால் வார்த்தை சரீரத்திலே அவர் எப்பொழுதும் முதிர்ச்சி அடைந்த நபராகவே காட்சி அளித்தார்.(யோவான்-1:14).

நிச்சயமாக இந்த வசனம் இயேசு பால் குடித்துக்கொண்டிருந்த பாலகனாகவோ அல்லது ஊழியம் இல்லாத வாலிப நாட்களையோ நிச்சயமாக அப்போஸ்தலயோவான் குறிப்பிடவில்லை என்பது நமக்கு தெளிவாகியுள்ளது. ஆனால் **அவர் தேவ குமாரன் தமது ஞானஸ்நானத்திற்குப் பிறகு அவருடைய வாழ்விலும் ஊழியத்திலும் வெளிப்பட்ட மகிமையை** அது குறிக்கிறது. சந்தேகமின்றி கிறிஸ்துவின் வாழ்விலும் மற்றும் ஊழியத்திலும் நித்திய பிதாவின் மகிமையை சாட்சியாக யோவான் (கிறிஸ்துவை பின்பற்றின மற்றவர்) கண்டார். (யோவான்-17) அந்த மகிமைக்குள்

அவருடைய பெயர் மற்றும் அவருடைய வார்த்தையும், வேலையும் இருந்தன. ஆம், **“வார்த்தை மாமிசமானபோது” பிதாவின் மகிமையைக்** கண்டார்கள். அதாவது, **இயேசு கிறிஸ்து என்னும் நபராகிய அந்த மாமிசத்திற்குள்ளாக அந்த வார்த்தையானது பிரகடனப்படுத்தப்பட்டது.**

இயேசு ஒரு விதைக்கு எடுத்துக்காட்டாய் இருக்கிறார். ஒரு விதையான ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு முதிர்ச்சி அடைந்து மகரந்த சேர்க்கை அடைய வேண்டும். அப்பொழுதுதான் அது “மரித்த பின்” கனிகளை கொண்டு வரும் (ஒரு முதிர்ச்சி இல்லாததும் அல்லது மகரந்த சேர்க்கை இல்லாததுமான விதை இதைச் செய்ய முடியாது) அதுபோல, இயேசு குழந்தைப் பருவத்திலிருந்து முதிர்ச்சியடைந்த மனிதனாக வளர வேண்டியதாயிற்று. அதற்குப்பின் அவர் “சுவிகாரம்” பெற்று பின்பு வார்த்தையின் ஜீவனுக்குரிய வல்லமை கொடுக்கப்பட்டது.(லூக்கா-4:18-19). தேவ குமாரனோ மனிதர்களை சேவிக்கும் பொருட்டு ஒரு தீர்க்க தரிசன ஊழியத்துடன் ஒரு வேலைக்காரனாய் வந்தார். (ஏசா-42:1, மத்தேயு-12:17-21, 20:28). எனவே, மனுஷ குமாரன் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. மற்றும் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்க அபிஷேகம் பண்ணப்பட்டார். (லூக்கா-4:18-19). கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்,சிறைப்பட்டவர்களுக்குவிடுதலையையும்,குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், 19. கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு. ஏசாயா-42:6-7, ஏசாயா-61:1, யோவான்-1:32, யோவான்-3:34.

வார்த்தையானது அவருக்குள்ளாக மனித உரு ஏந்தியதால், கனிகளைப் பிறப்பிக்கும்படி இயேசுவால் தனது ஜீவனை கொடுக்க முடிந்தது (யோவான்-11:25-26). இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

இயேசு கிறிஸ்து வெறும் ஜீவனுள்ள ஆத்துமாவாக மாத்திரம் இராமல், ஜீவனைக் கொடுக்கும் ஒரு “உயிர்ப்பிக்கும் ஆவியாக” இருந்தார். (1 கொரி-15:45).

**தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக சரீரத்திலே வாசம் பண்ணினதாலே சர்வ வல்லமையுள்ள ஆவி முழுமையாக முழு பரலோகத்திலிருந்தும் வற்றிப் போய்விட்டது என்ற அர்த்தமல்ல.** ஆவியாய் இருக்கின்ற தேவன், எப்பொழுதும் சர்வவியாபியாய் இருக்கின்றார். (ஏனெனில்

அவர் சர்வ ஞானியும் சர்வ வல்லமையுள்ளவராய் இருக்கிறார்). எனவே, தேவனுடைய எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் இல்லை, ஆனால் தேவன் என்பது எல்லாம் என்னவோ அது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய் இருந்தது. இயேசுவின் சரீரம் தேவனுடைய முழுமையான மகிமையின் பிரதிநிதித்துவமும் தங்குமிடமாய் (ஆலயம்), மாத்திரமாய் இருந்தது. வேறு விதமாய் சொல்வோமானால் அளவில்லாமல் தேவன் தமது ஆவியை குமாரனுக்குள்ளாக வைத்தார். ஆகையால் இயேசு **தேவனுடைய தன்மைகளை முழுமையாய் வெளிப்படுத்தினவராய் இருந்தார்.** யோவான்-17:3ல் இயேசுவின் ஜெபத்தில் ஒரு முக்கியமான அறிக்கையைப் பார்க்கின்றோம். அவர் சொன்னார். யோவான்-17:3.

இந்த அறிக்கை ஒன்றான மெய் தேவனையும் மற்றும் இயேசு கிறிஸ்து நேரடி பிரகடனக்காரராய் அனுப்பட்டதையும் ஆதரிக்கின்றது. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஜீவனுமாய் இருக்கிறார். மற்றும் அவரே ஜீவ வார்த்தையாய் இருக்கிறார்.

யோவான்-3:36-குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை (எபிரேயர்-1:3-3).

இயேசு கிறிஸ்து இப்பொழுது அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமாயும் (கொலே-1:15) மற்றும் தேவத்துவம் பரிபூரணமாய் சரீரத்திலேவாசம்பண்ணினவராயும்(கொலே-2:9)இருக்கிறபடியினால், இயேசு கிறிஸ்துவுக்குப் புறம்பாகாவோ, வெளிப்புறம்பாகவோ தேவனால் தம்மைத்தாமே வெளிப்படுத்துவது கூடாது காரியமாகும். (தன்மனதில் தீர்மானித்தபடி தன் மூல பிரதியைக் கலைக்காமல் மற்றும் அவருடைய அதே சிந்தையைத் தொடரும் படிக்கும்).

## மாமிசம் – மனிதத்துவம்

யோவான்-1:14 Barclay-பார்க்லே வார்த்தையானது மனித உரு எடுத்து நமது மத்தியில் வாழ்ந்தது.

இந்த கேள்வியை மறுபடியுமாக கவனியுங்கள்: வார்த்தை தேவனாயிருந்த படியினால், இயேசுவின் மாமிச சரீரம் தேவனாயிருக்குமென்று அர்த்தமாகுமா?

**இல்லை.** இயேசுவின் சரீரம் கன்னி வயிற்றில் பிறந்ததாயும். பாவமில்லாமல் இருந்ததைத் தவிர மற்ற மனிதனை போலவே எல்லா விதத்திலும் மனிதனாகவே இருந்து வார்த்தைக்காக **தேவன் ஒரு சரீரத்தை ஆயத்தம் பண்ணினார்** என்று பவுல் அப்போஸ்தலன் சொல்கிறார் (எபிரேயர் 10:5). **அந்த மாமிசமானது தேவனல்ல. ஆனால் அவர் தாபரிக்கும் தேவ சரீரமாய் இருந்தது.**

தேவன் வார்த்தையைப் பேசினார். தேவனுடைய **உரைக்கப்பட்ட வார்த்தையினால் லோகோஸ் சகலமும்** உண்டாயிற்று.

ஆதியாகமத்திலே, தேவன் வார்த்தை பேசினவுடன் சகலமும் புலப்பட்டு தோன்றக் கூடியதாய் இருந்தது என்பதை வாசிக்கின்றோம். “வெளிச்சம் உண்டாகக்கடவது” என்றார் அங்கே வெளிச்சம் உண்டாயிற்று. உரைக்கப்பட்ட வார்த்தையே சிருஷ்டிப்பு தன்மை உடையதாயிருந்தது (எபிரேயர் 11:3) அதே உரைக்கப்பட்ட வார்த்தையினால், சர்வ வல்லமையுள்ள தேவன் **வித்தின் உயிர் அணுக்களையும் முட்டை உயிர் அணுக்களையும்** சிருஷ்டித்தார். அதற்குப்பின் உயிர் அணுவைப் பிணைத்து கன்னிமரியாளின் கர்ப்பப்பையில் (கருமுளை) வைத்தார். அந்த குழந்தை பிறந்தவுடன், லோகோஸூக்குள் இருந்த குமாரத்துவத்தின் ஆவி அந்த குழந்தைக்குள் நுழைந்து அது ஜீவ ஆத்மா ஆனது. இந்த குழந்தை ஒரு **குமாரன்** என்னும் அந்தஸ்தை அடையும் வரை அந்த லோகோஸை சுமந்து வந்தது. (ஏசாயா-9:6). பழைய நாட்களில் வெவ்வேறு வழிகளில் பரிசுத்த மனிதர்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பொழுது இஸ்ரவேலுக்கும் உலகத்திற்கும், கன்னி ஸ்திரி வயிற்றில் பிறந்து, தொட்டு உணரக்கூடிய, ஒரு மனிதனாகிய மாமிச சரீரத்தில் அறியப்பட்டிருக்கும்.(I-யோவான்-4:2-3). அந்த மனிதன் இயேசு கிறிஸ்து அவர் மனித குலத்திற்கு தேவனுடைய முழு வெளிப்பாடாய் இருந்தார். அவர் அளவிட முடியாதபடி ஜீவனுள்ள தேவ ஆலயமாயிருந்தார். தியோபனியினால் வந்த **இம்மானுவேல் அல்ல. ஆனால் பிறப்பினால் வந்த இம்மானுவேல். அந்த மனிதனாகிய இயேசு ஒரு சிருஷ்டிக்கப்பட்ட நபர்(ஹீப்ரு:ஆதாம்), ஆனால் தியோபனி அப்படி அல்ல.** வித்தியாசத்தைப் பாருங்கள்? வார்த்தையானது **மனித சுபாவத்தைத்** தரிக்கும்படி வந்தது. ஆனால் மனித சுபாவமே (ஹீப்ரு:ஆதாம்) **தேவனுடைய தன்மை அல்ல**, மற்றும் தேவன் மனிதன் அல்ல (எண்ணாகமம்-23:19). மனித சுபாவம் என்பது சிருஷ்டிக்கப்பட்ட நபருடைய தன்மையாகும். இம்மானுவேல் தியோபனி சிருஷ்டிக்கப்பட்ட நபர் அல்ல, அது ஆவியின் வார்த்தை சரீரமாகிய நபர். ஆனால் தேவ குமாரனாய் இருந்த இயேசு, பரிசுத்த ஆவியினால் கர்பம் தரித்த கன்னிமரியாளின் கர்பத்திலும் மற்றும் உலகத்திலும் பிறந்தவருமாயிருந்த ஒருசிருஷ்டிக்கப்பட்ட நபராய் இருந்தார். (ஹீப்ரு:ஆதாம்)

இயேசுகிறிஸ்துவினுடையஜெனனத்தின்விவரமாவது:அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. (மத்தேயு-1:18 கலாத்தியர் 4:4)

தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எண்ணப்படும். (லூக்கா-1:35)

பிறப்பு என்கிற வார்த்தை கிரேக்க வார்த்தையாகிய “ஜெனிசிஸ்” என்கிறதிலிருந்து தோன்றுகின்றது. அதின் அர்த்தம் ஆரம்பம், தோற்றம். புத்திர விருத்தி. ஆனால் பரிசுத்தாவி மரியாளை நிழலிட்ட போதே இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இருந்ததைக் கவனிக்கவும். (ஆரம்பம், தொடக்கம்) அந்த குழந்தையின் இயற்கைக்கு மேன்பட்ட கருத்தரிப்பினால் பிறந்தார் என்பதே இயேசு தேவ குமாரன் என்பதற்கு சாட்சியாகும்.

(குறிப்பு: ஒரு சில ஸ்தாபனங்களிலே பரிசுத்த ஆவி உண்டாக்கின வித்தினாலே மரியாளின் முட்டைகள் வளமடைய செய்யப்பட்டது என்று போதிக்கின்றன. இயேசு பூமிக்குரிய மனிதனாய் முழுமையாய் இருப்பதற்கு அது அவசியப்பட்டது என்று நிலைநிறுத்த முயலுகின்றன. இந்த போதனையானது இயேசு தேவனுடைய ஒரே பேரான (ஒற்றை மரபணு) குமாரன் என்கிற அடிப்படையான சத்தியத்தை கிழித்துவீசுகின்றன. கன்னிமரியாளை (லூக்கா-1:35) பரிசுத்தாவி நிழலிட்டு வித்தை அறிமுகப்படுத்தின காரணம். ஏதோ அந்த முட்டைகளை சுத்தப்படுத்துவதற்கோ அல்லது பரிசுத்தப்படுத்தி வளமுடைய செய்வதற்கோ அல்ல. ஓர் ஆண் குழந்தையின் ஆரம்பத்தை அவள்மேல் கொண்டு வருவதற்கு தேவனுடைய வல்லமையாய் இருந்தது. (மத்தேயு-1:18-20) அவள் அந்த குழந்தைக்குத் தாயாய் இருப்பதற்கு மரபணுவிலுள்ள விழுந்து போன சுபாவம் குணாதிசயத்தின் தொடர்ச்சி இந்த வித்தும் முட்டையுமாய் இரண்டும் அதை சுமக்கிறது. விழுந்து போன மனிதனுடைய புதிய சிருஷ்டிப்பு ஆவிக்குரிய மறு பிறப்பில் தான் உண்டாகும் தேவன் மரியாளின் முட்டைகளில் ஒன்றை எடுத்து அதில் இயற்கையிலே இருக்கும் மரபணு தொடர்ச்சியில் இருக்கும் குணாதிசயத்தை நீக்கி தமது குமாரனுடைய கருத்தரித்தலுக்கு இதை எடுத்தால் முரண்பாடாயிருக்கும். எனவே, சந்தேகமின்றி, இயேசுவின் கருத்தரித்தலையும், பிறப்பையும் கொண்டு வந்த, வித்தும் அந்த முட்டையாகிய இரண்டும்தேவனுடைய சிருஷ்டிப்பாய் இருந்தது.)

இப்பொழுது மரியாளின் கர்பத்துக்குள்ளாக பரிசுத்தாவியைக் கொண்டு அந்த கருவானது வைக்கப்பட்ட பொழுது அது சிசுவிலிருந்து வளர்ச்சியடைந்து குழந்தையாக மாறியது. **அந்த கரு தேவனல்ல. அந்த சிசு தேவனாக இருக்கவில்லை.** அந்த குழந்தையும் தேவனாக **இருக்கவில்லை**. அந்த முழு உயிரணுவின் வளர்ச்சியின் முழு செயல்பாட்டின் போது, அந்த குழந்தையானது மற்ற மனித குழந்தைக்கு நடைபெறும் அதே முறையில், தொப்புள் கொடியின் மூலமாக தன் தாயின் இரத்தத்திலே உள்ள ஊட்டச்சத்துகள் சரீரத்தின் வளர்ச்சிக்கு பூமியின் தனிமங்களிலிருந்து வரக்கூடிய சத்துப்பொருட்கள் அந்த சரீரத்தின் வளர்ச்சிக்குக் காரணமாயிருக்கிறது. இந்த தனிமங்கள் பூமியின் பருப்பொருளாய் இருக்கிறது. **ஆனால் தேவனோ**

**ஆவியாய் இருக்கிறாரே தவிர பூமியின் பருப்பொருளுக்குள் அமைந்தவரல்ல**.

அந்த குழந்தையானது “பரிசுத்த குழந்தையாகவும்” பரிசுத்த பொருளாயுமிருந்தது. அதைக்குறித்துச் சொல்லப்பட்ட எல்லாம் நிறைவேறவும் அதை வெளிப்படுத்தவுமே அது பிறந்தது. “வேத வசனங்கள் நிறைவேறவேண்டுமென்று” இயேசு சொன்னார் (மாற்கு-14:49, மத்தேயு-1:22). இரட்சகராகப்போகும் அந்த குழந்தைக்கு அங்கேயிருந்த ஒரு சில மேய்ப்பர்கள் தங்களுக்குரிய மரியாதையைச் செலுத்தினார்கள், மற்றும் அந்த மூன்று சாஸ்திரிகள் அந்த இராஜாவாக ஆகக்கூடிய குழந்தைக்கு மனந்திறந்த புகழுரை செலுத்தினர்.

(குறிப்பு: அனேக கிறிஸ்துவர்கள் அந்த மேய்ப்பர்களும் அந்த சாஸ்திரிகளும் அவரை “வணங்கினதால்” குழந்தை இயேசு கடவுளாக இருக்கவேண்டுமென்று விவாதிக்கின்றனர். “ஆராதனை” க்குரிய வார்த்தைக்கு ஒன்று மேற்பட்ட அர்த்தமுடையதாயிருக்கிறது. வெளிப்படுத்தின விஷேசம் 3:9 ன் படி ஒரு சில சாத்தான் கூட்டாத்தாராகிய யூதர்களை சபையின் பரிசுத்தவான்களின் பாதப்படிக்கு அவர்களை கொண்டு அவர்களை ஆராதிக்க வைப்பார் என்று எழுதப்பட்டுள்ளது. இங்கே ஆராதனை என்று சொல்லப்படும் போது சரணடையச் செய்வது என்று அர்த்தமாகும். தேவன் சபையோடு கூட இருந்தபடியினாலே எவ்வளவாய் தமது சபையை நேசிக்கிறார் என்பதை, அந்த சபையின் சத்ருக்களை எல்லாம் சபையின் பாதத்திற்குள்ளாக கொண்டு வருகிறார். அதற்காக பரிசுத்தவான்களை ஆராதிக்கும் பொருட்டாக தேவன் வைக்கவில்லை. மாற்கு-15:19 ன் படி போர்ச்சேவகர்கள் உண்மையாகாவா கிறிஸ்துவை ஆராதித்தார்கள்? அது பரிகாசம் செய்யும் ஆராதனையாக இருந்தது.) ஆனால் இயேசு ஒரு பாலகனாக, ஒரு குழந்தையாக மற்றும் ஒரு மனிதனாக இரட்சகர் மற்றும் இராஜா என்னும் உள்ளாற்றலுடையவராய் இருந்தார். (ஹீப்ரு: யாசுவா-தேவனுடைய மீட்பின் நாமம்). கல்வாரி சிலுவையிலே தன் ஜீவனை வைத்த பின்தான் அவர் இரட்சகரானார், மற்றும் அவருடைய ஆயிர வருடம் அரசாட்சியில் தான் இராஜாவாகிறார்.

தேவன் ஒரு முறை **மாத்திரமே மனு உரு ஏந்தினார்**, அது இயேசுவின் தண்ணீர் ஞானஸ்நானத்தின் போதே. இயேசு தண்ணீர் ஞானஸ்த்திற்கு முன்பதாக **அந்த முப்பது வருடங்கள், சர்வவல்லமையுள்ள தேவனாக இருக்கவில்லை (அல்லது அந்த வார்த்தை மனு உரு ஏந்தவில்லை) அவர் வெறும் மனிதனே, எப்படி ஆதாம் பாவத்திற்கு முன்பதாக ஒரு மனிதனாயும் தேவனுடைய மகனாயும் இருந்தாரோ, அப்படியே இவரும் தேவப்பிள்ளையாக இருந்தார்.** (அந்த **இயேசுவின் ஆவி** தேவனுடைய **ஒற்றை மரபணுவாக** இருந்தது. ஆனால் **ஆதாமின் ஆவியும்** மற்றும் மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்குரிய **ஆவிகளெல்லாம்**

தேவனிடத்திலிருந்து வந்த **அணுக்கள்** மாத்திரமே.) அவர் நித்திய தேவனிடத்திலிருந்து நேரடியாக வந்ததினாலே, இயேசு பூரணராயும் பாவமில்லாதவராயுமாயிருந்தார். அவர் நித்திய ஜீவனுடையவாராய் இருந்தார். கல்வாரியில் தன் ஜீவனை வைக்காமல் இருந்திருப்பாரானால், மாமிசத்தின்படி ஏறக்குறைய இரண்டாயிரம் வயதுள்ளவாரயும் இன்னமும் இந்த நாள் வரை பூமியில் உயிருடன் இருந்திருப்பார். எனவே, தன்னுடைய ஜீவனுக்குரிய முதல் முப்பது ஆண்டுகளில், இயேசு மனிதர்களுக்கு மத்தியிலே வெறும் மனிதனாக இருந்தார். இந்த காலக்கட்டத்தில் அவர் பரிசுத்தாவியினால் போதிக்கப்பட்டு ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோப்பைப் போல **விசுவாசத்திலே நடந்தவராய்** இருந்தார். அவர் **விசுவாசத்திலே வளர்ந்து** கற்றுக்கொண்டார்.

பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. (லூக்கா - 2:40)

வெளிப்பிரகாரமாக அவருக்குள் விசேஷமாக ஒன்றும் காணப்படவில்லை.

அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை, அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. (ஏசாயா-53:2).

(லூக்கா-2:52 இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும் தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்). தேவனுடைய குமாரனாக உறுதிக் கூறப்பட முன்னே இயேசு, “தேவ குமாரனாய்” இருந்தும் வார்த்தையில் அவர் வளர வேண்டியதாய் இருந்தது.

## ஹியோதெசியா

பின்பு அவருடைய புத்திர **“சுவீகாரத்தின்”** நாள் வந்தது. (கிரேக்க:ஹியோதெசியா-**வழக்கமாக வெறும்** பிறப்பினால் உண்டாகும் உறவாய் இராமல் குமாரத்துவத்தை மேன்மைபடுத்தி, **ஒரு குமாரன் என்ற ஸ்தானத்தைப்** பொழியப் பண்ணுவது. பொதுவாக இது பகிரங்கமாக ஏற்றப்படுகிறது. (காலத்தியர்-4:5) அவர் முப்பது வயதுள்ளவராய் அவருடைய ஞானஸ்நானத்தின் போதே இது ஏற்றப்பட வேண்டுமென்பது முன் நியமிக்கப்பட்டிருந்தது. அந்த நாளிலே, வானங்கள் திறக்கப்பட்டு சர்வ வல்லமையுள்ள ஆவி அவருக்குள்ளாக இறங்கி அவருக்குள்ளாக தாபரித்தார். **தேவன் மனிதனாகிய இயேசுவுக்குள்ளாக மனு உரு ஏந்தினார்**. அதாவது **மாமிசத்திற்குள்** நம்முடனே கூட இருந்த **இம்மானுவேல் என்னும் தேவன்** (குறிப்பு:

சீக்கிரமாக பாவ மனுஷனாகிய அந்திக்கிறிஸ்துவுக்குள், சாத்தான் தாமே மனு உரு ஏந்துவான்).

இந்த “புத்திர சுவீகாரம்” ஆனது, அவருடைய பிதாவினால் அவர் மேல் செலுத்தப்பட்ட நிலையாயும், அவர் யார் என்பதையும் பகிரங்கப்படுத்தியது, இயேசுவுக்குள்ளாக தேவன் மனு உரு ஏந்திய போது பரலோகத்திலிருந்து சர்வ வல்லமையுள்ள தேவனடைய ஆவி முற்றிலுமாக நீக்கப்பட்டு இயேசுவின் சரீரத்திற்குள் வாசம் பண்ணினது என்று அர்த்தமாகாது. ஆனால் இதற்கு மாறாக விசுவாசிக்கின்றவர்கள் இந்த வசனத்தை புரிந்து கொள்ளாதபடி இருக்கின்றன.

தேவன் இயேசுவுக்குள் வாசம் பண்ணி, பிதா அவருக்குள் இருந்திருப்பாரானால், பின்பு எதற்காக இயேசு எப்பொழுதல்லாம் ஜெபித்தாரோ அப்பொழுதெல்லாம் தன் கண்களை உயர்த்தினார். (யோவான்-17:1,1:41)? (குறிப்பு: ஒரு சில கிறிஸ்தவர்கள் இயேசு தமக்குள் இருக்கிற பிதாவினிடத்தில் அல்லது தம்மிடத்திலேயே அவர் ஜெபித்தார் என்று விசுவாசித்து ஏசாயா-9:6 தவறாக இடத்தில் பொருத்துகின்றனர்.


**தேவன் ஜீவனாக இருக்கிறார். தேவனுக்கு புறம்பாய் எந்த ஜீவனும் இல்லை.** தேவன் அதரிசனமாய் இருக்கிற படியினால் (கொலே-1:15, ஏசாயா-45:15), சிருஷ்டிப்பு வேலையின் ஆரம்பித்திற்கு முன்பதாக, தம்மைத்தாமே **வார்த்தை** என்னும் தரிசிக்கும் சரீரமாகிய உருவத்தில் தம்மைத்தாம் வெளிப்படுத்துவதற்கு தமது சுய ஆலோசனையில் அவர் தெரிந்து கொண்டார். இந்த வார்த்தையில் ஜீவன் இருந்த படியினால் இந்த வார்த்தையைக் கொண்டே சகலத்தையும் சிருஷ்டித்தார்.(யோவான்-1:3-4). **தேவன் தம்முடைய ஆவியின் ஜீவனை தமது வார்த்தையில் வைத்தார்.** (யோவான்-6:63, ரோமர்-8:2,10 2 கொரி-3:6, பிலிப்பியர்-2:16, 1 யோவான்-1:1).

தேவனுடைய ஜீவன் அவர் வார்த்தையில் இருந்தது. எனவே மனிதனாகிய இயேசுவை தேவனுடைய வார்த்தையின் பரிபூர்ணமே நிரப்பிற்று. வார்த்தை எங்கே இருந்ததோ, அங்கே தேவனுடைய ஆவியும், தேவனுடைய ஜீவனும் இருந்தது. இப்படித்தான் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக தேவனுடைய ஆவி வாசம் செய்தது, மற்றும் வார்த்தையைப் பெற்றுக்கொண்டதின் நிமித்தம் நமக்குள் வாசம் செய்கின்றார். வசனம்-(யோவான்-10:34-36)

தேவனுடைய ஆவி தமது வார்த்தையில் இருக்கிறார். அதே நேரத்தில் பரலோகத்தில் தமது சொந்த ஒளியிலும் தேவன் வாசம் பண்ணுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்து, “**கைகளினால் செய்யப்படாத, பரிபூரண கூடாரமாய் இருந்தார் என்று சொன்னார்** (எபிரேயர் 9:11). இஸ்ரவேலின் புத்திரரின் கரங்களைக் கொண்டு

மோசோயின் கூடாராமானது வடிவமைக்கப்பட்டது. அந்த கூடாரத்தைக் கட்டி முடிக்க ஒன்பது மாதங்கள் பிடித்தது. (படிக்கவும் யாத்திராகமம் 25-29, 35-40) மற்றும் அந்த நியமிக்கப்பட்ட நாளிலும் அந்த சமயத்திலும் அந்த கூடாரமானது எல்லா விதத்திலும் ஆயத்தமாகி உருவாக்கப்பட்ட போது, “ஒரு மேகமானது இந்த கூடாரத்தை மூடி, **மற்றும் கர்த்தருடைய மகிமையானது கூடாரத்தை நிரப்பினது**” (யாத்திரகம் 40:34). அந்த வார்த்தையின் ஜீவன் சேர்த்து வைக்கப்பட்ட அந்த உடன்படிக்கைப் பெட்டியின் மேல் ஷெக்கினா மகிமை வாசம் பண்ணினது. அந்த உடன்படிக்கை பெட்டிக்குள் இரண்டு கற்பலகைகளும் மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரமும் ஆரோனின் துளிர்த்த கோலும் இருந்தன (எபிரேயர் 9:4). அது போல இயேசு கிறிஸ்துவும் வடிவமைக்கப்பட்டு யோர்தான் நதியில் அவர் ஞானஸ்நானம் பண்ணப்படும் அந்த நாளுக்காகவும், அந்த சமயத்திற்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டார். அவர் தண்ணீருக்குள்ளாக இருந்து எழுந்து அந்த நதியில் அவர் நின்ற போது, வானங்கள் திறக்கப்பட்டு தேவனுடைய **ஷெகினா மகிமையானது இறங்கி வந்து, அவருக்குள்ளாக தாபரித்தது**. (மாற்கு 1:9-11, யோவான் 1:14, மல்கியா 3:1)




திரித்துவ குறியீடு



பிரான்சில் தக்னானிலுள்ள கத்தோலிக்க சபையில் காணக்கூடிய திரித்துவத்தின் குறியீடு

இப்பொழுது, இயேசு அல்லது வார்த்தை (பிதா என்று நாம் அழைக்கக்கூடிய) சர்வ வல்லமையுள்ள ஆவியுடன் கூடி வியாபிக்கும்

இரண்டாம் தேவனாயும், இருந்து அப்படியே நேரடி மாமிசமாய் ஆகியிருந்திருப்பாரானால் (அதாவது, ஆவிலிருந்து மாமிசமாய் மாறுவது) மற்றும் தேவன் குழந்தையாய் பிறந்திருப்பாரானால், தேவனே தேவனுக்குள்ளாகத் தாபரித்தார் என்று தான், நாம் முடிவு செய்ய முடியும். இது வேத வசனத்துடன் ஒத்துப் போகிறதா?

அந்த சர்வ வல்லமையுள்ள தேவன் மனிதனுக்குள்ளாக தாபரிப்பார் என்பதற்கு மோசேயின் கூடாரம் முன் நிழலாயிருந்தது "**தேவன் மாமிசத்திற்குள் (மனிதன்)** தாபரித்தார்" அல்லது அப்போஸ்தலன் பவுல் எழுதினது போல, "**தேவன் கிறிஸ்துவுக்குள் (அந்த அபிஷேகம் பண்ணப்பட்டவர்)** இருந்தார்". (2 கொரி 5:19) பரிசுத்தாவியானவர் தேவனுடையவேலையை அவர் செய்யும்படி இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் பண்ணினவர் அவருடைய வார்த்தையை அவருக்குள் வைத்தார்.

**அந்த ஞானஸ்நானத்தின் போது யோவான்ஸ்நானன் தேவனுடைய மூன்று நபர்களை பார்க்கவில்லை** (திரித்துவக்காரர் வலியுறுத்துவது போல). யோவான் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு மற்றும் அதரிசனமான தேவனுடைய ஆவியை புறாவின் வடிவத்தில் வானத்திலிருந்து இறங்கி வந்து இயேசுவுக்குள் தாபரித்ததைக் கண்டான். அந்த நேரத்தில் தாமே பரிசுத்தாவியின் முழுமையினாலும் **அளவில்லாமலும் நிரம்பினவராய்**, மற்றும் பிதாவினால் சகலமும் அவருடைய கரங்களுக்குள்ளாக வைக்கப்பட்டிருந்தது (லூக்கா 4:1, யோவான் 3:34-35). கர்த்தருடைய கிறிஸ்துவாய் இருப்பதினாலே, அவர் பிசாசினாலே சோதிக்கப்பட்டவராயும், மற்றும் நித்திய பிதாவின் சிந்தையையும் சித்தத்தையும் வெளிப்படுத்த வேண்டியவராய் இருந்தார்.(குறிப்பு: ஞானஸ்நானத்திற்கு முன்பதாகவே இயேசு கிறிஸ்து பரிசுத்தாவியில் நிரம்பினவராய் இருந்தார் என்பது வெளிப்படையானது, அப்படித்தான் தேவனுடைய பரிசுத்தவான்கள் இருந்தார்கள்). ஆனால் அதற்காக ஒரு சில திரியேகத்துவர்கள் வாக்குவாதம் செய்வதுபோல அவர் மாமிச உருவெடுத்த தேவனாகவில்லை. யோவான் ஸ்நானன் கூட பிறப்பதற்கு முன்பதாகவே பரிசுத்தாவியில் நிரப்பப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (லூக்கா –1:15) ஆனால் அதற்காக அவன் தேவனாகவில்லை. அநேக விசுவாசிகள் பெந்தகோஸ்தே நாளுக்குப் பிறகும் பரிசுத்தாவியில் "நிறைந்தவர்களாய் இருந்தார்கள்" (அப்போஸ்தலர் 6:3,5 7:55, 11:24). ஆனால் அவர்கள் தேவன் ஆகவில்லை லூக்கா 4:1 மற்றும் யோவான் 3:34-35 உள்ள வசனங்கள் இயேசு யார் என்றும் மற்றும் ஞானஸ்நானத்திற்கு பின்பு என்னவாக இருந்தார் என்பதை தெளிவாக வலியுறுத்துகின்றது:

1. அவர் அளவில்லாமல் ஆவியில் நிறைந்தவராய் இருந்தார்.
2. தேவன் சகலத்தையும் அவருடைய கைகளில்; கொடுத்தார்.

கிறிஸ்து இயேசு தேவனுடைய குணாதிசயத்தின் நிறைவுகளை சுதந்தரித்தவராயும், மற்றும் அவரைப் பற்றி எழுதப்பட்ட அனைத்தையும் நிறைவேற்றக் கூடியவராயும் இருந்தார். (அவர் தம்முடைய ஞானஸ்நானத்திற்கு முன்பதாக எந்த ஒரு அற்புதங்களையும் செய்யவில்லை என்று நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்) மற்றும் கிறிஸ்துவை மெய்யாய் கண்ட யாவரும் நித்திய பிதாவைக் கண்டிருக்கிறார்கள் (யோவான் 14:9), ஏனெனில் அந்த நித்திய பிதா அந்த மாமிசத்தில் வாசம் பண்ணினார் (யோவான் 14:10, ஏசாயா 9:6).

(**மாமிசத்திற்குள் வெளிப்பட்ட தேவனாக இயேசு இருந்தார்** 1 திமோ 3:16). தேவன் இயேசு மூலமாகக் கிரியை செய்தார். தேவன் அவருக்குள் வாசம் பண்ணினார் என்பதை இயேசுவின் வேலை அறிவித்தது. **அவர் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சிந்தையாக (லோகோஸ்) இருந்தார். அவரே மனித தேவனாகவும், மாமிசத்தில்; உருவெடுத்த தேவனாகவும் இருந்தார்.** அவர் நம்முடைய இரட்சகராய் இருக்கிறார். எனவே நாம் மீட்கப்படுவதற்கும் ஒரு புதிய இருதயத்தையும், ஒரு புதிய ஆவியையும் பெற்றுக்கொள்வதற்கு அவரை விசுவாசிக்க வேண்டும். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும் என்றான். (யோவான் 3:36). **அவரே பகிரங்கப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தையாய் இருந்தார். பிதா குமாரன் என்று ஸ்தாபிக்கப்பட்ட அந்த உறவினால் (பெத்லகேமில் ஆரம்பிக்கப்பட்டது). ஜீவனுள்ள தேவன்தாமே தேவக்குமாரன் மூலமாக மறுபடியும் பிறந்த விசுவாசிகளை, குமாரர்களும், குமாரத்திகளும் ஆகும்படிக்கு சாத்தியமாக்கிக் கொடுத்தார்.** (சங்கீதம் 89:26-27, எபேசியர் 1:5, 2 கொரி 6:18) தேவனுடைய பிதாத்துவம் தேவனுடைய குமாரனுக்குள்ளாக வெளிப்பட்டதினால், நித்திய பிதா என்னும் பட்டமுடையவராய் இருக்கிறார். (ஏசாயா 9:6)

## அவருக்குள்ளாக ஜீவன் இருந்தது

இதை உற்று கவனிக்கவும், அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. (யோவான் 1:2,4)

அப்போஸ்தலன் யோவான் சொல்லுகிறார் தேவனிடத்திலிருந்து வந்த வார்த்தைஜீவனாகவே இருந்தது.அந்த வார்த்தையின் ஜீவன் மனிதர்களுக்கு ஒளியாக இருந்தது. **ஜீவன் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. அவரே ஜீவனாக இருந்தார். ஆனால் இயேசுவுக்குள்ளாக அது அப்படியில்லை.**

ஏனெனில்,பிதாவானவர்தம்மில்தாமேஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். (யோவான் 5:26)

**இயேசுவுக்குள்ளாக ஜீவனில்லை ஆனால் பிதாவாகிய தேவனே தமக்குள்ளாக ஜீவன் இருக்கும்படி அவருக்கு வல்லமை கொடுத்தார். ஆம், ஜீவனுக்குரிய வல்லமை, வெளிச்சத்திற்குரிய ஜீவன் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டது. எனவே வார்த்தை தேவனாய் இருந்ததே தவிர வார்த்தை இயேசு அல்ல. ஆனால் இயேசு வெளிப்பட்ட அந்த வார்த்தையாய் இருந்தார். ஜீவனுக்குரிய வெளிச்சம் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக இந்த உலகத்தில்வந்தது.** ஆகவே இயேசு இப்படி சொன்னார்.

மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார். (யோவான் 8:12)

இந்தமுக்கியமானகட்டத்தில்ஒருசிலவசனங்களும்வார்த்தைகளும் ஆவியானவரினாலே இயேசுவின் பால் பருவ நாட்கள், குழந்தைப் பருவம் மற்றும் அவருடைய முதிர்ச்சியைக் குறித்தும் வைக்கப்பட்டதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்”. (ஏசாயா 9:6)

“பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது” (லூக்கா 2:40).

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். (லூக்கா 2:52)

(“கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார், சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்) (ஏசாயா 61:1).

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

“உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல்” (யோவான் 3:17).

இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: பிதா என்னை அனுப்பினது போல (யோவான் 20:21)

கடைசியிலே அவன்: என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான். (மத்தேயு 21:37)

தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார், தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.(யோவான் 3:34-35)

தெளிவாக **இயேசு குமாரனாக பிறக்கவில்லை. பாலாகனாக பிறந்து குழந்தையாக வளர்ந்து கற்றுக் கொள்ளும்போது அவர் அறிவிலே வளர்ந்தார்.** ஒரு குமாரனாக தேவனுடைய நிறைவான குணாதிசயங்களுடையவராக அபிஷேகம் பண்ணப்பட்டு தேவனுடைய எல்லாவற்றிலேயும் பொறுப்புக்குரியவராக வைக்கப்பட்டார். **அவர் உலகத்தின் இரட்சகராக இருப்பதற்கு அவர் அனுப்பப்பட்டு ஒரு குமாரனாய் கொடுக்கப்பட்டார்.** சந்தேகமின்றி,ஒரு குமாரனாக "புத்திர சுவீகாரத்தை" ஒரு முதிர்ச்சியடைந்த பிறகே கிறிஸ்துவாகிய இயேசு அனுப்பபட்டார் என்பதே சத்தியம். ஒரு முதிர்ச்சியடைந்த குமாரனாக ஆவியினால் நன்றாகக் கற்றுக்கொண்ட தேவகுமாரனாக தான் அனுப்பப்பட்டார் என்று சொல்லலாமே தவிர பாலகனாக அல்ல (ஹியோதெசியா பார்க்கவும்)அதற்குப் பிறகு தேவனுடைய வேலைகளை சுமக்கிறவராயும், அவருடைய நாமத்தை வெளிப்படுத்தக் கூடியவராகவும் மற்றும் அவருடைய வார்த்தைகளை சொல்லக் கூடியவராயும்இருந்தார் (யோவான் 17 : 3-8).

அது போல, தேவன் நம்மை இரட்சித்தபோது, குமாரர்கள் என்னும் புத்திரசுவீகாரத்தை நாமும் பெற்றுக்கொள்ளும்படி தேவனுடைய குமாரனின் ஆவியை நம்முடைய இருதயத்தில் பெற்றுக் கொண்டோம் (காலத்தியர் 4:4-7). ஆனால் நம்முடைய "புத்திர சுவீகாரத்தை" எப்பொழுது உணர்ந்து கொள்வோம்? கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் பரிபூரணப்படுத்தப்படும்போதும் (எபேசியர் 4:6-12) மற்றும் நமது சரீரங்கள் மீட்கப்படும்போதுமே.

அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோமர் 8:23).

இது நடைபெறும்போது பரிசுத்தவான்களின் "புத்திரசுவீகாரம்" சம்பவித்து"தேவனுடையகுமார்களாகப்பிரகடனப்படுத்தப்படுவார்கள்" (ரோமர்-8:19) அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திலே மறு ஜென்மக்காலத்தில் கிறிஸ்துவுடனே அவருடைய சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்படுவார்கள்.

(குறிப்பு: மோசேவின் கூடாரம் ஜனங்களுக்கு முன்பதாக கட்டி முடிக்கப்பட்ட பிறகு, தேவன் இறங்கி அதன்பின் கூடார ஊழியம் ஆரம்பித்தது. தேவனுடைய குமாரன் வளர்ந்து முதிர்ச்சி அடைந்த பிறகு, அவர் தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்தார். அவர் தண்ணீரிலிருந்து எழுந்து ஜனங்ளுக்கு முன்பாக நின்றபோது, தேவன் இறங்கினார். அதற்குப்பின்பு கிறிஸ்துவின் ஊழியம் ஆரம்பித்தது. கிறிஸ்துவின்

முழு சரீரமும் பரிபூரணப்பட்டு மீட்படையும்போது, மீட்கப்பட்ட தமக்குரிய எல்லோரையும் கிறிஸ்து பிதாவுக்காக ஒன்று கூட்டுவார். அதற்குப் பின்பு கிறிஸ்து தமதுபரிசுத்தவான்களுடன்பூமிக்குத் திரும்ப வந்து அவருடைய இராஜ்ஜியத்திலே மணவாட்டியாகிய மனைவி என்று காண்பிப்பார். சர்வ வல்லவருடைய ஆவியானது மீட்கப்பட்டவர்களின் மேல் இறங்கி அவர்களை அபிஷேகித்த பிறகு "தேவனுடைய குமாரர்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்டு" ஆயிர வருட அரசாட்சியில் கிறிஸ்துவுடனே கூட ஆளுகை செய்யும்படி தொடங்குவார்கள்).

## ஆளுருவகம்

கிறிஸ்து என்னும் தேவனுடைய **ஜீவ வார்த்தை** வேதம் முழுவதிலும் பலவழிகளில் ஆளுருவப் படுத்தப்படுகிறது. நீதிமொழிகள் 8:22 ல், தேவ **ஞானத்தை** சுதந்தரித்தவராய் அவருடைய **தலைமை வேலைக்காரனாகவும்** மற்றும் அவருடைய தின மகிழ்ச்சியாக ஆக்கிக் கொண்டார் (நீதிமொழிகள் 8:30). தேவனுடைய ஞானமானது அவருடைய **மனதில் வல்லமையாகவும்**, **வார்த்தையாகவும்**, **செயல்பாடாகவும்** இருந்தது. பவுல் **"கிறிஸ்துவே தேவனுடைய வல்லமையாகவும் மற்றும் தேவனுடைய ஞானமாயும் இருந்தார்"** என்று சொன்னார் (1 கொரி 1:24). தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய ஞானமும் அடிக்கடி ஒரே பொருளுடையதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய சர்வ வல்லமையை ஜீவனுக்குள் கொண்டு வரத்தக்க ஞானமானது அவருடைய வெளிப்படுத்தலாக இருந்தது. அந்த தேவனுடைய லோகோஸ் சிருஷ்டிப்பின் காரணக்கூறாக இருந்தார். ஒரு சரீரத்தின் அமைப்போடு ஆவியாகக் கடந்து போனார். மண்ணின் மனிதனை பின் காலங்களிலே சிருஷ்டிக்கும்பொழுது அவருடையசாயலுக்கு ஏதுவான சரீர அமைப்போடு இருக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தார் (ஆதியாகமம் 1:26).

கீழ்கண்ட வகைகளில் எழுதப்பட்ட வார்த்தை மூலமாக கிறிஸ்துவின் ஆளுருவத்தைக் காண்பிக்கின்றன என்று பார்க்கின்றோம்.

***

நீதிமொழிகள் 3:19 - கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார்.

யோவான் 1:3 - சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

***

நீதிமொழிகள் 10:29 - கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண், அக்கிரமக்காரருக்கோ கலக்கம்.

யோவான் 14:6 - நானே வழி (இயேசு சொன்னார்)

***

உபாகமம் 8:3 - அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்.

யோவான் 6:33 - வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்.

***

சங்கீதம் 34:20 - அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார், அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.

யோவான் 10:35 - வேதவாக்கியமும் தவறாததாயிருக்க... (The Scripture cannot be broken)

***

இவ்வாறாக, தேவனுடைய வேத வசனங்கள் கூட ஜீவனுள்ள கிறிஸ்துவை எழுதப்பட்ட வார்த்தை மூலமாக சொல்லுக்குச்; சொல் வெளிப்படையானதாக இருக்கிறது.

## தேவனுடைய வார்த்தை

பரிசுத்த மூல வாக்கியங்கள் எபிரேயர்களுக்கே கொடுக்கப்பட்டது, அது வார்த்தைக்கும் கிரியைக்கும் வித்தியாசப்படுத்திக்காண்பிக்கவில்லை (அடையாளத்துக்கு லூக்கா 4:32, மத்தேயு 12:34, 2 கொரிந்தியர் 29:30, நீதிமொழிகள் 10:19-21 வாசிக்கவும்). **அந்த தேவனுடைய வார்த்தை அதிகமாக கேட்கப்பட்டத்தைக் காட்டிலும் காணப்பட்டது**. இவ்வாறுதான் தேவன் பழைய ஏற்பாடு காலத்திலே ஒரு சில தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்களைக் கொண்டு வெவ்வேறு காலங்களில், பல விதங்களில் தம்மைத் தாமே வெளிப்படுத்தினார். சந்தேகமின்றி, யோவான் 1 ல் வந்த சொல்லப்பட்ட ஏஹோவாவின் அந்த வார்த்தை (எபிரேயர்:டபார்) அல்லது சர்வ வல்லமையுள்ள தேவனின் ஊழியர்களுக்கு (ஆதியாகமம் 15:1, 15:4, 1 சாமுவேல் 3:7, 1

நாளாகமம் 17:3 மற்றும் பல) வெளிபடுத்தப்பட்ட அதே வார்த்தையாக (கிரேக்க:லோகோஸ்) இருந்தது.

தன்னுடைய மனதில் தாம் ஆலோசனை செய்தபடி, வெறும் சொற்களாய் இராமல் சரீர உரு அமைந்ததாய் இருந்த வார்த்தை சரீரத்தைப் போல் ஒரு நபராக தம்மைத்தாமே வெளிப்படுத்துவது தேவனுடைய தீர்மானமாக இருந்தது. அதரிசன ஆவியாய் இருந்தபடியினால், ஒரு தரிசன மனித உரு போன்ற ஒரு தியோபனியில் தமது ஆளுமையை வெளிப்படுத்தினார். தமது எல்லா தியோபனிகளும் வரும் நிஜங்களுக்கெல்லாம் நிழலாய் இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாகிய மேசியா வசனம் (ஆதியாகம் 3;:15, 22:18, கலாத்தியர் 3:16,29) தன்னைப்பற்றி பேசப்பட்டதும் அல்லது எழுதப்பட்டதை நிறைவேற்றக் கூடியவராக இருந்ததிற்கு அவைகள் ஒரு முன் நிழலாக இருந்தன. எனவே அந்த காலத்தின் நிறைவு வரும்பொழுது தேவன் தாமே தமது வார்த்தையைஇந்த உலகத்தில் மனு உருவில் வெளிபடுத்தும்படி அதை அனுப்பினார். இதற்கு மேலாக இனி அது வார்த்தை சரீரமாக தியோபனியில் வெளிப்படாமல், மனித மாமிசத்தில் வெளிப்படக்கூடியதாய் இருந்தது. எல்லா தியோபனிகளும் முதிர்ச்சி அடைந்த மனித உருவில் இருந்தது, பாலகனகாவோ, குழந்தையாகவோ அல்ல. ஒரு கன்னிஸ்திரி என்கிற **பாத்திரத்தின்மூலமாக பிறந்து, தூதர்களைக்காட்டிலும் சற்று சிறியதானது, எப்படி தேவன் தியோபனி என்கிற மனித சரீரத்தைப் போன்ற மனித உருவில் தன் சிந்தையை வெளிப்படுத்தினாரோ, அது போல மனித சாயலுக்கு ஏதுவான மனித மாமிசத்தில் தன்னுடைய சிந்தையை வெளிப்படுத்தினார்** (ஆதி 1:26) அதாவது ஒரு பிறப்பினால் அது தொட்டு உணரக்கூடிய இயற்பியல்சார்ந்த மாமிசமாய் இருந்தது. ஆதியிலே தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்பட்ட அந்த வார்த்தைசரீரத்தின் மூலமாக தேவனுடைய சிந்தையை எப்படி அவர் முழுமையாக வெளிப்படுத்தினாரோ, அது போல அந்த மனிதன் (யோவான் 19:5).தேவனுடைய சிந்தையை **முழுமையாய்** வெளிப்படுத்தினவராய் இருந்தார். தேவத்துவம் எல்லாம் சரீரத்திற்குள் **முழுமையாய்** இருந்த ஒரே மனிதன், இயேசு கிறிஸ்து மாத்திரமே.

மனிதனின் சிருஷ்டிப்பில், தேவன் தமது வார்த்தையின் மூலமாக மனிதனுக்கு ஜீவனைத் தந்தார். அதேவார்த்தையைக் கொண்டு நித்திய ஜீவனுக்காக அவனை மீண்டும் படைக்கிறார் (2 கொரி 5:19)

## ஆள் மற்றும் ஆளுமை

ஏறக்குறைய 2000 வருடங்களுக்கு முன்பதாக அவர்பூமியில் இருந்த போது, மனிதனாகிய கிறிஸ்து இயேசு முன் இருக்கவில்லை என்பதை

இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது, **ஒன்றும் சிருஷ்டிக்கப்படும் முன்னே, தேவனுடைய ஆளுமையை வெளிப்படுத்தும்படி தேவனுடைய சிந்தையில் மறைவான தேவ இரகசியமாயும் புறப்பட்டு வந்தவராயும் இருந்தார்.** எனவே இயேசு மாமிசத்தில் வெளிப்பட்ட தேவனுடைய லோகோஸாக (வார்த்தை) இருந்தார். (வெளி 19:13, கொலோ 1:19, 2:9) வார்த்தையானது தான் முன் இருந்தது. ஆரம்பத்திலே அது சர்வ வல்லமையுள்ள ஆவியினிடத்திலிருந்து "தேவனுடைய சிருஷ்டிப்பின் தொடக்கமாயும்" மற்றும் "சர்வ சிருஷ்டிக்கும் முதல் பேருமாய்" இருந்தது.

தேவத்துவத்திலே ஒருவராவோ, இருவர்களாகவோ, அல்லது மூன்று நபர்களாகவோ அதிகபட்ச கிறிஸ்துவர்கள் இப்படி எண்ணினாலும் அவர்கள் தேவன் ஒரு நபர் என்று விசுவாசிக்கின்றனர். வேதவாக்கியங்களெல்லாம் **பல்வேறு சொற்றொடர்களால்** பயன்படுத்தி எழுதப்பட்டதால், திரித்துவக்காரர்கள் தேவத்துவத்திற்குள் ஒரு பொருள் அடங்கிய **மூன்று வெவ்வேறான சரிசமமான தனிப்பட்ட நபர்கள்** இருக்கின்றனர் என்று தவறாக முடிவு செய்தனர். மற்றொரு பக்கம், திருத்துவக்காரர்கள் ஒரு தேவனை விசுவாசிக்கிறோம் என்று எண்ணினாலும்ஒரு சில நேரங்களில் இயேசு கிறிஸ்து ஒரு நபராயும் சர்வவல்லமையுள்ள தேவன் வேறொரு நபர் என்கிற உபதேசத்தைப் போதிக்கின்றன.

(குறிப்பு: "பெர்சோனா –என்கிற கிரேக்க வார்த்தை ஒரு குறிப்பிட்ட குணாதிசயத்தை நடித்துக் காட்டுகிற-ஒருவன் என்று பொருளாகும் அல்லது திரை போடுகிறவன் என்று அர்த்தமாகிறது. இதை திரியேகத்துவர்கள் தவறாக எண்ணி திரித்துவம் என்பது மூன்று தனித்துவ நபர்களாயும் அவர்களுக்குத் தனித்துவ சித்தம் இருக்கிறதென்று அவர்கள் கொடுக்கின்ற விளக்கமே அவர்களுக்கு விரோதமாகிறது. தேவன் **மெல்கிசேதேக்கின்** முறைமையின்படி ஆபிராகாமிற்கும் யாக்கோபுடன் போராடின **கர்த்தருடையதூதனின்** பெர்சானோவாகதேவன் வெளிப்பட்டாலும், அவர் மூன்றாயிராமல் ஒரே தேவனாக இன்னமும் இருக்கின்றார்).

இதை இன்னமும் தெளிவாகப்புரிந்து கொள்வதற்கு ஆளும் ஆளுமையும் என்கிற இந்த இரண்டு வார்த்தைகளை ஆராய்வோம். அதிகபட்ச "அகராதிகள்" இந்த இரண்டு வார்த்தைகளுக்கு கொடுக்கின்ற அர்த்தங்கள் இவ்வாறு பின் தொடர்கின்றது.

ஆள்

1. மனித நபர் 2. தனி ஆள் 3. பிரத்யேகமான ஒரு சுயம் 4.மனித சரீரம், சரீர தோற்றம் (மாமிச சரீரத்தோடு ஆவிக்குரிய அறிவுடையவனாக இருக்கின்ற நபர்)

ஆளுமை: - ஒரு நபரின் சிந்தையும் குணாதிசயங்களுக்குரிய தன்மையின் பொருள் 2. தனித்துவம், தனி அடையாளம்.

சர்வ வல்லமையுள்ள ஆவிக்கு **ஆளுமையிருப்பதை** மறுக்க முடியாதது. வேத வசனங்கள் முழுவதிலும் அவருடைய ஆளுமைக்குரிய பற்பல குணாதிசயங்கள் மூலம் தன்னை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். எனவே **தேவன் ஒரு நபருக்குரிய பொருளடங்கிய அந்த நபர் இல்லை தேவன் ஆவியாய் இருக்கிறாறென்று** தெளிவாக யோவான் 4:24 லும் எபேசியர் 4:4ல் சொல்லப்பட்டுள்ளது.

ஒரு படமாக எடுத்துக் கொள்வோம். ஒரு மிருகம் ஒரு நபர் அல்ல என்று அறிந்திருக்கிறோம், ஆனாலும் மனிதக்குரங்கு போன்ற மிருகத்திற்கு, ஒரு குறிப்பிட்ட ஆளுமையுண்டு. அதாவது சிந்தையும் குணாதிசயம் உள்ள தன்மையின் பொருள்.

**தேவ ஆவியின் ஆளுமையானது ஒரு நபருக்குள் வெளிப்படுத்தப்படுகின்றது. அந்த நபர் இயேசு கிறிஸ்து** தேவன் ஆரம்பத்திலே ஒரு நபரைப் போன்ற உருவத்தில் தம்மைத்தாமே வார்த்தை சரீரத்திலே வெளிப்படுத்தினார். எபிரேயர் 1:3 ல் **இயேசு கிறிஸ்து அவருடைய "தன்மையின் சொரூபமாய்" இருந்தார்**. கிரேக்க வார்த்தை இந்த இடத்தில் (Hupostasis-ஹூப்போஸ்டாசிஸ்) என்று சொல்லப்பட்டுள்ளது. அதன் அர்த்தம், முழு பொருள், உண்மையான சுபாவம். இது போல, இயேசு கிறிஸ்து தேவனுடைய முழுப்பொருள் அல்லது சுபாவத்தின் வெளியரங்க தன்மையின் சொரூபமாயிருந்தார். நம்முடைய இரட்சகர் தேவனுடைய ஆளாக இருந்தார். தேவனுடைய ஆளுமை முழுவதும் அவருக்குள் வெளிபட்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

(குறிப்பு: தேவ தூதர்கள் மனிதராக இராதபடியினால், அவர்கள் நபர்கள் அல்ல, அவைகள் சிருஷ்டிக்கப்பட்ட ஆவியின் உருவங்களே. (சங்கீதம் 104:4, எபிரேயர் 1:7) ஆபிராகமிற்கு எலோகிமுடன் மனித உருவங்களைப்போன்ற காட்சியளித்த இரண்டு தூதர்களைப் போல ஒரு சில சமயங்களில் இருந்தாலும், (ஆதியாகமம் 18) அவர்கள் நபர்கள் அல்ல. தேவன் ஆவியாயிருக்கிறபடியினால் தேவதூதர்களும் ஆவிகளாய் இருக்கின்றனர்.)

## இருமைப் பண்பு

இயேசு கிறிஸ்துவைப் பற்றி புரிந்து கொள்ளக் கூடிய மிகக் கடினமான காரியம் அனேகமாக, அவருடைய ஆளுமைத்தன்மையே. ஆயினும், எல்லா தனிப்பட்ட மனிதர்களைப் போல, தேவனுடைய ஆளுமைக்குள் ஒரு தனிநபராக இருந்ததை நாம் புரிந்துக் கொள்கிறோம். ஆனால், அவருடைய ஞானஸ்நானத்திற்கு முன்பு, நேரடியாக மேலிடத்திலிருந்து வந்த ஒரு பாவமில்லா **மனிதனாக** மாத்திரமாக இருந்தார் என்பதை

ஞாபகம் வைத்துக்கொள்ளவும். (யோவான் 8:23). ஆனால் மரியாள் யோசேப்பு ஒன்று சேர்ந்து அவர் வரவில்லை, அவருக்குள் பாவம் இராதபடியினாலே அவர் நித்திய ஜீவன் உடையவராக இருந்தார். அவர் தெய்வீகமானவராக இருந்தும் தெய்வத்தன்மை உடையவராக இல்லை. எப்படி எனில், இயற்கையின்படி இவர் மரிக்க முடியாது. தேவன் அதை அனுமதித்தால் மாத்திரமே, இயற்பியலின் வலிமையினால் மாத்திரமே மரணம் அவர் மேல் வர முடியும்(லூக்கா-23:46, யோவான்-19:10-11 1கொரிந்தியர் 15:3) அவர் புசிக்கவும், தூங்கவும் வேண்டியதாக இருந்தது (மத்தேயு-4:2, 8:24). அவர் களைப்பையும், வலியையும் உணரக்கூடியவராக இருந்தார் (யோவான்-4:6, லூக்கா-22:44, எபிரேயர்-4:15). ஆனால் ஆவியாய் இருக்கிற தேவனோ, இது போன்ற எல்லாத் தடைகளுக்கும் கீழ்படுத்தப்பட்டவரல்ல.

ஆகவே, இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் போது மனுவுரு ஏந்துவற்கு முன்பதாக **தேவனாக** இராமல் மனிதனாக இருந்தார். ஆதாம் எப்படி விழுந்து போவதற்கு முன்பதாக பாவமிராமல்நித்திய ஜீவன் உடைய மனிதனாகவும் **தேவகுமாரனாக** இருந்தாரோ அதுபோல இயேசுவும் வெறும் மனிதனாகவும் தேவகுமாரனாகவும் இருந்தார். பழைய காலங்களில் பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்ட லோகோஸாக இருந்தபடியினால் அந்த தேவ குமாரனாக இயேசு மாத்திரமே முதன்மையானார். ஆதியிலே, இயேசுவுக்குள் வெளிப்பட வேண்டிய, அந்த வார்த்தை (ஒற்றை மரபணு-விதை) க்குள் நாம் யாவருக்கும் பிதாவாய் இருக்கிற தேவனுக்குள் குமாரனாய் வாசம் பண்ணினது (யோவான்-1:2).

அவருடைய ஞானஸ்நானத்திற்குப் பின்பு **தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம்** அவருக்குள் வாசம் பண்ண தொடங்கிய போது இயேசு **தேவ மனிதன்** ஆனார். அதாவது **தேவனும் மனிதனும்** இரண்டும் உடையவராக. அதற்குப் பிறகு தான் அவருடைய **வார்த்தைகளில் வல்லமை** இருந்தது. (ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். - யோவான் 5:26-27) அதற்கு முன்பதாக, அவருடைய வார்த்தையில் வல்லமை இல்லை. தேவன் - மனிதனுடைய உதடுகளிலிருந்து, சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய ஜீவ வார்த்தைகளையும், மற்றும் வல்லமையையும் பேசினார். மறுபக்கத்திலே, மனிதனாகிய இயேசு அவருடைய அதே உதடுகளைப் பயன்படுத்தி, ஒரு வேளை அவருக்கு உணவையும், தங்குமிடத்தை கொடுத்த அவருடையநண்பர்களுக்கு நன்றியையும், தமது பிதாவாகிய தேவனுக்கு துதிகளையும் செலுத்தியிருப்பார்.

இயேசு மனிதனாகவும், தேவனாகவும் இருந்தார் என்பதினாலே தெய்வத் தன்மையும் கிறிஸ்துவின் மனிதத் தன்மையும் ஒரே பண்பாக

உருக்கப்பட்டு ஒன்று சேர்ந்தது, என ஒரு சில கிறிஸ்துவர்கள் விசுவாசிப்பது போல அது அர்த்தமுள்ளதாகாது. இயேசு முழுமையான தேவனாகவும் மற்றும் முழுமையான மனிதனாகவும் இருந்தார். பரமபிதாவினிடத்திலிருந்து தனிப்பட்ட ஆவியும் மற்றும்ஒரு தனிப்பட்ட சித்தமும் இருந்தது.

பவுல் அப்போஸ்தலன் கலாத்தியர் 4:4 ன் படி (நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக) சொன்னபடி வாக்குவாதமின்றி, அவர் மாமிசத்தையும் அல்லது கிறிஸ்துவின் மனிதத்துவத்தையுமே குறிப்பிடுகிறார். ஆனால் நித்திய பிதா அல்லது தேவன் என்று சொல்கிற பொழுது, குமாரனுக்குள் வாசம் பண்ணின சர்வ வல்லமையுள்ள ஆவியையே அது குறிப்பிடுகிறது. ஆகவே,1 திமோத்தியு 3:16ல் வெளிப்பட்ட அந்த பெரிய இரகசியம் என்னவென்றால் “தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டார்”.

(குறிப்பு: கிறிஸ்தவர்கள் பழைய காலத்து யூதர்கள் தேவனுக்கு ஒரு மகன் இருந்ததாக அல்லது “தேவகுமாரன் இருந்தார் என்பதை அனுமானம் செய்கின்றன. இப்படி செய்கிறவர்கள் தானியேல் 3:23-25 மற்றும் யோவான் 7:25-29 உள்ள வசனங்களை நினைத்து முடிவு செய்கின்றனர். யூதர்கள் தங்களுடைய மேசியா (ஒரு மனிதன்) தேவனாக இருப்பார் என்பது உண்மை தான். ஆனால் தேவனுக்கு ஒரு குமாரன் உண்டு என்று அவர்கள் அறிந்திருந்தால் (தேவ குமாரன் மெய்யாகவே ஒரு நபராக முன்பே இருந்திருப்பாரானால்) கிறிஸ்துவை அவர்களுடைய மேசியாகவாக சந்தோசமாக ஏற்றிருப்பார்கள்.

இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே என்றார்கள். (யோவான் 7:27)

யாவேயின் தூதனாகிய “அடோனாய்” பரிசேயனாகிய பவுலும் கூட அறிந்திருந்தும் குமாரனாகிய தேவன் என்னும் போதனையைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உள்ளவர்கள் தேவகுமாரன் என்கிற வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது வெளிப்படையாக இருக்கிறது. ஆனால் அக்னிக்குள்ளாக சாத்ராக், மேசாக், மற்றும் ஆபேத்நேகோவுடன் இருந்த நான்காம் மனிதன் யார்?

நேபுகாத்நேசார் சொன்னார்.

அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன், அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை, நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்.(தானியேல் 3:25)

பாபிலோனியா ராஜாவாகிய நெபுகாத்நேசாருக்கு தேவகுமாரனைப் பற்றிய வெளிப்பாடு இருந்திருக்குமா? மூலபாஷையாகிய எபிரேய மொழியின்படி தேவர்களின் ஒரு மகன் அல்லது ஒரு தேவகுமாரன், ஒரு வல்லமை உள்ளவன், ஒரு தூதன், ஒரு செய்தியாளன் அல்லது ஒரு விஷேசித்த மனிதன் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் இந்த நாலாவது மனிதன் சந்தேகமின்றி இயேசு கிறிஸ்துவுக்கு முன் உருப்படுத்திக் காட்டப்பட்ட அந்த வார்த்தையாகிய ஒரே தேவ குமாரனாக இருந்தார்.

பழைய ஏற்பாடு காலக்கட்டத்திலே தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள் தேவனை ஒரு பொழுதும் "பரமபிதா என்று அழைத்ததில்லை, அதுபோல அவர்கள் திரும்பி ஒரு பரம குமாரனை" அழைத்தற்கு உண்டான ஆதாரம் இல்லை, ஏனெனில் வேதத்தில் நித்திய குமாரன் என்பது இல்லை. ஆனால் பழைய ஏற்பாட்டிலே பிதா மற்றும் குமாரன் ஏசாயா 9:6 ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது புதிய உடன்படிக்கையின் உறவுக்குள்ளாக தீர்க்க தரிசனமாக நித்திய தேவன் தன்னை குமாரன் என்னும் மாமிசத்திற்குள்ளாக பிரகடனப்படுத்துவார் என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரே பேரான குமாரன் தேவ குடும்பத்தை ஒப்புரவாக்குவதற்கே பிறந்தார் என்று இவ்விரண்டு வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

எபிரேயர் 1:5-14, 2 சாமுவேல் 7:14, சங்கீதம் 2:7, அப்போஸ்தலர் 13:33, ரோமர் 1:4, தானியேல் 7:9-10, 13-14, வெளிப்பாடு 1:13, மத்தேயு 25:31, எபேசியர் 1:20-22 பார்க்கவும்.

மீகா 5:2 சொல்லப்பட்ட இஸ்ரவேலில் இருந்து தேவன் கொண்டுவரக் கூடியஆளுகிறவரைப் பற்றிஇப்படி சொல்லுகிறது "அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. ஆளுகைக்குரியவராக இந்த தீர்க்க தரிசனம் இயேசுவுக்குள்ளாக நிறைவேறியிருந்தாலும் அவர் கடந்தகால நித்தியத்தில் இருக்கவில்லை, ஒரு தனிப்பட்ட நபராக தேவனை விட்டு பிரிந்து தனித்துவ நபராய் தாபரிக்கவில்லை, ஆனால் வரும் காலங்களில மனுஉரு ஏந்தி தம்மை வெளிப்படுத்துகிறது. நிறைவான தேவனுடைய வார்த்தையாக சர்வ வல்லமையுள்ள ஆவியின் இருதயத்தின் நினைவுக்குள் முதன்மையாக இருந்தார், ஆகவே இந்த வேத வசனங்கள் ஏலோஹீமுக்குள்ளாக அவருக்கு இருந்த தொடரை காண்பிக்கிறது, இன்னும் எழுத வேண்டியுள்ளது.

**இயேசு கெத்சமனே தோட்டத்தில் ஜெபம் பண்ணுகையில், தேவனே தேவனிடத்தில் ஜெபிப்பது போல் அல்ல** தேவன் ஆராதிக்கப்படக்கூடியவராகவும், ஜெபத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியவராகவும் இருக்கிறார். தேவன் ஆராதிக்ககூடியவராகவோ இல்லை. ஒருவேளை அதைசெய்கிறவராய் இருந்தால், அவர்தாமேதமது தெய்வத்தன்மையை நீக்குகிறவாய் இருப்பார். மனிதனாகிய இயேசு,

**தம்முடைய பிதாவாகிய** தேவனிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார். தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு மரியாள் -மகதலேனாவிற்கு அவர் தரிசனமாகி இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை, நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் **பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும்** ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார் - (யோவான் 20:17) **நம்முடைய பாவங்களுக்காக கல்வாரியிலே தேவனும் மரிக்கவில்லை. ஏனெனில் தேவனால் மரிக்கமுடியாது. தேவன் ஆவியாய் இருக்கிறார். தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய கிறிஸ்து இயேசு, தாமே நமக்காக மரித்தார்** (1கொரி 15:3) இருந்தாலும், தேவன் எப்படியோ ஒரு வழியில் நமக்காக “மரித்தார்”, என்று சொல்லலாம் தம்முடைய மீட்பின் உடன்படிக்கையின் திட்டத்தை சுமந்து செல்வதற்கு, தேவன் நித்திய ஆவி மற்றும் மனிதனாக இருக்க வேண்டும். உடன்படிக்கையின் பிரமாணத்தின்படி உடன்படிக்கை உறுதி அடைவதற்கு முன்பு உடன்படிக்கை பண்ணினவர் மரிக்க வேண்டியதாக இருந்தது. (எபிரேயர் 8:7-13, -9:16-17) மற்றும் தேவன் ஆவியாய் இருந்த படியால், நமக்காக மரணத்தை ருசி பார்த்து நம்மை மீட்டுக் கொள்ளும்படி மனித குலத்தோடு தம்மைத்தாமே அடையாளம் கண்டுக் கொள்ளத்தக்கதாக அவர் ஒரு மனித தோற்றத்தை எடுக்க வேண்டியதாயிற்று (எபிரேயர் 2,9, ரோமர்-8-3). இதனால், கல்வாரியிலே மரித்தவர் ஒரு அர்த்தத்தின் படி உடன்படிக்கை செய்தவராகவே இருக்கிறார்.

## தேவன் அல்ல. அந்த வார்த்தையே அறைப்பட்டது.

வேறு ஒரு கோணத்தில், தேவனாய் இருந்த அந்த வார்த்தையே, சிலுவையில் அறையப்பட்டது என்று நாம் அறிந்திருக்கிறோம். உலகம் உண்டாவதற்கு முன்பதாக ஆதியிலே மகிமைப்படுத்தப்பட்டிருந்த அந்த வார்த்தையே, கல்வாரியிலே சிலுவையில் அறையப்பட்டிருந்தது (யோவான் 17:5), இயேசுவினிடத்திலிருந்து அந்த வார்த்தையை நாம் பிரிக்க முடியாது ஏனெனில் இயேசுவே ஜீவ வார்த்தையாய் இருந்தார். தேவனுடைய வார்த்தையாய் இருக்கிற, தேவகுமாரனாய் இருக்கிற இயேசு மரித்தார். அவர் ஜெபித்தது போலவே தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகும், அந்த வார்த்தை நித்திய ஆவியினால் மறுபடியும் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும்படி பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது (யோவான்-12:28, 7:39, 1 திமோத்தேயு 3:16).

**ஏலோகிம்** எப்பொழுதும் தம்மைத்தாம் தமது **வார்த்தையோடு** அடையாளப்படுத்துகிறார் என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு

இதுவே தகுதியாயிருக்கும், ஏனெனில் அவர்கள் **ஒன்று**, (யோவான் 1:1, 1 யோவான் 5:7). சிலுவையில் மரிக்கும்போது, இயேசு சடுதியாய் கதறி சொன்னார். “என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கை விட்டீர்” (மத்தேயு -27:46). அந்த கதறல் மிகுந்த வேதனைக்குரிய கதறலாக இருந்தது, ஏனெனில் பாவம் அறியாத அவர் மேல், சடுதியாக மனித குலத்திற்குரிய சகலபாவங்களும் சுமத்தப்பட்டது. அவரைப் பற்றிப் பேசப்பட்ட அநேக பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றுகிறவராய், அவரே பாவத்தை சுமக்கிறவரானார். பாவத்தின் பாரத்தின் கீழ், ஒரு மனிதனாக இருந்த படியினால் தேவனால் கைவிடப்பட்டதை உணர்ந்தார். தன்மேல்உலகத்தின் பாவத்தை எடுத்துக்கொண்டதினால் நியாயத் தீர்ப்பு அவர் மேல் செலுத்தப்பட்டது. இதின் நிமித்தமே அந்த பயங்கர கதறல். ஆனால் எந்தக் காலத்திலும் தேவன் அவரைக் கைவிடவோ புறக்கணிக்காவோ இல்லை.(யோவான் 16:32)

(குறிப்பு:- லேவியராகம புத்தகத்தில் 2 முதல் 3 வரை உள்ள அதிகாரத்தில் போஜன பலியைக் குறித்து (கிறிஸ்துவின் பரிந்து பேசுதலின் ஜீவன்) எண்ணெயுடன் (தேவனுடைய பரிசுத்த ஆவி) கலந்து பலி பீடத்தில் (கல்வாரி) மொத்தமாகஅக்னியில் சுட்டெரிக்கப்படுவது இயேசு கல்வாரியில் கைவிடப்படுவதே இல்லை என்பதை நிரூப்பிக்கின்றது).

## கிறிஸ்துவின் மகிமை அடைந்த சரீரம்

நம்முடைய இரட்சகர் மரணத்தையும், மற்றும் பாதாளத்தையும் ஜெயம் பெற்ற பிறகு, அவர் உயிர்த்தெழுந்து உன்னதத்திற்கு ஏறி தம்முடைய உன்னத சரீரமாகிய, வார்த்தை சரீரத்தைத் தரித்துக்கொண்டார். **இயற்கை மற்றும் வானத்திற்குரிய சரீரங்கள் ஒன்றினணப்பதினாலே அழியாமை மற்றும் சாவாமைக்குரிய ஒரு புதிய சரீரத்தை உருவாக்குகின்றது. இந்த மகிமை அடைந்த சரீரம் ஒரு ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது.**

ஆதாம் பூமிக்கு வந்த பொழுது, அவன் மண்ணினால் உண்டான இயற்கை மனிதனாக இருந்தான். அவனுக்கு பூமிக்குரிய ஒரு மாமிச சரீரம் இருந்தது இது போன்ற இயற்கை சரீரத்தை இயேசுவிற்குள்ளாக தேவன் விதைப்பதினால் அவர் அதை விதைக்கப்பட்டதிலிருந்து ஒரு ஆவிக்குரிய சரீரத்தை எழுப்பும்படி இப்படி செய்தார்.

மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும், கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம்

எழுந்திருக்கும், ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு - (1 கொரிந்தியர் 15:42-44)

மனித குலத்தின் ஆத்துமாவுக்குள் அழிவு உட்கொள்ள ஆரம்பிக்கும்போது, “கடைசி ஆதாம் உயிர்ப்பிக்கும் ஆவியாகி“ ஜீவனையும் ஒரு புதிய சரீரமாகிய ஒரு ஆவிக்குரிய சரீரத்தை எவர்கள் விசுவாசிக்கின்றார்களோ அவர்களுக்குக் கொடுத்தார்.

பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் - (2 கொரிந்தியர் 5:1)

ஒரு தேவனுக்குரிய பரிசுத்தவான் மரிக்கும்பொழுது, அவனுடைய ஆத்மா அவனுடைய பூமிக்குரிய சரீரத்தை பூமியில் விட்டுவிட்டு “கைகளினால் செய்யப்படாத ஒரு வீடாகிய” ஒரு வார்த்தை சரீரத்தைத் தரிக்கும்படி பரலோகத்திற்குத் திரும்புகிறது. அந்த உயிர்த்தெழுதலின் காலை வேளையிலே, கிறிஸ்துவுக்குள் மரித்தோர் எழும்பும்போது, அவனுக்கு ஒரு புதிய சரீரம் உண்டாயிருக்கும் அவன் தன்னுடைய வார்த்தை சரீரத்திலே வந்துஅவனுடைய மண்ணின் பூமிக்குரிய சரீரத்தை எடுத்துக்கொள்வான். இந்த இரண்டு சரீரங்களும் ஒன்று சேர்வதினாலே ஒரு ஆவிக்குரிய மகிமை சரீரத்தை உருவாக்கும். உயிரோடு இருக்கிற அந்த பரிசுத்தவான்களுக்கு, கடைசி எக்காளம் தொனிக்கும்போதுஅவர்களுடைய மாமிச சரீரங்களை மூடும்படி அவர்களுடைய வார்த்தை சரீரங்கள் வரும்போது அவர்களும் மறுரூபப்படுவார்கள்.

எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். - (1கொரிந்தியர் 15:52-53)

இவைகள் எல்லாம் நடக்கத் தொடங்கும்போது பவுல் சொன்ன வார்த்தைகளெல்லாம் நிஜமாக மாறுகின்றது.

மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். - (1கொரிந்தியர் 15:49)

ஆமென், கிறிஸ்து இயேசு இப்போது சுதந்தரித்துக் கொண்டிருக்கிற ஆவிக்குரிய சரீர போன்றதை நாம் நிச்சயமாக தரித்துக்கொள்வோம்.

## புதிய சிருஷ்டிப்பு

புதிய பிறப்பு மறுஜென்மம்மல்ல. இது புதிய படைப்பு. புதிய படைப்பு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தால் கொண்டுவரப்படுகிறது.

ஆகையால் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் **புதிய சிருஷ்டியாக** இருக்கிறான்: பழையவைகள் ஒழிந்துபோயின; இதோ அனைத்தும் புதிதாயின (2 கொரிந்தியர்.5:17).

மறுஜென்மம் தேவனின் படைப்பின் புதிய மற்றும் முழுமையான மாற்றத்தை கொண்டு வர முடியாது. கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் மறுஜென்ம காலத்தில் 1000 வருடங்கள் கழிந்த பின்னரும் பலரின் இதயத்தில் கலகம் எழும் என்று வேதத்தில் இது நமக்குக் காட்டப்பட்டுள்ளது. (வெளி. 20:7-9 மத்.19: 28) கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் "மறுஜென்மம்" கர்த்தருடைய கிறிஸ்துவுக்கு தங்களைக் கீழ்ப்படுத்த மனப்பூர்வமாய்த் தேர்ந்தெடுத்தவர்களுக்கு அவர்கள் தங்கள் இயற்கை சரீரங்களில் **புதிய வானம்** மற்றும் **புதிய பூமியின்** நித்திய யுகத்திற்குள் நுழைவார்கள். மேலும் அவர்கள் பரிசுத்த நகரமான **புதிய எருசலேமின்** ஒளியில் நடப்பார்கள். **புதிய வானத்திலும் புதிய பூமியிலும் ஆட்டுக்குட்டியின் மனைவியான**, **புதிய எருசலேமின் பரிசுத்த நகரத்தின்** பாகமாக இருப்பவர்கள் மட்டுமே மகிமைப்படுத்தப்பட்ட சரிரங்களைக் கொண்டுள்ளனர்.

ஆதாம் முதலில் ஒரு ஆவியாகப் படைக்கப்பட்டான். அவன் தன்னை வெளிப்படுத்த ஒரு மண்ணாண சரிரம் கொடுக்கப்படுவதற்கு முன்பு அவன் ஒரு உயிருள்ள ஆன்மாவானான். ஆதாமின் "ஆவி" அவரது தோற்றம். அவனுடைய "ஆன்மா" அவனுடைய இயல்பு. அவரது ஆன்மா அவரது உண்மையான சுயத்தின் இயல்பு. இந்த இயல்பு அவரது பரலோக தந்தையின் (சர்வவல்லமையுள்ள தேவன்) விதையை (மரபணு) வெளிப்படுத்தியது. அவரது "சரீரம்" கிட்டத்தட்ட அவரது ஆவி-ஆன்மாவைக் கொண்ட கூடாரமாக இருந்தது.

பாவம் மேலோங்கியபோது, விளைவு மரணம். மரணம் என்பது நித்திய ஜீவனைக் கொண்டிருக்கும் தேவனிடமிருந்து பிரிந்து செல்வதைக் குறிக்கிறது. ஜீவனின் ஒளி ஆதாமிடமிருந்து விலகிச் செல்லும்போது மரணத்தின் இருள் சூழ்ந்தது. அவனது சரிரம் சிதையத் தொடங்கியது. இறுதியில் அது பூமியின் மண்ணிலுள்ள கூறுகளுக்கு திரும்பியது.

கிறிஸ்துவின் நற்செய்தியின் மூலம், ஜீவனுள்ள தேவனுடைய ஆவி மனிதனின் ஆவியைத் உயிர்பிப்பதின் மூலம் ஒரு புதிய பிறப்பையும் புதிய தொடக்கத்தையும் கொண்டுவருகிறது. தேவன் அவனுடைய ஆவியை உயிர்ப்பிக்காமல், ஒரு மனிதனின் ஆன்மா உயிருடன் இல்லை, அவன் பாவத்தில் இன்னும் இறந்துவிட்டான்; ஜீவனுள்ள தேவனுடைய ஆவியின் கனிகளை அவனால் பிறப்பிக்க முடியாது. தேவன் உள்ளிருந்து வெளியே வேலை செய்கிறார் - "உங்கள் முழு **ஆவி ஆன்மா** மற்றும் **உடல்**" (1 தெசலோனிக்கேயர் - 5: 23).

[குறிப்பு: தீத்து 3:5ல், அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: "நாம் செய்த நீதியின் கிரியைகளினால் அல்ல, மாறாக, அவருடைய இரக்கத்தின்படி, **மறுஜென்ம முழுக்கினாலும் மற்றும் பரிசுத்த ஆவியின் புதுப்பித்தல் மூலம்** அவர் நம்மை இரட்சித்தார்". அவர் சுத்திகரிப்பு செயல்முறையை அடையும் வரை சிலர் இந்த வார்த்தையை ஒரு நபருக்கு "புதிய பிறப்பு" இல்லை என்று அர்த்தப்படுத்துகின்றனர். "புதிய பிறப்பு" என்பது ஒரு முறை ஆவிக்குரிய அனுபவம் அல்ல,

ஆனால் அந்த நபர் “மீண்டும் பிறக்கிறார்” என்று கூறப்படுவதற்கு முன் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றங்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.
“மறுஜென்மம்” என்ற வார்த்தை பலரால் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. கிரேக்க மொழியில் “பாலிகெனேசியா” என்ற சொல்; இதன் பொருள் “**புதிய தோற்றம்**, புதிய தொடக்கம், புதிய சிருஷ்டிப்பு” என்று அர்த்தமாகும்.
**முந்தின மனிதனகிய முதலாம் ஆதாம்** ஒரு **புதிய சிருஷ்டிப்பு**; **இரண்டாவது மனிதன் கடைசி ஆதாம்** ஒரு **புதிய சிருஷ்டிப்பு**. (குறிப்பு: “ஆதாம்” என்ற வார்த்தை “மனிதன்” என்ற வார்த்தையை பிரதிபலிக்கிறது. இரண்டு புதிய சிருஷ்டிப்புகளும் சோதனை மற்றும் மரணத்திற்கு உட்பட்டன. முதல் மனிதன் அல்லது முதல் ஆதாம் “**மாயைக்கு உட்பட்டது**, விருப்பத்துடன் அல்ல, ஆனால் காரணத்தினால் நம்பிக்கையில் அதையே உட்படுத்தியவர், ஏனென்றால் அந்த உயிரினமும் சிதைவின் அடிமைத்தனத்திலிருந்து தேவனின் பிள்ளைகளின் மகிமையான சுதந்திரத்திற்கு விடுவிக்கப்படும்” (ரோமர்-8:20-21). அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.
பிந்தின ஆதாமாகிய இரண்டாம் மனிதன் “**உயிர்ப்பிக்கும் ஆவியாக** ஆக்கப்பட்டார்” (1 கொரிந்தியர் 15:45) விசுவாாசிக்கிரவர்களுக்கு உயிரையும், ஒரு புதிய சரீரம்- ஆவிக்குரிய சரீரம்- கொடுக்க. “அதற்காக, தேவனுடைய குமாரனாகிய அவர் சோதனைக்கும் மரணத்திற்கும் ஆளாக்கப்பட்டார். அவருடைய பரலோகத்தின் பிதா அவர் அதிக பலனைத் தருவார் என்று அவரை மரணத்திற்கு உட்படுத்தினார் (யோவான். 12:24 & 27; 3:16-17).
“மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.” (1 கொரிந்தியர்.15:42-44).
ஆதாம் மரணத்திற்குள்ளாக மண்ணில் விழுந்தான் - ஆதாமில் அனைவரும் மரித்தனர். கிறிஸ்து மரணத்திற்குள்ளாக மண்ணில் விழுந்தார்- கிறிஸ்துவில் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.
“மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.” (1 கொரிந்தியர். 15:49).

## இயேசு கிறிஸ்துவை சுற்றி இருக்கின்றதெய்வத்தன்மையின் முழுமை (அல்லது) இயேசு கிறிஸ்துவின் நிறைவான தெய்வத்தன்மையின் ஒளிவட்டம் தேவன் கிறிஸ்துவுக்குள்:

யோவனின் 17வது அதிகாரத்தில் தேவன் தமக்காக தீர்மானித்திருந்த மூன்று காரியங்களை நிறைவேற்றுவதற்கு வந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. அவர் **தேவனுடைய வேலையை முடிக்க வேண்டியதாக இருந்தது** (யோவான் 17:4) அவர் **தேவனுடைய நாமத்தைப் பிரகடனப்படுத்த வேண்டியதாக இருந்தது** (யோவான் 17:6) **தேவனுடைய வார்த்தைகளைக்**, கொடுக்க வேண்டியதாய் இருந்தது (யோவான் 17:8) தேவன் தமக்குத் தந்த அதிகாரத்தினாலே தம்முடைய எல்லா குறிக்கோள்களையும் நிறைவேற்றினார் (யோவான் 14:10).

நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை, என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார் - (யோவான் 14:10)

“இயேசு மாத்திரமே” என்கிற இயக்கம் அறிக்கை செய்வதற்கு முரணாக இவை இருக்கிறது என்பதற்கு இது போதுமான சாட்சி. வார்த்தையானது தேவனுடைய முன்குறித்த திட்டத்தை நிறைவேற்றும்படி தம்முடைய குமாரத்துவத்தை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று, சர்வ வல்லமையுள்ள அந்த ஆவிக்கும் அந்த வார்த்தைக்கும் உள்ளே மறைந்திருந்த இரகசிய உறவு அது பிதாகுமாரன் என்னும் உறவாக இருந்தது. இந்த பிதாகுமாரன் உறவு தமது சிருஷ்டியில் வெளியரங்கமான உண்மையாவதற்கு, லோகோஸின் அந்த குமாரத்துவத்தின் ஆவி ஒரு மனித நபரின் உருவத்தை எடுப்பதற்கு தேவன் நியாமித்தார். பூமிக்குரிய ஒரு மண்ணின் சரீரத்தை தேவன் ஆயத்தப்படுத்தி அந்த லோகோஸ் தேவகுமாரனாக அதிலே பிரகடனப்படுத்துவதற்குச் செய்த பிறகு அந்த ஆவியின் சரீரமாகிய லோகோஸின் தொடர்ச்சி நின்று விட்டது. பெத்லகேமில் குழந்தை பிறந்ததும் அந்த தியோபனி முடிவுக்கு வந்தது.

ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர், சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார் - (எபிரேயர் 10:5-7)

எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும், நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? - (எபிரேயர் 1:5)

கிறிஸ்து இயேசு தம்முடைய மனிதத்துவத்துவுக்குள், தமது சொந்த சித்தத்தைச் செய்ய தேடியிருக்கக் கூடும். ஆனால் அவர் தம்முடைய ஜீவனில் பிதாவின் பரிபூரண சித்தத்தை மாத்திரமே விரும்பினார். அவர் வார்த்தையோடு ஒன்றாக இருந்தார். **இயேசுவையும் அந்த வார்த்தையும் உங்களால் பிரிக்க முடியாது. அவரே அந்த வார்த்தையின் ஜீவனாகவும், தேவனின் ஜீவனாகவுமே இருந்தார்.** பவுல் இப்படி எழுதினார். எபிரேயர் 5:8 வசனம் எழுதவும்.

ஆம், இயேசு மரணபரியந்தம் சிலுவையின் மரணத்திற்கும் கீழ்படிந்தவராய் இருந்தார்.

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாகஅவரைஉயர்த்தி,இயேசுவின்நாமத்தில்வானோர்பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:6-11)

உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள். - (சங்கீதம் 129:3) (ஏசா-53:2-5, 11, மாற்கு-15:19-28, 1 பேதுரு-1:9-11)

அவருடைய சிந்தையும், அவருடைய வார்த்தை மற்றும் அவருடைய செயல்பாடும் தேவனுக்கு நிறைவாக பணிந்திருந்த படியினால் அவரும் தேவனும் முற்றிலும் **ஒன்றானார்கள்**. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார் - (யோவான் 10:30)

என்னைக் கண்டவன் பிதாவை கண்டிருக்கிறான் - (யோவான் 10:38)

அதற்குஇயேசு:பிலிப்புவே,இவ்வளவுகாலம்நான்உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? - (யோவான் 14:9)

**அவருடைய ஆவி தேவ ஆவியுடன் மிக சுமுகமாக கலந்ததினால் அவருடைய ஆவி நித்திய ஆவியுடன் ஒன்றாக்கப்பட்டது.** இயேசு சொன்னது போலவே தேவனுடையபரிசுத்தவான்களாகிய, நம்முடைய ஆவிகள் தேவனுடையஆவியோடு தம்முடைய வார்த்தைக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுப்பதினால் உலகம் நம்மைப் பார்க்கும்பொழுது நமக்குள் கிறிஸ்துவை மாத்திரம் பார்க்கட்டும்.

நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். - (யோவான் 14:20)

அவர் ஜெபித்தது போல அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவோமாக. யோவான் 17:21,22,23.

பிலிப்பியர் 2:5-8ல் அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகளை அடிக்கடி தவறாக வியாக்கியானப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த அப்போஸ்தலன் வெளிப்பாட்டினாலே அவர் யார் என்பதை அறிந்தவராய், மனிதனாகிய இயேசு கிறிஸ்துவை இங்கே குறிப்பிடுகிறார். இந்த பவுலின் வசனங்களை எடுத்துக்கொண்டு இயேசு சிருஷ்டிப்புக்கு முன்னமே தேவனோடு இருந்தார் என்று நிரூபிக்க முயலுகின்றனர்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் - (பிலிப்பியர் 2:5-8)

இந்த கிறிஸ்தவர்கள் ஆதாம் ஆதியிலே முன் இருந்தது போல இயேசுவும் இரண்டாவது நபராக தேவனுடைய ரூபத்தில் முன் இருந்ததாக போராடுகின்றனர். இவரை தேவத்துவத்தில் யோவான் 1:1 சொல்லப்பட்ட “ஆதியில் இருந்த” நித்திய குமாரன் என்று சொல்லுகின்றனர். இயேசு இப்படி முன் இருந்தார் என்று இவர்கள் விசுவாசிக்கின்ற படியினால் அவர் மனிதனாக பூமிக்கு வருவதற்கு சொந்தத் தீர்மானத்தை எடுக்க முடிந்தது என்று கருதுகின்றனர். ஆனால் உண்மையாகவே ஆதாமிற்கு பூமிக்கு மனிதனாக வருவதற்கோ அல்லது ஆவியின் ரூபத்திலேயே இருப்பதற்கு முடிவெடுக்க முடியுமா?

நிச்சயமாக அது கிடையாது. தேவன் எல்லாவற்றையும்தம்முடைய சொந்த சித்தத்தின்படி தமது மகிமையினால் தமக்குள்ளாக தம்முடைய சொந்த விருப்பத்திற்காக தீர்மானித்தார். (எபேசியர் 1:19, வெளி 4:11).

தேவன், தம்முடைய சுய ஆலோசனையின் படி, அவருடைய வித்தானது அவர் முன் குறித்தது போல அவருடைய தீர்மானத்தை நிறைவேற்ற ஒரு மனித உருவை எடுப்பதற்கு முன் நியமித்திருந்தார். இது வார்த்தையின் ஆதியிலே தோன்றுவதற்கு முன்னமே சர்வ வல்லமையுள்ள தேவனுக்குள் தோன்றினதாக இருந்தது. இந்த பெரிதான நித்திய ஆவி யாருடைய அனுமதியையும் தேடவில்லை. அவரே திட்டமிட்டு, அவரே சிருஷ்டித்து “அவரே தமது சொந்த விருப்பத்தை தம்முடைய சொந்த சித்தத்தின் ஆலோசனையின்படி நிறைவேற்றுவதற்கு அவரே அனுப்பினார்”. (எபேசியர் 1:11).

**இயேசுகிறிஸ்துவேதேவனுடையசாராம்சத்தின்“தன்மையின் சொரூபமாயும் (எபிரேயர் 1:3) மற்றும் ஜீவ வார்த்தையாகவும் (1 யோவான் 1:1) இருந்தபடியினால் அவர் தேவனாக**

**ஆராதிக்கப்பட்டார்.** தேவ சாயலாய் இயேசு இருந்தபடியினால் பிதாவாகிய தேவனுக்கு சமமாய் இருந்தார். என்றாலும், அந்த அடையாளத்தை அல்லது அந்த ஸ்தானத்தை அவர் பாவமில்லாமல் மனித சாயலில் பிறந்தபடியினால் அதை விட்டுக்கொடுப்பதற்குத் தீர்மானித்தார். தேவனால் முன் தீர்மானிக்கப்பட்ட அவருடைய சிலுவையின் மேல் உண்டாகும். மரணத்தை நிறைவேற்ற அவர் தடங்களின்றி தம்மைத்தாம் தாழ்த்தவும் செய்தார். **மற்றும் ஜனங்களுடைய கவனம் முழுவதையும் ஜீவனின் ஆவிக்கும், நித்திய பிதாவினிடத்திற்குமே எப்பொழுதும் நேரடியாக திருப்பினார்.**

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே - (1 திமோத்தியு 2:5)

மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர் - (கலாத்தியர்-3:20)

ரோமர் 9:5ல் இயேசுவைப் பற்றி, பவுல் இப்படி எழுதுகிறார்.

பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின் படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென்.- (ரோமர் 9:5)

**இயேசு ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் இருந்தார்.** (அப்போஸ்தலர் 2:36) இதனால், எந்த விதமான சந்தேகமின்றி, **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனாகவும் மனிதனாகவும் இருந்தார் மற்றும் தேவனும் கிறிஸ்துவும் ஒன்று.** அது “ஆசிர்வதிக்கப்பட்ட திரித்துவமோ மூன்று நபருக்கு ஒரு தேவனோ அல்ல” ஆனால் ஒரு நபருக்குள் தேவன், ஆசிர்வதிக்கப்பட்ட ஒருமையாகும். இதனால், அப்போஸ்தலருக்குரிய வெளிப்பாட்டின் படி **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எடுக்கும் தண்ணீர் ஞானஸ்நானத்தை குறித்த சத்தியத்தை நிலை நாட்டினதைக் காண்கிறோம்.** பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று பட்டங்களின் (மத்தேயு 28:19) பெயர் (அப்போஸ்தலர் 2:38, 8:12,16, 10:48, 19:5).

## தேற்றரவாளன்

பரிசுத்த ஆவி என்பது கிறிஸ்துவுக்குள்ளாக வாசம் பண்ணுகிற ஆவி. தேவனும் கிறிஸ்துவும் ஒன்றாயிருக்கிறபடியால், அது இயேசு கிறிஸ்துவின் ஆவி என்றும் அழைக்கப்படுகின்றது. (பிலிப்பியர் 1-19) மற்றும் குமாரனின் ஆவி என்றும் சொல்லப்படுகின்றது. (கலாத்தியர் 4-6). இயேசுவின் இந்த வார்த்தைகளை கவனிக்கவும்.

நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய

ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன். (யோவான் 14:16-18)

"வேறொரு தேற்றரவாளன் அல்லது உதவியாளன் என்று இயேசு குறிப்பிடும்போது அவர் வேறொரு தேவனைப் பற்றி சொல்லாமல் கிறிஸ்து தாமே பரிசுத்த ஆவியாக வேறொரு ஊழியத்தைச் செய்வதற்கு வித்தியாசப்பட்ட ஒரு தன்மையில் வருகிறார். கிறிஸ்து ஆவியின் உருவத்திலே வருவதைக் குறித்து அவர் தாமே இப்படிச் சொல்லியுள்ளார். (யோவான் 14:17,18) அவர்களோடு கூட அவர் இருந்ததினாலே அவர்கள் அவரை அறிந்திருந்தார்கள். மற்றும், அவர் வாக்குத்தத்தம் பண்ணினபடியே பெந்தேகோஸ்தே நாளின்போது, பரிசுத்த ஆவியானவரின் உருவத்திலே இயேசு - அவரிடத்திலே வந்தார்.

அப்போஸ்தலன் யோவான் இயேசுவின் இந்தவார்த்தைகளைப் பதிவு செய்தவர்

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. (யோவான் 6-63)

யோவான் 20:22இல் இப்படி எழுதினார். அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.(யோவான் 20:22)

இந்த மேற்கோள்களின்படி ஒரு நபரையும் அவனுடைய சுவாசத்தையும் வித்தியாசப்படுத்திப் பார்க்க முடியாது என்று நிருபிக்கின்றன. அதை செய்ய முடிந்தால் மாத்திரமே இயேசுவும் பரிசுத்த ஆவியும் பிரிந்திருக்கின்ற வெவ்வேறான தனிப்பட்ட நபர்கள் என்பதை வெற்றிகரமாக நிரூபிக்க முடியும். ஆனால் அதை செய்ய முடியாது.

**கிறிஸ்து** (அந்த வார்த்தை) பிதா (நித்திய ஆவி) கிறிஸ்து **பிதாவினிடத்திலிருந்து** வந்தவர் மற்றும் அவருடைய பாவ நிவாரண பலியைசெலுத்தின பிறகு திரும்ப வேண்டியதாயிற்று (யோவான் -16 -28) ஆனால் அவர் வாக்குத்தத்தம் கொடுக்கும்போது உங்களை "திக்கற்றவர்களாகவிடேன். (கிரேக்க மொழியில்: அனாதைகள், திக்கற்றவர்கள், தகப்பனில்லாதவர்கள்) நான் உங்களிடத்திற்குத் திரும்ப வருவேன்".

அவருடைய எடுத்துக்கொள்ளப்படுதலுக்குப் பின்புபத்து நாட்களில் பெரிதான ஜீவ ஊற்றிலிருந்து அவர் எழும்பி பிதாவின் ஆவியாக தமது சபையின் ஒவ்வொரு நபருக்குள்ளும் வாசம் செய்ய வந்தார்

(காலத்தியர் 4: 6 வெளி 21:7). ஒரு நபராக இந்த உலகத்தில் பிறந்து பூமியிலிருக்கும்போது அவரால் இதைச் செய்ய முடியவில்லை. ஆனால் இப்பொழுது ஆவியின் வடிவத்தில் இவரால் செய்ய முடிந்தது (யோவான் -14:16-20) இப்படித்தான், இயேசு கிறிஸ்து என்னும் நபர், தேவனுடைய பரிசுத்த ஆவியின் உருவத்தில், அவருடைய வார்த்தையை விசுவாசிக்கின்ற பரிசுத்தவான்களுக்குள்ளாக வாசம் செய்கின்றார்.

நீங்களும்உங்கள்இரட்சிப்பின்சுவிசேஷமாகியசத்தியவசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். (எபேசியர் 1:13)

இந்த வார்த்தையின் மூலமாக பரிசுத்த ஆவி நமக்குள்ளாக வாசம் செய்கிறாரென்று பவுல் தெளிவாக குறிப்பிடுகிறார்: “கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே, அந்தமகிமையின் நம்பிக்கை.” (கொலோசெயர் 1-27,ரோமர் 8-9,11). ஆம், கிறிஸ்து நமது நிமித்தம் தரித்திரமானதினாலே நாம் ஐஸ்வரியமாக்கப் பட்டிருக்கிறோம்:

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும் படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. (II கொரி 8:9)

எனவே தேவனுடைய பரிசுத்தவான்களுக்குள்ளாக இரண்டோ, மூன்று தெய்வீக நபர்கள் வாசம் செய்வதில்லை.நாம் மற்றும் நம்முடைய என்கிற வார்த்தைகள் புதிய ஏற்பாட்டிலே, யோவான்-14-23ன் படி சர்வவல்லமையுள்ள **யாவேவாயிருக்கிற** தேவனையும் மற்றும் Yahshua மனிதனுக்குள் இரட்சகராய் எப்படி இருக்கிறார் என்கிற வித்தியாசத்தை பேசுகின்றது. யோவான் -12:45ல் **ஒரு நபருக்குள்** செயல்படுகிற இரண்டு அலுவலகங்களை பார்க்கின்றோம்- ”என்னை கண்டவன் என்னை அனுப்பினவரைக் காண்கின்றான்.” **கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கின்ற இரட்டிப்பான குணத்தை** கவனியுங்கள். அதாவது **சர்வ வல்லமையுள்ளவர், சர்வ ஞானி மற்றும் சர்வ வியாபியாய் இருக்கக் கூடியது பிதாவின் ஆவி மற்றும் குமாரனின் ஆவியாய் இருப்பது தாழ்மை, கீழ்படிதல், ஆசாரியத்துவம்,ஜெப நிறைவு, மற்றும் ஒப்புக்கொடுக்குதல் இவைகளெல்லாம் ஒரே ஆவியே.** (எபேசியர் 4:4, யோவான் 4:24).

## அல்பா மற்றும் ஒமேகா


அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை

ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினார் ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (I கொரி 15:24-28).

**இயேசு ஒருபொழுதும் தேவனுடைய நித்திய குமாரனாக இருந்ததில்லை. அவர் தேவனால் ஜெநிபிக்கப்பட்ட குமாரன்.** எனவே, **குமாரத்துவத்தின் ஊழியத்திற்கு ஆரம்பம்** இருந்தது போல அதற்கு முடிவும் இருக்கும். ஆயிர வருட அரசாட்சியிலே ராஜாதி ராஜாவாகத் தம்முடைய ஆளுகைக்குப் பிறகு, இயேசு கிறிஸ்து பூமியை பாவம் மற்றும் மரணம் என்கிற அடிச்சுவடுகளிலிருந்து சுத்திகரிக்கும்படிக்கும் மற்றும் கடைசி நியாயத் தீர்ப்பை தருவதற்குத் தமது பெரிதான வெள்ளை சிங்காசனத்திலே உட்காருவார். அதற்குப் பிறகு ஆதியிலே பிதாவே எல்லாவற்றிற்கும் **எல்லாவுமாய்** இருந்தது போல மீட்கப்பட்ட இராஜ்ஜியத்தைப் பிதாவுக்கே திரும்பக் கொடுப்பார். இயேசு கிறிஸ்து அதற்குப் பின் தேவ பிள்ளைகள் நிறைந்த குடும்பத்திற்குள் தலைமை தாங்கும்படி மூத்தவராயும் அநேக சகோதரர்க்குள்ளே முதற் பிறந்தவராயும் தன் ஸ்தானத்தை எடுத்துக் கொள்வார். இயேசு கிறிஸ்துவின் ஆளுகை இப்பொழுது நடைமுறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றதும் பிதாவினால் தன்னுடைய உரிமையாகக் கொடுக்கப்பட்ட சுதந்திரமாகிய **தலைமை அதிகாரம்** தேவத்துவத்தின் கீழாகக் கீழ்படுத்தப்பட்டிருக்கும். அப்பொழுது “தேவனே எல்லாவற்றிக்கும் எல்லாவுமாயிருப்பார்.”

வெளிபடுத்தின விசேஷம் - 1-8 ல், இருந்தவரும் இருக்கிறவரும், மற்றும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள (நித்தியம், உயர்வு, மற்றும் உயர்வானஆவி) கர்த்தர் சொல்கிறார். “நான் அல்பாவும், ஒமேகாவும் ஆரம்பமும் முடிவுமாயிருக்கிறேன்.” இந்த வசனம் நித்தியமாயிருக்கிறவர் ஆதியிலே தமது சொந்த சித்தத்தின் ஆலோசனையின்படி தீர்மானித்து நியமித்தபடி எப்படி, தம்முடைய சிருஷ்டிப்பின் திட்டத்தின் சம்மந்தப்பட்டதை ஒரு பரிபூரண முடிவுக்கு அவர் எப்படி கொண்டு வருகின்றார் என்பதைப் பேசுகின்றது. மற்றும் “ஆரம்பமும் முடிவுமாய்” சமயம் அல்லதுகாலம் தேவனுடைய நித்திய வட்டத்திற்குள்ளும், அந்த நித்திய ஆவிக்குள்ளும் ஈர்த்து கொள்ளப்படும்போது, அங்கே நித்தியம் மாத்திரம் இருக்கும்.

**சபைகளின் பாரம்பரியங்கள் இப்படி சொல்கின்றன;**











<u>தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது:</u>

நீங்கள் அறியாததைக் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவா;கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

தேவன் ஒளியாயிருக்கிறார் (வெளிப்பாடு, சத்தியம்), அவரில் எவ்வளவேனும் இருள் (பாரம்பரியம், பொய்) இல்லை.

கறையில்லாத வார்த்தை வித்தினால் உண்டாகும் ஆவிக்குரிய மறுபிறப்பு.



# பின்னிணைப்பு

## திரித்துவத்தின் உபதேசம்

திரித்துவத்தின் உபதேசம் (3-in-1 God) "விளக்க கொடுப்பதற்கு மேற்பட்ட ஒரு கோட்பாடாகவும் இரகசியமாகவும் இருக்கிறது." என்று ஆர்வம் நிறைந்த போதகர்களால் அங்கீகாரம் பெற்று விளக்கப்பட்டதாய் இருக்கிறது. அதை உண்மையாகப் பார்ப்போமானால், அது குழப்பத்தைத் தவிர வேறொன்றுமில்லை. நிம்ரோதையும் அவனுடைய மனைவியையும் ஆராதித்து வந்த இந்த போதனைகளும் வழக்கங்களும் (ஆதியாகமம் 10:8-12) பின் காலங்களிலே ரோமா பாகால் சமயக் கோட்பாட்டு முறைக்குள் நுழைந்தது அதன் சுவடுகள் போப்பின் ஆராதனை முறைக்குள் இருப்பதை அலெக்ஸண்டர் ஹிஸ்லோப் தமது புத்தகமாகிய "இரண்டு பாபிலோன்ஸ்" (The Two Babylons) ல் நிரூபிக்கின்றார்.

பழங்கால பாகால் ஆராதனையுடன் ரோமன் கத்தோலிஸமைஅலெக்ஸண்டர் ஹிஸ்லோப் தம்முடைய முதல் பாடத்தில் "டிரினிடிஇன் யூனிட்டி (திரித்துவத்தில் ஒருமைத்துவம்) என்பதை பயன்படுத்துகிறார் பல்வேறு விதமான அதிகாரப் பூர்வமான ஆதரங்கள் மூலம்அவர் மேற்கோள்களைப் பார்க்கும்போது திரித்துவம் என்பது ஒரு பழங்காலத்துக் கருத்தாக இருக்கின்றன. "பாபிலோனியர்களுடைய ஒருமைப்பாட்டிற்குள்அடங்கியஅந்தஒ ரே ஒரு தேவனுக்குள், மூன்று நபர்கள் இருந்தனர்... மற்றும் நன்றாக அறிந்தபடி ரோம சபை இன்று செய்வதுபோல அவர்கள் சமபக்க முக்கோணத்திற்குள் இடம் பெற்றிருந்தனர் (பக்கம் 16) "போப்பின் அலுவலகத்துக்குள் இருக்கின்ற துறவிகளுக்கான மடலாயத்திற்குள் "மாட்ரிட் (Madrid) திரியேகத்துவர்கள்" என்று அழைக்கப்படுகின்ற, திரியேக தேவன் ஒரு சரீரத்தில் மூன்று தலைகள் இருப்பது போல் உருவம் அங்கே உள்ளது" (பக்கம் 17). அதுபோலமூன்று தலையுள்ள தேவர்கள் இந்தியாவில் பழங்காலத்து மிக உயர்ந்த கடவுளிலும் மற்றும் ஜப்பானின் புத்தாவிலும் (பக்கம் 17,18) காணலாம். அகிலஉலக தேசங்கள் முழுவதிலும் திரித்துவம் அங்கீகாரம் பெற்றாதாயிருந்தது. பழைய ஏற்பாட்டு காலத்திலே பாகால் தெய்வங்கள் அல்லது விக்கிரங்களை தொடர்ச்சியாய் தேவன் வெறுத்து வந்ததே அந்தக் கருப்பொருளின் முக்கிய பங்காக இருக்கிறது. இஸ்ரவேல் தேவன்

தம்மை ஒரு பொழுதும் பாகால் அருவெறுப்புக்களுக்குள் பொருத்தினது இல்லை.

இரண்டு நன்றாக அறியப்பட்ட திரியேகத்துவ போதகர்கள் திரித்துவத்தை பற்றின போதகங்கள் இப்படி கீழே கூறப்பட்டுள்ளது. அதை ஆங்கிலத்திலே இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது,

“What we mean by Divine Trinity is that there are three separate and distinct persons in the Godhead, each one having his own personal spirit body, personal soul and personal spirit in the same sense each human being, angel or any other being has his own body, soul and spirit. We mean by body, whether a spirit body or a fleshbody, the house for the indwelling of the personal soul and spirit. The soul is that which feels and the spirit is that which knows.” (Finis J.Dake, Dake’s Annotated Reference Bible)

Keith L.Brooks says,“If the doctrine of the Trinity is not accepted,then Christ is not divine and the character of His redemptive work isreduced to nothing. If there is a Trinity...and worship is not accorded to Jesus and the Holy Spirit, then proper adoration is being withheld from two-thirds of the Godhead.” (Quotate from “our Daily Bread”. July 8. 1971)

தங்களுடைய சொந்த அறிவிலே ஞானவான்களாக இருக்கின்ற மனிதர்களின் வார்த்தைகளாய் இருக்கிறது. அவர்கள் தாமே தங்களுடைய அறியாமையையும் மூடத்தனத்தையுமே வெளிப்படுத்தி தங்களைத் தாங்களே மூடர்கள் ஆக்கிக் கொள்கிறார்.

**இயேசுகிறிஸ்து தேவத்துவத்தில் வெறும் மூன்றில் ஒரு பங்கு மாத்திரமே இருக்கிறவராக இருக்கிறாரா?** I தீமோத்தேயு 3:16 மற்றும் கொலோசெயர் 2:9 **தெளிவாக தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டதாகச் சொல்லுகின்றது**. மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சரீரத்தின்படி தேவத்துவத்தின் பரிபூரணமாக இருந்தார். எளிமையாகச் சொல்லுவோமானால் **ஒரு தேவன் இயேசு கிறிஸ்து என்னும், ஒரு நபருக்குள் இருந்தார்**.

திரித்துவக்காரர்கள் ஒரே சர்வ வல்லமையுள்ளவரிலிருந்து மூன்று சரிசமமானபாகமாகமூன்றுகடவுள்களைஉருவாக்கதேவனைஅவர்கள் வெட்டும்போது அவர்கள் கசாப்புக்காரர்கள் ஆகிவிட்டனர். வேதத்தில் எந்த ஒரு இடத்தில் தேவனைத் திரித்துவமாகவோ அல்லது திரியேக தெய்வமாகவோ பார்க்க எந்த ஒரு மறைமுக குறிப்புகளும் இல்லை. இருந்தாலும் திரியேகத்துவர்கள் ஆனாலும், திரியேகத்துவர்கள் ஏறக்குறைய 80 வசனக் குறிப்புகளை திரித்துவம் இருக்கின்றது என்பதை காட்டுவதற்கு மேற்கோள்களைக் காட்டுகின்றனர்.

இந்த திரித்துவ உபதேசமானது கடைசி அப்போஸ்தலன் யோவான் மரணத்திற்கு கொஞ்ச காலத்திற்குப் பிறகு இரண்டாம் நூற்றாண்டிலே பரப்பப்பட்டது. தேவத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு அநேக பெரிதான வேதப்பண்டிதர்கள் முயன்றனர். அவர்களில் இக்னேசியஸ்

பாலிகார்ப், ஜஸ்டின்மர்டயர், இரேனியஸ், கிளமென்ஸ் மற்றும் சில மனிதர்

Let’s see how Justin got it right and then got into error and confusion.

“He (Justin) has great difficulty in expressing this point of view.

He had, it is true, the precedents of Philo and even of St.John; for in St.John the Logos or Reason or Word is the power by which God madethe world, and also the light that illuminates every man who comes into the world, if that is the correct translation;but Justin attempted todefine the matter most precisely.The divine Reason is a second God.He is “a second God in number, but not in mind”; that is to say, “he is a second God and he is not a second God”. (Dictionary of Christian Biography)

Now, see if you can understand this:

“Some said that there was but one substance in the Godhead, others three. Some allowed, some rejected the terms... according as they were guided by the prevailing heresy of the day and their own judgement concerning the mode of meeting it... Some declare that God is numerically three; others numerically one; while to others it might appear more philosophical to exclude the idea of number altogether in the discussion of that mysterious Nature which is beyond comparison, whether viewed as One or Three, and neither falls under nor forms any conceiuable species.” (The Arian of the 4th Century)

அனேக நூற்றாண்டுகளுக்கு, திரித்துவத்தின் உபதேசம் அனேக புராட்டஸ்டண்ட், இவாண்சிலிகல் மற்றும் கத்தோலிக்க சபைகளின் பிரதான உபதேசமாய் இருக்கிறது, என்றாலும் இந்த உபதேசம் “ஒரு முறை பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட” (யூதா 3) விசுவாசத்தின் பங்காக இருக்கவில்லை. கத்தோலிக் என்சைக்ளோபிடியா இப்படி சொல்கிறது.

இந்த சபை போதிக்கின்ற திரித்துவம், அது தேவனுடைய சுபாவத்திற்குரிய (திரியேகத்திற்குரிய குணாதிசயங்கள்) வெளிப்பாடாய்இருக்கின்றது. இதை தேவக்குமாரான இயேசு கிறிஸ்து உலகத்திற்குக் கொடுக்கும்படி பூமியின்மேல் வந்தார். “மற்றும் இவள் (கத்தோலிக் சபை) இந்த முழு அஸ்வதிவாரமான கொள்கை பிடிவாதமான அமைப்பைப் மனிதனுக்கு முன் மொழிகிறாள்”.

எனவே ரோமன் கத்தோலிக் சபையானது அந்தத் திரித்துவத்தை அஸ்திவார உபதேசமாகக் கருதி அந்த முழு கொள்கை பிடிவாதமான அமைப்பை பரப்பி வந்தாள் என்பதைப் பார்க்க முடிகிறது. மற்றும் நான்காம் நூற்றாண்டின் கடைசி 25 வருடங்களில் “அவர்கள் நிச்சயித்த திரியேகத்துவமாகிய “ஒரு தேவன் மூன்று நபர்களுக்குள்ளாக” என்பது முற்றிலுமாக கிறிஸ்து ஜீவியத்திலும் சிந்தைக்குள்ளும் முழுமையாக

ஒன்றிப் போனது." (பரிசுத்தத்திரித்துவம் - புதிய கத்தோலிக் என்சைக்ளோபிடியா) திரித்துவத்தின் நம்பிக்கை இங்கே எப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கிறது.

"We cannot doubt the existence amoung the Orthodox Fathers of different opinions on this mysterious subject until its final definition by the Church". (Dictionary of Doctrines & History Theology)

அதற்குப் பிறகு தேவத்துவத்தின் உபதேசத்திற்கு ஒரு கடைசி விளக்க உரை கிடைத்தது - ஒரு தேவனின் மூன்று நபர் என்னும் ஒரு புதுமை கி.பி. 325 ஏறக்குறைய கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து போய் 300 வருடங்களுக்குப் பிறகு இப்படி ஆனது! பாகால் ரோமா இது போன்ற உபதேசத்தைப் பரப்புவதற்கு காரணமானார்கள்! அது ஒரு பாகால் உபதேசமாயிருந்து ஒரு பாகால் சபையால் ஆரம்பிக்கப்பட்டது! "இந்த திரித்துவத்தை" கி.பி.325ல் நிசாயாவின் ஆலோசனையின் கீழாக நிசாயா கோட்பாடாக ஸ்தாபிக்கப்பட்டது. அப்போஸ்தலர் கோட்பாடு என்று சொல்லப்படக் கூடியதும் ஆனால் அப்போஸ்தலர்களால் எழுதப்படாததுமாய் இருக்கிற, தேவத்துவத்தை திரித்துவம் என்று அது சொல்லாதததாயிருக்கிறது. (100-150 கி.பி) ஏற்கனவே பார்த்தது போல, உடனடியாகவும் நேரடியாகவும் அது தேவனுடைய வார்த்தை அல்ல (நியு கத்தோலிக் என்சைக்ளோபிடியா – - New Cath Ency) மெய்யாகவே தேவனுடைய வார்த்தைக்குள் கண்டு பிடிக்க முடியாததாய் இருக்கிறது.

அது முதல், இந்தக் கோட்பாடு கிறிஸ்துவ வாழ்க்கையிலும், சிந்தையிலும் முழுமையாக இணைந்துள்ளது. அநேக கிறிஸ்துவர்கள் இன்றைய காலக் கட்டத்திலே இந்த தேவத்துவத்தின் தவறான உபதேசத்தை வெளியேற்றுவதற்கு கடினமாக இருக்கிறது. அவர்கள் சபை அமைப்பின் மூலமாக அதை ஒரு இரகசியமாக ஏற்றுக் கொள்வதற்கு போதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது நிச்சயமாகவே, சபை அமைப்பினால் உருவாக்கப்பட்டதினாலே ஒரு இரகசியம் தான்.

"A fruitful cause of error in ancient and also modern times is owing to an attempt to explain or illustrate this doctrine, forgetting that it is a MYSTERY to be received on faith, which CANNOT, from its own nature, be rendered intelligible to man's intellect." ("Trinity" – Dict. of Doct. & Hist. Theo)

ஒரு உண்மையான கிறிஸ்தவன் இல்லாத ஏதோ ஒன்றை, விசுவாசத்தினாலே நம்பமுடியுமா?

திரித்துவம் எப்போதும் இரகசியமாகவே இருந்துள்ளது. மற்றும் அதை யாரும்புரிந்து கொள்ளக் கடினமாயும் சர்ச்சை நிறைந்ததுமாய் இருக்கிறது. இதை புரிந்து கொள்வதற்கு எடுத்த எல்லா விதமான புலமை சார்ந்த முயற்சிகள் எல்லாம் இன்னமும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது! அதைத் தெளிவுபடுத்துவதற்கு எல்லா இறைமை

நூல் சார்ந்த முயற்சிகள் எல்லாம் இன்னும் அதிக குழப்பத்தைக் கொடுத்தது.

ஏன்?


எளிமையாக சொல்வோமானால் அது மனிதனால் உண்டாகப்பட்ட கட்டுக்கதை! எல்லா வேதப்பண்டிதர்களும் வேதத்தில் திரித்துவத்திற்குரிய எந்த ஒரு குறிப்பும் இல்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். அவர்கள் சொல்வது போல இது ஒரு வஞ்சனையோடு உள் நுழைக்கப்பட்டது. சாதாரண வசனங்களை தெளிவடையாத வசனங்களோடு ஒப்பிட்டுவது பழங்காலத்து மூடத்தனமான பழக்கமாக இருக்கிறது.

அவர்கள் ஏன் இந்த பிரச்சனைக்கு அதிக அறிவானதும் புலன்களால் உணரக்கூடிய ஒரு அணுகுமுறையை தெரிந்தெடுக்கக் கூடாது? அதாவது, சாதாரண வசனங்களைப் புரிந்து கொள்வதற்கு தெளிவான வசனங்களை எடுத்து கூர்ந்து அலசி ஆராய்ந்து பார்க்கலாம் அல்லவா?

ஓ, போராடிக்கொண்டிருக்கிற வேத விசுவாசிகளுக்கு பரிசுத்தாவியானவரின் வழி நடத்துதல் எப்படியாக அது அவசியப்படுகின்றது. அவர்கள் மாமிச மனிதர்களின் வெறும் வார்த்தைகளினால் உண்டாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கும் தேவனுடைய தெய்வீக சத்தியத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் காண்பிக்கும்படி உதவுவாராக.

***

திரியேக ஒற்றுமையின்...



...பழங்காலத்து அசீரியாவில் ஆராதிக்கப்பட்ட விதம்



...சைபீரிய பாகான் ஆராதனையில் இருக்கின்ற முறைமையின் குறியீடு

காண்ஸ்டன்டைனின் ஆளுகையின்போது கிறிஸ்தவம் ரோம ராஜ்ஜியத்திலே தேசாந்திர மதமாக அறிவிக்கப்பட்டது. இதை முன்னிட்டு, பொது ஜனங்கள் தத்துவ சாஸ்திரிகளுக்காக ஒதுக்கிடப்பட்ட இது போன்ற வேத வேதாந்த சாஸ்திர பாடத்தை பகிரங்கமாக விவாதிக்க தொடங்கினார். (பிளட்டோவின் வேத வேதாந்த சாஸ்திரம் யோவான் 1:1 பற்றினதும்) மற்றும் பிளாட்டோ யோவான் 1:1 மற்றும் வேத பாரிசுத்தங்களைக் குறித்து கொடுத்த விளக்க உரைகள், லோகோஸ் என்பது அந்த பொருளைக் குறித்து பெரிய வாக்குவாதத்தைப் பிறப்பித்தது.

ஆரியஸ் என்கிற அலக்ஸான்ரியாவை சார்ந்த ஒரு மூப்பரும் அரியேனிசம் என்ற அமைப்பின் தலைவன் - இயேசு சர்வத்திற்கு முதல் சிருஷ்டி என்றும் சர்வ வல்லமையுள்ளவருக்கு ஒரு பங்கு குறைவாக 'இரண்டாம் தேவனாக உருவாக்கப்பட்டார்; என்று போதித்தான். அவர் திரியேகத்துவத்தின் கோட்பாட்டிற்கு எதிராக இயேசு பிதாவாகிய தேவனுக்கு சரிசமமாகவோ ஓப்பனையாகவோ அல்லவென்று போதித்தார்.

இந்த அரியனிசத்தைத் தள்ளிவிடுவதற்காகவும் தேவத்துவத்தை சபையானது திரித்துவ உபதேசத்தின் மூலமாக ஏற்றுக்கொள்வதற்காகவும் 325 கி.பி யில் நிசாயா மாநாட்டில் இந்த நிசாயா கோட்பாடு முறைப்படுத்திக் கூறப்பட்டது. ஆகிலும், தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாட்டைக் கொண்டு இந்த இரண்டு உபதேசங்களிலும் உண்மை ஒரு சிறு பங்காக இருந்தாலும் கணக்கற்ற பிளவுகளால் நிரப்பபட்டுள்ளது.

பின் நாட்களிலே அலக்ஸாண்ரியாவிற்கு பிஷப்பாக கூடியவனாக இருந்த அத்தனேசியன் என்கிற மூப்பன் ஆரியஸிற்கு விரோதமாக இந்த உபதேச யுத்தத்தை எழுப்பினான். ஆத்தனேசியா கோட்பாடு பொது ஜெபம் என்ற புத்தகத்தில் காணப்படுகின்றது. அதிலே சபையானது அனேக தேவர்களின் நம்பிக்கையில் திட்டமாக நிற்கிறது என்று கூறியுள்ளது.

## இதுதான் திரித்துவம் - உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? - நீங்கள் திரித்துவவாதியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினால்! - இதைத்தான் நீங்கள் பாதுகாக்கிறீர்கள்

### தி அதானாசியன் கோட்பாடு

கத்தோலிக்க, புராட்டஸ்டன்ட் மற்றும் பெந்தேகோஸ்தே தேவாலயங்களால் அங்கீகரிக்கப்பட்ட திரித்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு.

ஒரு திரித்துவவாதியாக இருப்பதில் கத்தோலிக்க, புராட்டஸ்டன்ட் மற்றும் பெந்தேகோஸ்தே தேவாலயங்களால் அங்கீகரிக்கப்பட்ட திருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு - அதானாசியன் கோட்பாடு. நியூ ஷாஃப் ஹெர்சாக் என்சைக்ளோபீடியா ஆஃப் ரிலிஜியஸ் நாலெட்ஜ் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. XI பக். 202, தி கார்டியன், லண்டன், 10/11/1909 இல் இருந்து மேற்கோள் காட்டப்பட்டது, இது 1908 ஆம் ஆண்டின் லாம்பெத் மாநாட்டின் தீர்மானத்தின்படி கேன்டர்பரி பேராயரின் வேண்டுகோளின் பேரில் செய்யப்பட்ட அத்தனாசிய நம்பிக்கையின் திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பை வழங்கியது.

.....

3 இப்போது கத்தோலிக்க நம்பிக்கை இதுதான்: நாம் ஒரே தேவனை திரித்துவமாக வணங்குகிறோம்; மற்றும் திரித்துவம் ஒரு ஒற்றுமை.
4. நபர்களைக் குழப்புவதும், பொருளைப் பிரிப்பதும் இல்லை.
5. பிதாவின் நபர் ஒருவர், குமாரனில் மற்றொருவர், பரிசுத்த ஆவியானவர் மற்றொருவர்.
6. ஆனால் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் தேவத்துவம் ஒன்றே, அவர்களுடைய மகிமை சமமானது, அவர்களுடைய மகத்துவம் நித்தியமானது.
7. பிதா எப்படி இருக்கிறாரோ, அப்படிப்பட்டவர் குமாரனும், அப்படிப்பட்டவர் பரிசுத்த ஆவியும்.
8. பிதா சிருஷ்டிக்கப்படவில்லை, குமாரன் உருவாக்கப்படவில்லை, பரிசுத்த ஆவியானவர் படைக்கப்படவில்லை.
9. தந்தை எல்லையற்றவர், குமாரன் எல்லையற்றவர், பரிசுத்த ஆவியானவர் எல்லையற்றவர்.
10. பிதா நித்தியமானவர், குமாரன் நித்தியமானவர், பரிசுத்த ஆவியானவர் நித்தியமானவர்.
11. இன்னும் அவர்கள் மூன்று நித்தியமானவர்கள் அல்ல, ஆனால் ஒரே நித்தியமானவர்கள்.
12. மேலும் அவை மூன்று உருவாக்கப்படாதவை அல்ல, மூன்று எல்லையற்றவை அல்ல, ஆனால் ஒன்று எல்லையற்றவை, மற்றும் ஒன்று உருவாக்கப்படாதவை.
13. அப்படியே பிதா சர்வவல்லமையுள்ளவர், குமாரன் சர்வவல்லமையுள்ளவர், பரிசுத்த ஆவியானவர் சர்வவல்லமையுள்ளவர்.
14. இன்னும் அவர்கள் மூன்று சர்வவல்லவர்கள் அல்ல ஆனால் ஒரு சர்வவல்லவர்.
15. எனவே தந்தை தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவி தேவன்.
16. இன்னும் அவர்கள் மூன்று தேவர்கள், அல்ல ஆனால் ஒரே தேவன்.
17. எனவே பிதா கர்த்தர், குமாரன் கர்த்தர், பரிசுத்த ஆவியும் கர்த்தர்.
18. இன்னும் அவர்கள் மூன்று கர்த்தர்கள் அல்ல ஆனால் ஒரே கர்த்தர்.
19. கிருஸ்துவர் உண்மையால் நாம் ஒவ்வொரு நபரையும் தேவன் மற்றும் தேவன் என்று ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்
20. எனவே கத்தோலிக்க மதத்தால் மூன்று கர்த்தர்கள் அல்ல, அல்லது மூன்று தேவர்களை பற்றி பேசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
21. பிதா எவராலும் உண்டானவர் அல்ல, உண்டாக்கப்படவில்லை, அல்லது பிறக்கவில்லை.
22. குமாரன் பிதாவுடையவர் மாத்திரம், உண்டாக்கப்படவில்ல, சிருஷ்டிக்கப்படவில்லை ஆனால் பிறப்பிக்கப்பட்டவர்
23. பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனுடையவர், உண்டாக்கப்படவில்லை, சிருஷ்டிக்கப்படவும் இல்லை, பிறக்கவும் இல்லை ஆனால் தொடர்கிறார்.
24. ஆதலால் ஒரு பிதா, மூன்று பிதாக்கள் அல்ல, ஒரு குமாரன், மூன்று குமாரர்கள் அல்ல; ஒரு பரிசுத்த ஆவி, மூன்று பரிசுத்த ஆவிகள் அல்ல.
25. மேலும் திரித்துவத்தில் முன்னும் பின்னும் இல்லை, ஒன்றும் பெரிதாகவோ அல்லது குறைவாகவோ இல்லை.
26. ஆனால் மூன்று நபர்களும் ஒருவரோடு ஒருவர் நித்தியமானவர்கள் மற்றும் இணை சமமானவர்கள்.
27. எனவே எல்லா வழிகளிலும் மேலே கூறியது போல திரித்துவத்தை ஒருமையாகவும் அந்த ஒருமையைதிரித்துவமாகவும் வணங்க வேண்டும்.
28. ஆகையால் இரட்சிக்கப்படுகிறவன் திரித்துவத்தைப் பற்றி இப்படி நினைக்கட்டும்.

**இப்போது - நீங்கள் இன்னமும் திரித்துவத்தை நம்புகிறீர்களா?**

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை (பாரம்பரியம் இல்லை) இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது – 1யோ 1:5.

**இந்த புஸ்தகம் முக்கியமான உபதேசமாகிய தேவத்துவத்தின் இரகசியத்தை குறித்து மெய்யான வெளிப்பாட்டைக் கொடுக்கின்றது.**

## எச்சரிப்பு

இந்த புஸ்தகம் உங்கள் சபையில் இருக்கும் பாரம்பரிய போதனைகளிலிருந்து உங்களைக் திருப்பி ஒருவிசை பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்டு விசுவாசத்திற்கு போராடும்படி உங்களை அசைக்கும்.

மொழிபெயர்ப்பாளர் : **பாஸ்டர் ஷாத்ராக் K.ஜோசப்**

இந்தப் புத்தகத்தை நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**பாஸ்டர் ஷாத்ராக் K. ஜோசப்**
**ரேமா ஜீவ ஊழியம்,**
ஷாலோம் வீதி, செந்தமிழ்நகர்,
சுகுணாபுரம் கிழக்கு, குனியமுத்தூர், கோவை – 641008
தமிழ்நாடு, இந்தியா. செல் : +91-7402261037
இமெயில் : meetshadrachinholycity@gmail.com
முகநூல் பக்கம் : https://www.facebook.com/RLMCBE
வலைப்பதிவு : https://rhemalifeministrycbe.blogspot.com

கழுகு அலறும்...

...புறா வழிகாட்டும்

**ப்ரபட்டிக் ரெவலேஷன்**
கிம் மோ எஸ்டேட் போஸ்ட், தபால் பெட்டி எண்.333
ரிப்பப்ளிக் ஆப் சிங்கப்பூர் - 912742